திராவிடன்

ஆசிரியர்: என். வி. நடராசன்

ஓலை : 8 20-5-55 வெள்ளி 14 பக்கம் விலை 3 அணா மலர் : 41

தாராபுரம் வட்ட தி. மு. கழகம்

கன்னிவாடியில்

கே. எஸ். எஸ். கலா மன்றத்தார்

நடிக்கும்

தூக்குமேடை

நாடகம் 30-5-55 இரவு 9-30 மணிக்கு கன்னிவாடி அழகிரி திடலில் தோழர் சி. பி. சிற்றரசு தலைமையில் நடைபெறும்.

கே. என். முத்துச்சாமி, எஸ். வி. சக்கரை, கே. டி. சரோஜா, கே. டி. ஜானகி, மற்றும் கழகத் தோழர்கள் பலர் நடிக்கிறார்கள்.

கன்னிவாடி கே. எஸ். எஸ்.
பொறுப்பாளர்

அறிஞர் அண்ணா

திராவிட நாட்டின் மாலுமி

"அண்ணாதுரை யென்னும் அண்ணல் தமிழ்நாட்டு
வண்ணன் அழுக்கெடுப்பில் வாய் மொழியில்—
[பண்ணுவன்
சிற்பனெழுத் தோவியத்தில் செவ்வரசு நாவாயின்
அற்புதஞ் சூழ்மாலுமி யென்றுடு."

என்ற அழகு வெண்பா எதிலுள்ளது, யாருடையது என்பதெல்லாம் உங்களுக்குத் தெரிந்திருக்கும்.

தோழர் 'சீனு'வும், நானும் ஓர் நாள் மாலைப் போழ்தில் தமிழ்த் தென்றலை நாடிச் சென்றோம், தென்றலின் எளிமையையும், குளிர்மையையும், அன்பையும், கனிவையுங் கண்டு மெய்சிலிர்த்தே போனோம்!

தென்றலின் கண்ணொளி மங்கித் தத்தளித்திடும் நிலையைக் கண்டு கண்கலங்கி விட்டோம். எங்களைத் தொட்டுப் பார்த்து, இன்முகங் காட்டி, இளைஞர்களென்றால் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி என்று கூறியவாறே எங்களை உட்கார வைத்தார். தென்றலின் அத்தகைய கனிவு நிறைந்த வரவேற்புக்கு நாங்கள் அருகதை உடையவர்கள்தானா! படித்த மேதாவிகளா! பன்மொழிப் புலவர்களா! அல்லது அரசியல்வாதிகள்தானா! என்று 'சீனு'வும் நானும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டோம்!

எப்படிப் பேச்சைத் துவக்குவதென்று தெரியாமல் தென்றலின் உடல் நலத்தை வினவினோம்.

வாழ்நாள் முழுமையும் எந்தெந்தத் துறையிலேயோ புகுந்து, பாடுபட்டு, வாழ்ந்து வந்துவிட்டேன். இனி முதுமைப் பருவம்தானே. ஆகவே எனது உடல் நலம் இப்படித்தானிருக்கும். கவலைப்பட்டுப் பயனில்லை என்று கூறினார்.

உடல் நலத்தைப்பற்றிப் பேசியதும் அவரது சிந்தனைகள் எங்கெங்கோ பாய்ந்ததாக உணர்ந்தோம்.

பிளாரன்ஸ் நைட்டிங்கேல் அம்மையாரைப் பற்றிப் பேசினார். மனிதனுக்கு மனிதன் உயிர் கொடுத்து ஒத்துழைக்கும் பண்புதான் மனிதப் பண்பு. அப்பண்பு கிருத்துவர்களிடம் மிகைபடக் காணலாம். எனவே என்வாழ்நாளில் இயேசுவை மறந்ததே இல்லை. காந்தியும் ஒரு சிறந்த 'கர்மயோகி' என்பதால்தான் அவரிடம் எனக்குப்பற்று என்று கூறிவிட்டு ஒரு 'குஷ்டரோக' மருத்துவ நிலையத்தில் தான் கண்டு வியந்த ஓர் காட்சியை கூறலானார்.

ஓர் வாய்ப்பின் பேரில் குஷ்டரோக மருத்துவ நிலையமொன்றினுள் நுழைந்தேன். புழுத்தக் குஷ்டரோகி! சீழும், இரத்தமும் வடிந்து விழுகிறது! காணவே நமக்கெல்லாம் கண் கூசுகின்றது. பார்க்கவோ சகிக்க முடியவில்லை! ஆனால் ஒரு பணிப்பெண்! 'நர்ஸ்' கிருத்துவப் பெண்மணியா என்று கேட்டேன்! இம் மருத்துவ நிலையமே கிருத்துவப் பாதிரிமார்கள் நடத்துவது! அதிலே பணி செய்யும் அத்தனைபேரும் கிருத்துவர்களே என்ற பதில் கிடைத்தது. அப்பெண் சீழ் வடியும் குஷ்டரோகியின் கையைப் பிடித்துச் சீழைத்துடைத்து நன்றாகச் சுத்தஞ் செய்து கட்டுக் கட்டுவதைப் பார்த்து நின்றவன் நின்றவனே!

கிருத்துவப் பெண்மணியின் கருணைச் செயலில் உள்ளத்தைப் பறிகொடுத்துவிட்டே நின்றேன்.

அப்பெண் சினமும், அருவருப்பும்

துடைக்கும்போது முகம் சுளித்தாளா! சுளித்து நெளித்தாளா! சகித்துக் கொண்டுச் செய்வதாகத் தான் தோற்றமுற்றாளா! அல்லவே அல்ல! மனமுவந்து, குஷ்டரோகியை பரிவுடன் நோக்கி, அன்பு வார்த்தைகள் பேசி, சிரித்த முகத்தோடு கட்டுக் கட்டினாள். அத்தகையப் பண்பு அவளுக்கு எங்கிருந்து வந்தது. யாரால் உண்டாயிற்று. இயேசுவின் நற்போதனைகளாலும் நற்செய்கைகளாலும், அவைகளின் பொருட்டு அவர் அனுபவித்த இன்னல்களாலும், மக்கள் நலம் விழைந்து சிலுவையில் அறையப்பட்டாரே, அந்தக் கருணைக் கடல் இயேசுவினாலன்றோ! என்று எங்களையும் கேட்டார்.

ஆம்! ஆம்!! என்றோம்.

தொடர்ந்து சொன்னார்; பணிவிடை செய்வதில் ஆண்களைவிடப் பெண்களே சிறந்தவர்களெனப் பெருமை கொண்டாடினார்.

பெண்ணின் பெருமையின் பிதா தமிழ்த் தென்றலல்லவா! என்று நினைத்து மகிழ்ந்தோம்.

பெண்ணைப் பற்றிக் கூறி வரும்போது 'குறளில் காமத்துப்பால் கூடாது' என்று சிலர் பிதற்றுகிறார்கள். அவர்களுக்கெல்லாம் குறளைப்பற்றி என்ன தெரியும்! காமத்துப்பால் வேண்டாமென்றால் உலகமே இல்லை என்பதாகாதா? அப்படிக் கூறுபவர்கள் எங்கிருந்து வந்தார்கள்? அவரவர் அன்னை வயிற்றிலிருந்தல்லாது ஆகாயத்திலிருந்தா குதித்து விட்டார்கள்? அத்தகையோரின் அறியாமையைக் கேட்டு வருந்துகிறேன் என்றார்.

அதுபோது கல்வி மந்திரியாயிருந்த 'விவேகானந்தரின் சிஷ்யரான' 'பிரம்மச்சாரி' ஒருவரும் அவ்வாறு கூறினார் என்று கேட்டு பதறியே பேசினார். அது தனித்தப்பேச்சு ஆதலால் விரிக்காது விடுவோம்.

அப்பேச்சுகளுக்கு அப்புறந்தான் ஏதோ நினைவிற்கு வந்தவர் போல் சரி! நான் எவ்வளவோ நேரம் பேசிவிட்டேன். இளைஞர்களிடம் பேசுவதென்றால் எனக்கு நேரம் போவதே தெரிவதில்லை. பாபம்! எதற்கு என்னிடம் வந்தீர்களோ! அதைக் கேட்கவும் மறந்து நான் பேசிக் கொண்டே இருக்கிறேன். உங்கள் காரியம் யாது! என்று கேட்டுவிட்டார்.

மெதுவாக பேசஆரம்பித்தோம். அண்ணாதுரை அவர்களைப்பற்றித் தொகுப்பு நூலொன்று தயாரிக்க முற்பட்டோம். தங்களது எழுத்தோவியமும் அதில் தலையாயத் திகழ வேண்டுமென்பது எங்களது அவா! அருள்கூர்ந்து எங்கள் வேண்டுகோளைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டோம்.

அண்ணாதுரை! நன்கு படித்தவர்! அறிவைப் பயன் படுத்துபவர்! பெரியார் என்னைப்போல் முதுமை கொண்டவர். அண்ணாதுரை வாலிபர். அவர் தமிழ் நாட்டு மாலுமி! என்று கூறி எழுதிக் கொள்ளுங்கள் என்றார்.

என்ன அவ்வளவுதானா என்று சந்தேகத்தோடு இருந்தோம்.

சொல்லட்டுமா! என்றார்—அவ்வளவுதான்—தலைப்பில் உள்ள வெண்பாவைப் படியுங்கள்—அவ்வளவு நேரத்தில் கூறி முடித்தார்—எழுதியும் எடுத்துக் கொண்டோம்.

வெண்பா என்றால் அவருக்கு வெண்பொங்கல் சுவைப்பது போல என்று நாங்கள் அன்றுதான் கண்டோம்.

இளைஞர்கள் ஊக்கத்தோடு ஆக்கவேலை செய்தல் வேண்டும்! ஓயாது உழைத்துக்கொண்டே இருத்தல் வேண்டும்! எதிர்காலம் இன்றைய இளைஞர்கள் கையில்தான் உள்ளது! என்ற பொன்மொழிகளோடு அன்புவிடை பகன்றார். தமிழ்த் தென்றலை வாழ்த்தி வணங்கி விடைபெற்றோம்! தமிழ்த்தென்றல் திரு. வி. க புகழ் ஓங்குக!

'திருவேடம்'

தமிழ்ப் பெரியார்
திரு. வி. கல்யாணசுந்தரனார்

அறிஞர் அண்ணா

நாடற்றவர்கள்! யார்?

உலக அரசியல் வரலாற்றிலே நாம் கேள்விப்படாத ஒரு வார்த்தைதான் 'நாடற்றவர்' என்பது. நாடற்றவர்கள் யார்! அவர்களுக்கென ஓர் நாடில்லாவிடில், அவர்கள் வாழ்வு நடாத்துவது எங்கே! அவர்கள் பிறந்த நாடுகூட கிடையாது என்பதா? அவர்கள் அத்தனை பேர்களும் நாட்டில் பிறக்காமல் சுறு மீன்களும், திமிங்கிலங்களும் வாழ்கின்ற சமுத்திரத்திலோ அல்லது ஆண்டவனைக் காட்டுவதாக அண்ணாந்து பார்க்கின்றனரே அந்த ஆகாய மண்டலத்திலோ பிறந்தனர்? என்பன போன்ற கேள்விகள் எழும்புகின்றன.

இந்த இருபதாம் நூற்றாண்டில் வேக நடைபோட்டுக் கொண்டிருக்கின்ற இன்றைய விஞ்ஞான உலகில் 'நாடற்றவர்' என்று யாரையும் குறிப்பிடுவது என்றால் அது கேள்விக் குறியாக மாத்திரமல்ல ஆச்சரியக் குறியாகவும் பிறகு கோபக் குறியாகவும் தோன்றுகிறது. ஜெர்மானிய நாட்டிலே வாழ்ந்து வேகமாக வீழ்ந்துபோன, உலகையே ஆளுவேன் என்று உரத்தக்குரல் எழுப்பி, உலகை யுத்த களத்தில் இழுத்து வரலாற்றிலே ரத்தக்கறையுண்டாக்கிய இட்லரை இதற்குள் யாரும் மறந்துவிட முடியாது. அவன்தான் 'நாடற்றவர்' என்ற பட்டஞ் சூட்டப்பட்ட யூதர்களை தனது நாட்டைவிட்டு விரட்டும் பணியில் ஈடுபட்டதை அறிகின்றோம். அந்த யூதர்கள்கூட தமக்கென ஒரு நாடு உண்டு—அதை ஆளும் உரிமையும் தமக்கே வேண்டும் என்று போராடி 'இஸ்ரேல்' என்ற நாட்டை உரிமையாக்கிக் கொண்டனர் என்ற வரலாற்றை இன்றைய உலகின் அரசியல் தலைவர்கள் மறந்து விட்டார்களே என்பதை எண்ணுகின்ற போதுதான் மனவேதனை யடையவேண்டி ஏற்படுகின்றது.

உலகில் எவரும் ஏற்றுக்கொள்ள மறுக்கின்ற 'நாடற்றவர்' என்ற அநாகரீகப் பெயரை, யூதர்கள் கூட உதறித் தள்ளிவிட்ட நாகரீகமற்ற பட்டத்தை இலங்கையிலுள்ள திராவிடர்கள் மீது சூட்டுகின்றனர், இன்றைய இருபதாம் நூற்றாண்டின் 'டாப்—லெவல்' அரசியல் புலிகள். இதனை எண்ணுகின்ற போது ஆச்சரியம் ஏற்படுகின்றதல்லவா? அந்த ஆச்சரியப் பட்டத்தை ஏற்றுக் கொள்ளும்படி வற்புறுத்தப்படுகின்ற மக்களின் தொகை ஒன்றல்ல, பத்தல்ல. கிட்டத்தட்ட 7 லட்சத்திற்கு மேற்பட்டவர்கள். அவர்கள் அத்தனைபேரும் இலங்கையிலேயே பிறந்தவர்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. அவர்கள் மட்டுமல்ல அவர்களது தந்தைமார்களைப் பெற்ற பாட்டன்கள் கூட இலங்கையிலேதான் பிறந்து வளர்ந்து வாழந்த ஏழை மரபினர்—முழுக்க முழுக்க தமிழர்—திராவிடர்;

வெள்ளைக்காரன் இந்த நாட்டை—இலங்கையையும் சேர்த்து—ஒரே நாடாக வைத்து ஆட்சி நடத்திய போது இங்கிருந்து ஒப்பந்தத்தின் பேரில் இலங்கைக்கு அழைத்துச் செல்லப்பட்டவர்களின் சந்ததிகள்: காடு மேடாகக் கிடந்த நிலத்தை மனிதன் கையில் துப்பாக்கியோ அல்லது பிறஆயுதமோ இன்றி நுழைய முடியாத காட்டை செப்பனிட்டு சீர்படுத்தி சிறந்த தேயிலைத் தோட்டங்களாகவும் ரப்பர் தோட்டங்களாகவும் மாற்றியமைத்த மாசற்றவர்களின் வாரிசுகள் அவர்கள். சிலோன் என்று உலக அரங்கிலே அந்தச் சின்னஞ்சிறு நாட்டை தெய்வ தீவை, சிங்காரச் சோலையாக அறிமுகப்படுத்தியதும் அந்த நல்லவர்கள் சிந்திய வியர்வையும் இரத்தமுமே யாகும்.

இன்றைய உலக நாடுகளின் மத்தியில் ஒரு உறுதியான உருப்படியாக அமைய சிறந்த பொருளாதார நிலையை உண்டாக்கித்தந்த உத்தமர்களும் அவர்களே; அறிவை அடகு வைக்காமல் நீதியையும் நேர்மையையும் கொண்டு சிந்தனை செய்கின்ற அத்தனை பேர்களும் மேற்கூறியவைகளை மறுக்க முடியாது—மறுத்துக் கூற மாட்டார்கள். சர்வதேசச் சட்டத்தின்படி பார்ப்பதானாலும் மனிதநீதியின்படி நோக்குவதானாலும் இன்று இலங்கையிலே கும்மாளமடிக்கின்ற கொத்தலாவலைகளை விட அந்த நாட்டில் வாழ அந்த நாட்டை ஆட்சி செய்ய அதிக உரிமை கொண்டவர்கள், அந்த "நாடற்றவர்கள்" என்று ஒதுக்கப்படுகின்ற நமது இனத்தவரான திராவிடரே—தமிழரே யாவர்.

ஆனால் அந்த நல்லவர்களைத் தான்—நாட்டின் உண்மை நலம் விரும்பிகளைத்தான் இன்று சட்டத்தின் துணைகொண்டு—பெரும்பான்மையினர் என்ற குருட்டு பலத்தைக் கொண்டு "நாடற்றவர்" என்ற நாகரீகமற்ற பட்டத்தைச் சூட்டி நாட்டைவிட்டே விரட்டிவிட முயற்சி செய்கின்றனர்.

புறம்பான இந்த "நாடற்றவர்" என்ற பட்டத்தை நடைமுறைக்கு கொண்டுவந்ததே நமது பண்டித நேருவும் இலங்கைப் பிரதமர் கொத்தலாவலையும் டில்லியில் கூடிப்பேசி முடிவு செய்த 'டில்லி ஒப்பந்தத்தில்' தான். அந்தச் சமயத்திலே நாமும் கண்டித்தோம். இலங்கை இந்தியர் பிரச்சினையைப் புரிந்து கொண்ட அத்தனை பேர்களும் 'டில்லி ஒப்பந்தத்தின் பிற்போக்கினைக் கண்டித்தனர். இலங்கை இந்தியர் பிரச்சினை என்பது முழுக்க முழுக்க இலங்கை திராவிடர் பிரச்சினைதான். அங்கு உரிமை வேண்டித் திண்டாடுகின்ற அத்தனை பேரும் நமது தமிழ், ஆந்திர கேரளத்தவரே யன்றி—வடவர் கிடையாது.

ஆகவே அலட்சிய மனப்பான்மையுடன் அக்கரை சிறிதுமின்றி, அவர்கள் உரிமை பெற்றால் என்ன அல்லது ஒழிந்தால் என்ன. என்கிற வஞ்சக எண்ணத்துடன் செய்யப்பட்டதுதான் 'டில்லி ஒப்பந்தம்' என்று நாம் கூறிய கருத்தை தேசிய வட்டாரங்களில் கூட ஒத்துக்கொண்டனர். ஆனால் அவ்வமயம் 'நாடற்றவர்' என்ற வார்த்தையை உபயோகித்தது பிரச்சினையின் சிக்கலைத் தீர்ப்பதற்காகத்தான்—அதுவும் தற்காலிகமாகத்தான் உபயோகப் படுத்தப்படும்—நாடற்றவர் என்பவர் ஒருவர் கூட இருக்க மாட்டார் என்று முன்னாள் இலங்கைத் தூதுவர் தேசாய் விளக்கம் தந்தார். பண்டித நேருவின் இராஜதந்திரம் நிறைந்த ஒப்பந்தம் அது, தீர்க்கப்படாமலே இருந்து வருகின்ற இலங்கை இந்தியர் பிரச்சினை அந்த ஒப்பந்த மூலம் மிக எளிதாகத் தீர்ந்துவிடும் என்றெல்லாம் கூறப்பட்டதை நம்பி எதிர்ப்பைக் காட்டாது 'பொறுத்துப் பார்ப்போம்' என்று அன்றிருந்த இலங்கை இந்தியர் காங்கிரஸ் தலைமை இருந்து வந்தது.

ஆனால் இன்று என்ன நிலை ஏற்பட்டுள்ளது? லட்சக் கணக்கானவர்களை 'நாடற்றவர்' பட்டம் சூட்டி நாட்டை விட்டே விரட்டுவதற்கான சட்டங்களைத் தீட்டி வருகின்றது இலங்கை அரசு. நமது மதிநுட்ப பண்டித நேருவோ 'நாடற்றவர்களைப் பற்றி இந்தியாவுக்குக் கவலையேகிடையாது" என்று சமீபத்தில் டில்லி பாராளுமன்றத்தில் கேட்கப்பட்ட கேள்வி யொன்றிற்குப் பதிலளிக்கும்போது கூறிவிட்டார்.

உலகெல்லாம் ஜனநாயக உபதேசம் பண்ணுகின்ற நேரு பண்டிதர் தென்னாப்பிரிக்கக் கொடுமையையும் பர்மோசா பிரச்னையையும்—இந்தோசீன விவகாரத்தையும்—இன்னும் அகில உலகச் சிக்கல்கள் அத்தனையும் தீர்த்து வைப்பதாக அழைப்பின்றியே ஓடுகின்ற ஆசியாவின்ஜோதி தனது சொந்த நாட்டுப் பிரச்னையில் பாதிக்கப்படுகின்ற பல லட்சம் பேர்களைப்பற்றி கவலையில்லாத் தன்மையைத்தான் காட்ட முடிகின்றது. ஏனெனில் இது 'சரித்திரப் புகழ் பெற்ற பொறுமைசாலிகளான' திராவிடர்களது பிரச்னை என்பதேயாகும்.

ஆகவே தென்னாட்டைச் சார்ந்த நாம் அத்தனை பேர்களும்—அரசுக் கட்டிலில் அமர்ந்துள்ளோரும்—டில்லியை வற்புறுத்தி தீமை தரும் டில்லி ஒப்பந்தத்தை கிழித்தெறியும்படி செய்து இலங்கையில் அவதியுறுகின்ற 10 லட்சம் திராவிடர்களுக்கும் உரித்தான உரிமைகளை உடனே அளிக்கும்படி இலங்கை அரசை பணியச்செய்ய சகல முறைகளையும் அக்கரையுடன் அலட்சிய புத்தியை நீக்கி கைக் கொள்ளுமாறு தூண்டவேண்டியது நீங்காக் கடமையாகும். பதவியும் பட்டமும் பெறும் போலி ஆசையில் பொறுமையுடன் மௌனமாயிருந்து பல லட்சம் மக்களது வாழ்வை பாழ்படுத்த முயற்சிக்க இடங்கொடுக்க வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வடஇந்தியர் சம்பந்தப்பட்ட காஷ்மீர் பிரச்சினை—பாக்கிஸ்தான் அகதிகள் விவகாரம் முதலானவற்றில் டில்லி காட்டுகின்ற அக்கரை நமது தென்னாட்டுப் பிரச்சினைகளில் காட்டப்படவில்லை என்பதை உணர்ந்து செயலாற்றும் நடவடிக்கை எடுக்குமாறு தென்னாட்டு அரசியலாரை குறிப்பாக சென்னை அரசினரைக் கேட்டுக் கொள்கின்றேன்; ஒரு தூதுக் குழுவை இலங்கைக்கு அனுப்பினால் பிரச்சினையின் உண்மையைப் புரிந்து கொள்வதோடு சிக்கலைத் தீர்க்கும் முறைகள்பற்றி 'டில்லிக்கு'ப்புத்தி சொல்வதற்கும் ஏதுவாகும்.

சிரிப்பு!

கடைக்காரர்: என்னுடைய தவிட்டு மருந்துக் கடையை அந்த நடுத்தெருவுக்கு மாற்றிக்கிட்டால் வியாபாரம் நல்லா நடக்கும்னு சொல்றீங்களே! எதனாலே!

நண்பர்: உமக்கென்னய்யா தெரியும்!... அங்கே நிறைய புஸ்தகக் கடைகள் இருக்கு! வியாபாரமும் ரொம்ப நல்லா நடக்குது!

2

ஒருவர்: அந்த நகைச்சுவைத் துணுக்கைப் படித்து விட்டு அப்படி விழுந்து விழுந்து சிரிக்கிறீரே. அவ்வளவு நல்லாவா இருக்கு அந்த 'ஜோக்'

மற்றவர்: இல்ல...இதையும் ஒரு 'ஜோக்'குன்னு போட்டிருக்கானேன்னு நினைச்சேன்! சிரிப்புத்தாங்க முடியவில்லை!...ஹ...ஹ...ஹ...

3

வக்கீல்: நீர் அவனை அடித்ததாகப் பிராது கொடுத்திருக்கிறான் என்று சொல்கிறீர்!...இல்லையா. அவனை நீர் அடித்தது உண்மைதானா?

கட்சிக்காரர்: என்னங்க அப்படிக் கேக்கிறீங்க! நான் தான் உங்ககிட்டே வந்திருக்கிறேனே, அதிலேயிருந்து நீங்களே தெரிஞ்சுகொள்ளக் கூடாதுங்களா!

4

கணவன்: கோபமா என் கோகிலமே! கோமளமானே...கோமேதகச் சிலையே!...அசைந்தாடும் பூங்கொடியே! ஆசை மேவும் பசுங்கிளியே! மனங்கவர் மடமயிலே! மதுரமொழி மாங்குயிலே!...

மனைவி: ஐயையோ போதுமே உங்க உளறல்! நீங்க நாடகாசிரியர் ஆனாலும் ஆனீங்க, இப்ப எம்பாடுல்ல கஷ்டமாப் போச்சு முதல்லே!

—அமலன்

மதுரை மாவட்ட தி. மு. கழக செயற்குழுக் கூட்டம்

8—5—55 ஞாயிறன்று காலை 10 மணிக்கு திருப்பரங்குன்றம் குறவக்குளம் மடத்தில் மாவட்டச் செயலாளர் திரு. எஸ். முத்து அவர்கள் தலைமையில் நடந்தது. கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறியது:

மாநில மாநாடு நிதிக்காகவும் மாவட்டக் கழக செலவுக்காகவும், ஒவ்வொரு சிற்றூர் கிளைக் கழகமும் ரூபாய் 20 வீதமும், முனிசிபல் நகரங்கள் 100 க்கு குறையாமலும் நூறு ரூபாய்க்குமேல் முடிந்தஅளவு கொடுப்பதென்றும் தீர்மானிக்கிறது.

மாவட்டக் கழகத்தை மதுரை நகர் கழக அலுவலகத்தில் வைத்துக் கொள்வதென்றும், மாதம் பதினைந்து ரூபாய் வாடகை கொடுப்பதெனவும் தீர்மானிக்கிறது.

திருமங்கலம் கிளைக் கழக பிரதிநிதியாக தோழர் இரசாக் அவர்களுக்குப் பதிலாக தோழர் க. ம. வ. நடராசன் அவர்களை மாவட்டப் பிரதிநிதியாக ஏற்றுக் கொள்வதென்று தீர்மானிக்கிறது.

திருப்பரங்குன்றம் பிரதிநிதி இரா. சு. அரசுக்கண்ணன் அவர்கள் விலகல் கடிதத்தை ஏற்றுக்கொண்டு அவருக்குப் பதிலாக எம். ஆர். சையது அலிஸ் மாவட்டப் பிரதிநிதியாக ஏற்றுக்கொள்கிறது;

பொதுச்செயலாளர் அறிக்கைப்படி திரு—கொச்சி பகுதியை சேர்ந்த வண்டிப்பெரியார், மூணார் பகுதியை மதுரை மாவட்டத்தில் சேர்த்திருப்பதை ரத்து செய்து, திரு-கொச்சி பகுதியோடு சேர்க்கும்படி கேட்டுக்கொண்டு அந்தப் பகுதியிலிருந்து பொதுக்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் தோழர் கே. எ. கலையழகன் அவர்களுக்குப் பதில் தலைமைக் கழக அனுமதி வந்தவுடன் வேறொருவரைத் தேர்ந்தெடுப்பதென்றும் தீர்மானிக்கிறது.

*

அன்றைய தினம் திருப்பரங்குன்றம் தி. மு. கழகத் தோழர்கள் தெருக்களில் தோரணங்கள், வளைவு தட்டிகள் கட்டி அலங்கரித்திருந்தனர். மாவட்டப் பிரதிநிதிகளை வரவேற்க தொண்டர்கள் பஸ் நிலையம், புகைவண்டி நிலையத்திலும் இருந்தனர். மாலை 4 மணிக்கு ஊர்வலம், பொதுக்கூட்டம் நடத்தினர். பொதுக்கூட்டத்தில் கே. எஸ். சந்தானம், பி. சமதர்மம், மு. வசனப்பித்தன் ஆகியோர் பேசினர்.

ரிக்ஷா தொழிலாளர்களும் பல்லக்குத் தூக்கிகளும்!

ஆ. மீ. அலிசேக்மன்சூர்

மாற்றுக் கட்சி எதனைச் செய்தாலும், அதனைப் பற்றிச் சிந்திக்காமல் கண்மூடித்தனமாக எதிர்க்கும் போக்கு நம்மிடத்தில் என்றுமே இருந்தது கிடையாது; கம்யூனிஸ்டுகளுக்கே சொந்தமான இத்தகைய புத்தியை, நம்மைப் பொறுத்தளவிலே, கண்டிக்கிறோமே தவிர, கடுகளவும் பின்பற்றியது கிடையாது என்ற உண்மை யாவரும் அறிந்தது தான்.

நாடு வாழ்வதற்கான நல்ல பல திட்டங்களை, உருவாக்கி செய்து முடிப்பதற்குத் தகுதியும், திறமையும், நாடாளும் காங்கிரஸ் கட்சிக்கு இருப்பதில்லை என்ற உண்மை, பரவலாக இருந்த போதிலுங் கூட, தப்பித் தவறி சமயங்களில் ஒரு சில நல்ல திட்டங்களை, அது தருவதற்குத் தவறவில்லை என்ற உண்மையையும் நாம் மறுப்பதற்கில்லை; காங்கிரஸ் கட்சி நமக்கு பிடிக்காத வேண்டாத எதிர்க்கட்சியாக இருக்கலாம். அதற்காக, அது நல்லது செய்தாலும், அதற்கு வேண்டுமென்றே தீமை முலாம் பூசி, கண்டனக் கணைகள் வீசிக் கொண்டே இருக்க வேண்டுமென்பது அரசியல் அநாகரீகமாகும். தீயது செய்தால் கண்டிக்க வேண்டும் நல்லவை செய்தால் பாராட்ட வேண்டும்.

ஒருசிலர் நினைப்பதுபோல, சர்க்கார் எதைச் செய்தாலும் அதனை எதிர்த்துக் கொண்டே இருப்பது தான் தி. மு. கழகத்தின் வேலை. என்பது நடைமுறை உண்மைக்கு புறம்பான செய்தியாகும். மதுவிலக்கை அமுலுக்குக் கொண்டு வரக் கூடிய காலத்திலே, காங்கிரஸ்காரர்கள் அதுபற்றிப் பேசியதையெல்லாம் நாம் என்ன மறுத்தா பேசினோம்? 'குடித்தால் குடி கெடும்' என்று அவர்கள் சொன்னபோது 'இல்லை இல்லை; குடித்தால் குடி கெடாது. குடி வளரும்; குதூகலம் ஏற்படும்' என்ரு நாம் சொன்னோம்? இல்லையே! மாருக நாம் அந்த மது விலக்குதிட்டத்தை ஆதரித்தோம் சட்டத்தைக் கொண்டு வருவது யாராயிருந்த போதிலும் திட்டம் நல்லவைகளைத் தரக்கூடியதாகையால், அதன் அவசியத்தை நாம் கூட மக்களின் மத்தியில் உணர்த்தினோம்.

வேண்டாத திட்டத்தை, ஆச்சாரியார் 'புதிய கல்வித் திட்டம்' என்ற பெயரால் கொண்டு வந்தார். சூது நிறைந்த திட்டம்-தீது பயக்கும் திட்டம் என்று நாம் உணர்ந்த காரணத்தால், அதனைத் தீவிரமாக எதிர்த்தோம், கண்ணீர்ப் புகைக்கு ஆளானோம்; குண்டாந்தடியால் அடிபட்டோம்; அதே திட்டத்தை முதன் மந்திரி காமராசர் ஓரளவு ஜனநாயகப்பண்பு கொண்டு வாபஸ் பெற்றதால் அவருக்கு வாழ்த்துரை வழங்கினோம் "பாராட்டுதலுக்கும்" "ஆதரித்தலுக்கும்" வித்தியாசந் தெரியாத அரசியல் அநாமதேயங்கள் இதனைப் பயன்படுத்திக் கொண்டு அரசியல் சர்க்கஸ் நடத்துவார்களே என்று நாம் அஞ்சினோமில்லை.

இது போலவே நல்லவற்றை காங்கிரசார் செய்து காட்டும் போது நாம் பாராட்ட தவறியது கிடையாது; தேவைப்பட்டால் திருத்தங்களும் கொடுத்து வந்தோம். திட்டம் வெற்றி பெற மதுவிலக்குத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வரும்போது, அதனால் விளையும் மரமேறும் தொழிலாளர்களின் வேலை யில்லாத் திண்டாட்டத்துக்கு சர்க்கார் முற்றுப்புள்ளி வைத்து, அவர்களுக்கு ஓர் மாற்று வழியைக் காட்ட வேண்டும் என்று சர்க்காரை நாம் அப்போது எச்சரிக்கவும் தவறவில்லை.

வெள்ளைக்காரன் வெளியேறிய இவ்வளவு காலத்துக்குப் பிறகு காங்கிரஸ் சர்க்காருக்கு இப்போது ஓர் புதிய ஞானோதயம் பிறந்திருக்கிறது. "ரிக்ஷா ஒழிப்பு" பற்றி ஒரு மந்திரி பேச ஆரம்பித்துள்ளார், மனிதனை மனிதன் இழுக்கும் இழிவு நீங்க வேண்டும் என்று மகாத்மா சொன்னதை. வற்புறுத்தி வந்ததை, போக்குவரத்து மந்திரி பரமேஸ்வரன் நினைவுறுத்தியிருக்கிருர். சென்னை மயிலாப்பூர் உட்லண்ட்ஸில் ஆட்டோ ரிக்ஷா சொந்தக்காரர்கள் சங்கத்தை ஆரம்பித்து வைத்து பேசுகையில் தான் மந்திரியார் இப்படிக் குறிப்பிட்டிருக்கிருர்!

உண்மைதான் மனிதனை மனிதன் இழுத்துச் செல்வது இழிவு தான்—பாவந்தான்; நெருப்பைப் போல, சென்னை வீதிகள் கொதித்துக் கொண்டிருக்கும் கோடை காலத்திலே கூட தனது இரண்டு கால்களிலும் சாக்குத் துணியைக் கட்டிக்கொண்டு, ரிக்ஷாவை விட இரண்டு பங்கு எடையுள்ள மனிதனை அதிலே வைத்து, இழுத்துச் செல்லும், பரிதாபகரமான காட்சியையும், அந்த காட்சியின் கதாநாயகனை தொழிலாளியையும் கண்டால், நல்ல மனம் கொண்டோர் கண்ணீர் வடிக்காமல் எப்படி இருக்க முடியும்? சிங்காரச் சென்னையிலேதான் இந்த கொடுமையான காட்சிகள் இது குறித்து சென்னை சினிமா சென்ட்ரலில் 1946-ம் ஆண்டு நடைபெற்ற திராவிட கழக மாநாட்டிலே தீர்மானமும் நிறைவேறியிருப்பதை இது சமயம் நினைவூட்டுகிறோம், இப்படி சென்னை வீதிகளிலே புழுக்கள் போல் துடிக்கும் அந்த தொழிலாளர்களுக்கு—தூக்கத்தைத் தொண்டையிலே தேக்கி வைத்து தூக்கமில்லாமல் அவதிப்படும், அந்த உழைப்பாளிகளுக்கு, விடுதலையளிக்கப்போகிறதாம் சென்னை சர்க்கார். 1957 ஏப்ரல் மாதத்திலிருந்துதான் "ரிக்ஷா ஒழிப்பை" அமுலுக்குக் கொண்டுவரப் போகின்ருர்களாம்!

நன்று நன்று, அருமையான திட்டம் தான். பெருமைப்பட வேண்டிய திட்டமும் கூட இந்த திட்டத்தை அமுலுக்குக்கொண்டு வரவிருக்கும் சர்க்காரையும் பாராட்டுகின்ருேம் நாம். ஆனல்!

'மனிதனை மனிதன் ரிக்ஷாவிலே வைத்து இழுத்துச் செல்வது இழிவு, பாவம்' இது மகாத்மா சொன்னது! மந்திரியார்தான் இதனையும் நினைவு படுத்துகின்ருர்! ஆனல்...? மடாலயங்களிலுள்ள சிலபல பெரியகோவில்களிலுள்ள மடாதிபதிகளையும், சாமியார்களையும் (உயிருள்ள சாமியார்தான்) பல்லக்கிலே சுமந்து செல்கின்ற பரிதாபகரமான காட்சி இருக்கிறதே—இதுவும் காந்தி மகாத்மா கருத்துப்படி இழிவு நிறைந்தது தானே! பாபந்தானே!

ஒரு ஊரிலிருந்து இன்னெரு ஊருக்கு, பல்லக்கிலே பவனி வரும் காட்சியைப் பார்க்க வேண்டுமே! திருவாவடுதுரை மடாதிபதி பல்லக்கிலே நகர் சுற்றும் காட்சியைத்தான் காண வேண்டுமே! பல்லக்கை சுமந்து செல்லும் தொழிலாளர்களுக்கும், ரிக்ஷா இழுக்கும் உழைப்பாளர்களுக்கும் என்னதான் வேறுபாடு?

'ரிக்ஷா ஒழிப்பு' சர்க்காரின் இந்த திட்டத்தைப் பாராட்டுவோம்; ஆனல் ஒரு திருத்தம்! 'பல்லக்கு ஒழிப்பும்' அதோடு இணைந்துவிட வேண்டும்; சிலபல கோயில்களிலும், மடாலயங்களிலும் உழைக்காமல் உண்டு கொழுக்கும் 'மாமிச மலைகளைச்' சுமந்துதிரியும்தொழிலாளர்களுக்கும், விடுதலை வேண்டுமல்லவா? இருவரும் ஒரே நிலையில்தானே உள்ளனர்.

ஆகவே, நாம் ஒரு திருத்தம் தர ஆசைப்படுகின்ருேம், பல்லக்குத் தூக்குவதற்குத் 'தெய்வீக முலாம்' பூசப்படலாம், மடாதிபதிகளால்! என்ருலும் இதுவும் ஒழித்துக் கட்டப்பட வேண்டும். ரிக்ஷா ஒழிப்பை அமுலுக்குக் கொண்டுவரப் போவதாகச்சொல்லும் மந்திரி பரமேஸ்வரனுர் இதனை மனதில் எண்ணிப் பார்க்காமலிருந்தால், அவர் நீதியையும், நேர்மையையும்விட்டு. வெகுதூரம் விலகிவிட்டார்என்ற குற்றச் சாட்டுக்கு ஆளாக வேண்டியிருக்குமல்லவா?

இன்னும் ரிக்ஷா ஒழிப்பால் வேலை யிழப்போருக்கு மாற்றுவேலை தேடித்தர வேண்டிய அவசியத்தையும் மந்திரியார் உணர்ந்திருப்பதாக அவரின் பேச்சிலிருந்து தெரிகிறது. இந்த அளவிலாவது அவர் அதனை உணர்ந்தாரே என்பதற்காக நாம் மகிழ்ச்சியடைகிருேம். ஆனல் சென்னை நகரிலே டிராம் வண்டிகள் ஓடுவது நாகரிகமாயில்லை என்று கூறி டிராம் வண்டிகளை ஒழித்துக் கட்டிவிட்டு, டிராம் தொழிலாளர்களின்வாழ்வில்மண்ணைப்போட்ட மேதாவிகள் போக்கினை நாடு அறிந்ததே யாகும். இந்தக்கதை. ரிக்ஷா தொழிலாளர்கள் விஷயத்திலும் ஏற்பட்டுவிட்டால், குற்றுயிராய்க்கிடந்து சாவதைத் தவிர, அவர்களுக்கு வேறு வழியில்லாமல் போய்விடும் ஆகவே ரிக்ஷா தொழிலாளர்களுக்கு முன் கூட்டியே வேறு வேலை தருவதற்கான ஏற்பாட்டினை நடைமுறையில் வகுத்துக் கொள்ள ஆளவந்தார் தவறி விடக்கூடாது என்பதே நமது எடுத்துக் காட்டாகும் இத்தகைய மனவளத்துடன் நாடாள்வோர் ஆவன செய்வார்களா?

வெண்ணிலவே

வெண்ணிலவே, வெண்ணிலவே
விண்ணில்வரும் வெண்ணிலவே!
கண்ணில் உன்னை கண்டவுடன்
கலங்கிவிட்ட நெஞ்சுடனே
உண்ணவரும், புவியெனவே
உனைக்கண்டு உலகினிலே
எண்ணுகின்ற நெஞ்சங்கள்
எத்தனையோ இங்குண்டு

பள்ளமேடு எங்கணுமே
பளிங்குநிற வெண்ணொளியை
வெள்ளமென பெருகிடவே
வீறுகொண்டு நீ வருவாய்
கள்ளவழி நின்றுவிட்ட,
காதலர்கள் தாமிருவர்
உள்ளமொன்று ஆகிடவே
உன்வரவு தடையாகும்

மேகத்திரை கிழித்து
மின்னலென நீ வருவாய்
போகத்தில் திளைத்திருப்பார்
போய் விடுவார், காதலனும்
தாகத்தைத் தணிக்காது
தையலைப் பிரிந்ததனுல்
வேகத்தான் செய்யுமந்தோ
வெண்ணிலவே உன்வரவு

காதம் பல கடந்த
காதலனைக் காணுது
மாதம் பல கடந்தும்
மாதவி காத்திருப்பாள்
மோதும் முன்நினைவு
முழுநிலவே உன் வரவால்
போதும் அவள் நெஞ்சு
பொருக்காது உன்வரவு

சா. ராமாநுசம், இரட்டணை

ஏஜெண்டுத் தோழர்களுக்கு

வணக்கம், முன்பணத்தைவிட நிலுவைத்தொகை அதிகரித்துவிட்ட ஏஜெண்டுத் தோழர்களுக்கு மேற்கொண்டு பத்திரிகை அனுப்பப்பட மாட்டாது என்பதை கண்டிப்பாக தெரிவித்துக் கொள்கிறோம். எனவே உடனே நிலுவைத் தொகையை அனுப்பிவிட வேண்டுகிறோம். —நிர்வாகி

திராவிடன்

சென்னை : 20—5—55 : வெள்ளி

பாகிஸ்தானின் ஏகாதிபத்ய வியாதி?

●

ஏக இந்தியா என்ற சிந்துபாடி, இந்தியத் துணைக் கண்டத்தில் வாழும் பல்வேறு இன, மொழிவழிப் பகுதி மக்களையும் அவர்களது நாட்டின் இயற்கை வளப்பத்தையும் நிரஞ்சீவியர்கச் சுரண்டிவரலாம் என்று திட்டமிட்டிருந்த தேசியத் திருமேனிகளின் திடுதத்தங்களை ஒழுங்குமுறையாக எதிர்த்து வெற்றிபெற்று பாகிஸ்தான் கண்ட அரசியல் மேதை ஜனுப் ஜின்னு அவர்களின் வழிவந்தோர், இன்று அதே பாகிஸ்தான் ஆட்சி முறையில் செய்து வரும் சில பிற்போக்கான செயல்களைக் காணும்போது உண்மையிலேயே நாம் வருந்தாமலிருக்க முடியவில்லை.

ஜனுப் ஜின்னு அவர்கள் வாழ்நாள் இயற்கையாகவே முடிந்ததென்றாலும் அவரது பிரதிபிம்பம் போல விளங்கி வந்த பாகிஸ்தானின் முன்னுள்பிரதமர் ஜனுப்லியாகத்அலிகான் கோரமான கொடுமைக்குஇரையாக்கப்பட்டது பாகிஸ்தானின் நல்வாழ்வில் இடிவிழுந்ததுபோலாகும் என்று கூறின் மிகையாகாது. அதற்குப் பின்னர் பாகிஸ்தானின் ஆட்சிபீடத்திலுள்ளவர்கள் கடைப்பிடித்துவரும் விசித்திரப் போக்குகளே நாம் கூறும் கருத்துக்குப் போதிய சாட்சியங்களாக நிற்கின்றன.

பாகிஸ்தான் பிரிவினைக்கு முன் இந்தியத் தலைவர்களும், பாகிஸ்தான் தலைவர்களும் இடைக்காலத்திலே மத்திய சர்க்காரை நடத்தும் பொறுப்பை ஏற்றிருந்தபோது அந்த இடைக்கால ஆட்சியிலே நிதி அமைச்சராக யிருந்த ஜனுப் லியாகத் அலிகான் அவர்கள் முதலாளித்துவத்தை முறியடிக்கும் வகையில் தயாரித்த வரவு செலவு விவரத்தையும் வரி விதிப்புகளையும் பார்த்து இந்திய முதலாளிகள் போட்ட கூப்பாடும் இது என்ன சமதர்ம சர்க்காரின் பட்ஜெட்போல யிருக்கிறதேயென்று ஒப்பாரிவைத்த சம்பவங்களையும் இந்திய அரசியல் வரலாற்றிலிருந்து எவருமே மறைத்துவிட முடியாது.

இவ்வித ஆற்றலும் நேர்மைப் பண்பும் படைத்த தலைவர்களால் காணப்பட்ட பாகிஸ்தான் ஆட்சிப்பீடத்தில் இன்று அமர்ந்திருப்போர் அத்தலைவர்களின் கொள்கையை அல்லது உரிமை வேட்கையின் அடிப்படையை அறவே மறந்து ஏகாதிபத்ய பாதையில் துரித நடை போடுவதானது பாகிஸ்தானின் எதிர்கால நல்வாழ்வையும் பாதிக்கக்கூடியதாகும், என்பதை தர்பார் நடத்தும் கோஷ்டியினர் உணர வேண்டும்.

இன்று பாகிஸ்தானில் வாழும் ஏழரை கோடி மக்களும் "அகண்ட இந்தியா" என்ற அரசியல் பிடிப்பில் வாழ விரும்பாததால் தான், அந்த அரசியல் அமைப்பையே ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டதால்தான் பாகிஸ்தான் என்ற தனிஅரசு காண நேரிட்டது.

'ஏகஇந்தியா' என்ற அரசியல் அமைப்பை ஒப்புக்கொள்ள காரண காரியங்களோடு மறுத்து தனிநாடு வேண்டும் என திராவிட நாட்டு மக்கள் அன்று குரலெழுப்பினரே அதுபோலவே பாகிஸ்தான் அமைக்கப்பட்ட நாளிலேயே இன்றைய பாகிஸ்தானின் வடமேற்கு எல்லைப்புற மாநிலத்தில் வாழும் பக்துன் என்ற வகுப்பினர் தாங்கள் பாகிஸ்தானுடன் ஒன்றுபட்டு வாழ இயலாத காரணங்களை விளக்கித் தனிநாடு கோரிக்கையை வலியுறுத்தினர். வலியுறுத்தியும் வருகின்றனர்.

மேற்கு பாகிஸ்தானுக்கு வடக்கே யுள்ள ஆப்கானியர்கள் தங்களுக்கும் பக்துனியர்களுக்கும் இருக்கும் இனஉறவு, இரத்தபாசம், சரித்திரத் தொடர்பு ஆகியவைகளைக் காரணமாகக் காட்டி ஆரம்பத்திலிருந்தே பக்துனிஸ்தான் கோரிக்கையை ஆதரித்து வருகின்றனர்.

இன்னும் சொல்லப்போனுல் — திராவிடர்கள் தனி இனத்தவர்கள். இந்தோ—ஆரிய இனத்தவரான வடநாட்டவருடன் வாழ திராவிடர்கள் விரும்பவில்லை, ஏக இந்தியா அரசியல் அமைப்பு என்பது வடவர்கள் திராவிடர்கள் மீது ஆதிக்கம் செலுத்துவதாக யிருப்பதால் அந்த அமைப்பின் கீழ் வாழ திராவிட மக்கள் விரும்பவில்லை என்றுநாம் எழுப்பும் நமது உரிமைக் குரலான—இதயகீதமான திராவிட நாட்டுப் பிரிவினையை ஏற்றுக் கொள்ளும் மனவளம் பெருத வடநாட்டவர் கூட பக்துனிஸ்தான் கோரிக்கைக்கு தங்களின் ஆதரவை 'வேதாந்த மாடலில்' காட்டி வருகின்றனர். இவ்வாறு ஏக இந்தியா வாதிகள் ஆதரவு காட்டுவதானது ஏக இந்தியாவிலிருந்து பிரிந்துபோன பாகிஸ்தான் மேலும் துண்டாடப்படட்டும் என்ற கெட்ட எண்ணங் கொண்டு காட்டுவதாகும் என பாகிஸ்தானின் ஆளவந்தார்கள் கூறி பக்துனிய மக்களின் நியாயமான உரிமையைப் பறிக்க ஜல்லடம் கட்டிக்கொண்டு நின்றுலும் அதில் அதிசயமிருக்க முடியாது,

எது எவ்வாருக யிருப்பினும் ஒன்றுக வாழவிரும்பாத மக்களிடம்—வாழமுடியாத சூழ்நிலையில் உள்ள மக்களிடம் ஒற்றுமைச் சிந்து பாடுவதும், இதனைத் தட்டிக் கேட்டால் இது உள்நாட்டு விவகாரம் என்று வாய்ச்சவடால் அடிப்பதுமான செயல்களில் இறங்கி இனி எந்த நாடும், மற்றவர்களைப் பணியவைக்க முடியாது என்பது திண்ணம், அவ்விதம் பணியவைக்கும் செயல்கள் துவக்கக் காலத்தில் சிறிது வெற்றி பெற்றுலும் இறுதியில் அவ்வித ஏகாதிபத்திய நடவடிக்கைகள் குப்புறக் கவிழ்ந்துவிடும் என்பதை உலக வரலாறுகள் விரிவாக எடுத்துக் காட்டுகின்றன.

எனவே, இந்திய துணைகண்டத்து அரசியல் மேதைகளில் முதல்வராய் விளங்கி வந்த ஜனுப் ஜின்னு அவர்களின் வழிவந்தவர்கள் என்ற பெருமையைப் பேசிக் கொள்ளும் பாகிஸ்தானின் தர்பார் சுந்தரர்கள் பக்துனிய மக்களின் நேர்மையான உரிமைக்கு விட்டுக் கொடுத்து அதன் வாயிலாக பாகிஸ்தானின் உண்மையான ஒற்றுமையை வளர்க்க முனைய வேண்டுகிறோம். அதுமட்டுமல்லாமல் திராவிட நாட்டுத் தனி உரிமைக்கு முட்டுக் கட்டையாயுள்ள வடநாட்டு ஆதிக்கக்காரர்களும் மனவளம்பெற பாகிஸ்தான் அரசியல் தலைவர்கள் பக்துனிய மக்களின் உரிமையை மதித்து நடக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இலங்கையில்

"தம்பி"

கிடைக்குமிடம்:
வி. எஸ். முருகன்
82/3, குமாரவீதி, கொழும்பு

நடக்க இருப்பவை

சேலத்தில்
பொதுச் செயலாளர் நெடுஞ்செழியன் அவர்களுக்கு வரவேற்பு

22-5-55 ஞாயிறு மாலை 6-30 மணிக்கு சேலம் மாவட்ட தி. மு. கழக சார்பில் சேலம் விக்டோரியா மார்க்கெட் திடலில் பொதுச்செயலாளர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களுக்கு மகத்தான வரவேற்புக் கூட்டம் நடைபெறும். மாவட்டச் செயலாளர் ஜி பி. சோமசுந்தரம் அவர்கள் தலைமை வகிப்பார்.

சூளை தி. மு. க. ஆண்டு விழா

21-5-55 சனி மாலை 6-மணிக்கு தோழியர் சத்தியவாணிமுத்து அவர்கள் தலைமையில் நடைபெறும். தோழர்கள் சி. பி. சிற்றரசு, தென்னவன் பேசுவர். அதுசமயம் மாவட்டச் செயலாளர் இளம்பரிதிக்கு வரவேற்பு அளிக்கப்படும்

மாநில மாநாட்டு நிதிக்காக சிறப்புக் கூட்டம்

24-5-55 மாலை 6 மணிக்கு சென்னை மாவட்ட தி. மு கழக சார்பில் சிறப்புக் கூட்டம் நடைபெறும். நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி அவர்களின் தலைமையில் தோழர் ஈ. வி. கே. சம்பத் 'மக்களும் ஆட்சியும்' என்பதுபற்றிப் பேசுவார். நன்கொடை ரூபாய் 1. அணு 8.

மேனகா—கன்னியப்பன்

26-5-55 வியாழன் காலை 9-மணிக்கு சென்னை மீர்சாகிப்பேட்டை வெங்கிடாசல முதலிதெரு 36-ம் இல்லத்தில் தோழர் காரணதுரைக்கண்ணன் தலைமையில் தோழர் வே. கன்னியப்பனுக்கும் தோழியர் மேனகா அவர்களுக்கும் திருமணம் நடைபெறும், தோழர்கள் சி. பி. சிற்றரசு, முகவை ஆர். எஸ். பாண்டியன் பேசுவர்.

திருச்சி மாவட்ட தி, மு. கழக அவசர செயற்குழு கூட்டம்

22-5-55 ஞாயிறு காலை 10 மணிக்கு திருச்சி சிந்தாமணி தி. மு கழக அலுவலகத்தில் மாவட்ட செயற்குழு கூட்டம் நடைபெறும். பொதுச்செயலாளர் வரவேற்பு, மாநில மாநாட்டு நிதி வசூல், வட்டக்குழு அமைத்தல் ஆகிய பொருள்கள் குறித்து முடிவு செய்யப்படும். செயற்குழு உறுப்பினர்கள் தவறாது வருகை தரவேண்டுமாய் திருச்சி மாவட்ட செயலாளர் அன்பில் தர்மலிங்கம் கேட்டுக்கொள்கிருர்,

அடுத்த வாரம்

தோழர் "கௌதமன்" தீட்டியுள்ள விஞ்ஞானத் தந்தை அரிஸ்டாட்டல் அவர்களின் வரலாற்றுச் சித்திரம் அடுத்த வாரம் திராவிடன் இதழில் வெளிவரும்.

சுயமணி—நாகராசன்

வ. ஆ. மாவட்டம் ஆரணிக்கடுத்த பெரணமல்லூர் பி. எச். இ. பள்ளித் தலைமை ஆசிரியர் தோழர் பி. எ. நாகராசன் அவர்களின் துணைவியார் தோழியர் சுயமணி அம்மையார் அவர்களுக்கு 14-5-55 பிற்பகல் 3-12 மணிக்கு பெண் குழந்தை ஒன்று பிறந்தது. தாயும் சேயும் நலம். இதன் நினைவாக திராவிடன் வளர்ச்சிக்கு ரூபாய் 2—0—0 வரப்பெற்ருேம். நன்றி—(நிர்வாகி)

நெல்லை மாவட்ட தி. மு. கழக செயற்குழு கூட்டம்

15—5—55 தூத்துக்குடி சி. எம். பாடசாலையில் காலை 11 மணிக்கு நெல்லை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் கே. வி. கே. சாமி தலைமையில் நடைபெற்ற மாவட்டச் செயற்குழு கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாநில மாநாட்டு நிதிக்காக சிற்றூர் மைனர் பஞ்சாயத்துக்குட்பட்ட கழகங்கள் 25 ரூபாயும் மேஜர் பஞ்சாயத்துக்குட்பட்ட கழகங்கள் 50 ரூபாயும். நகர மன்றங்களுக்குட்பட்ட கழகங்கள் 75 ரூபாயும் கொடுப்பதென்றும், நிதியை இம்மாதம் 25-ந் தேதிக்குள் பொருளாளர், தோழர் பி. எஸ். கே. செயபால் மரக்கடை, நாசரேத் என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும் எனவும், 29-5-55ல் தூத்துக்குடிக்கு வரும் பொதுச்செயலாளர் அவர்களுக்கு வரவேற்பும் மாநில மாநாட்டு நிதியைக் கொடுப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

ஆரம்பக் கல்வி சீர்திருத்தம்

திராவிட நாட்டுக் கல்வி வரலாறு

14

1498-வது ஆண்டில் போர்த்துகீசிய மாலுமி வாஸ்கோட-கா-மா திராவிட நாட்டின் மேலைக் கடற்கரைப்பட்டினமாகிய கோழிக்கூட்டில் வந்திறங்கினுர் எனக் கூறினேம். இதன் பயனுக ஐரோப்பிய நாடுகட்கும் திராவிட நாட்டிற்கும் தொடர்பு ஏற்படத் துவங்கியது. முதன் முதல் திராவிட நாட்டை வந்தடைந்த போர்ச்சுகீசியர்களை என்ன காரியத்திற்காக வந்தீர்கள் என்று கேட்டபோது எங்கள் கிருத்துவ மதத்தைப் பரவச் செய்வதற்கும் வாணிபம் நடாத்துவதற்குமே வந்தோம் எனக் கூறினர். இவைகளே இவர்களது உண்மையான நோக்கங்களாக இருக்கவில்லை நாடு பிடிக்கும் மண்ணுசையும் இவர்களது நோக்கமாக இருந்தது. பலன் மேலைநாட்டு ஐரோப்பியர்கள் இந்நாட்டின் அதிபர்களாக வரும்படி ஏற்பட்டு விட்டது. இவர்களில் கிருத்துவ மதத்

கிருத்துவ பாதிரிகளின் கல்வித் தொண்டு

தைப் பரப்பும் நோக்குடன் வந்த பாதிரிமார்கள் தம் காரியமே கண்ணுயிருந்து செயலாற்றத் தொடங்கினுர். தம் செயலில் வெற்றியும் கண்டனர்.

பொதுவாக மத போதனைகள் செய்வதற்காகவும் குறிப்பாக தமது கலப்பு இனக் கிருத்துவர்கட்கு தம்நாட்டு முறைப்படி கல்வி புகட்டுவதற்காகவும் கல்விக்கூடங்கள்ஏற்படுத்தினர். படிப்பு வாசனை என்பதே அறியாத கீழ்ச்சாதி மக்களுக்கும் தீண்டத்தகாத மக்களுக்கும் எழுத்து அறிவும் படிப்பு அறிவும் புகட்டுவதில் கவனம் செலுத்தினர். இக்காரியத்திற்காக திராவிட நாட்டு மொழிகளை கற்றுத் தேர்ச்சியடைந்தனர். இவர்களது மதப்பிரசாரத்திற்கு நாட்டு மொழிகளைக் கற்றுக் கொள்வதும் அவசியமாகவே இருந்தது. திராவிடத்தை வந்தடைந்த இப்பாதிரிமார்கள் முறையான திட்டத்துடன் இந்நாட்டு மக்களின் கல்வி வளர்ச்சிக்கு பாடுபடத் தலைப்பட்டனர். இவர்களது உள் எண்ணம் கிருத்துவமதப் பிரசாரமாக இருந்துவந்ததென்ருலும் இவர்கள் ஆற்றிவந்த காரியங்கள் பாமர மக்களின் கல்வி வளர்ச்சிக்கும் சமுதாய முன்னேற்றத்திற்கும் பெரும் துணையாக அமைந்தன.

இப்பாதிரிமார்கள் தங்களுக்குத் தேவையான இடங்களில் சிறுசிறு துவக்கப்பள்ளிகளை ஏற்படுத்திக்கொண்டனர். பள்ளிகளை எவ்வித பாகுபாடுமின்றி குழந்தைகள் சேர்த்துக் கொள்ளப்பட்டு எழுதவும் படிக்கவும் கற்றுக் கொடுக்கப்பட்டனர். அநேகமாக இப்படிப்பட்டப் பள்ளிகள் சர்ச்சுகளுடன் இருந்தன என்பதும் குறிப்பிடவேண்டியதாகும். சமுதாயக் கொடுமையாலும் பொருளாதார ஏழ்மையாலும் மக்களாக வாழ்ந்து வந்தவர்களும், காலாந்தர ஐந்தாந்தர வகுப்பினராக கருதப்பட்டவர்களுமான பெரும்பகுதி திராவிட மக்கள் மீது அன்பும் கருணையும் கொண்ட பாதிரிமார்கள் அவர்களுக்கு எழுத்தறிவித்த இறைவனுக விளங்கினுர்கள், உற்ருருமின்றி உறவினருமின்றி, அணைப்பாருமின்றி ஆதரிப்பாருமின்றி அனதைகளாகவும் பராரிகளாகவும் விடப்பட்ட ஏழைக் குழந்தைகள் மீதும் எளிய பாலகர்கள் மீதும் ஈவுஇரக்கங்கொண்டு காப்பாற்ற முன்வந்ததோடு மட்டுமல்லாது, அவர்கட்கு அகர முதல் எழுத்தெல்லாம் போதித்த ஆதிபகவன்களாகவும் விளங்கினுர்கள் இப்பாதிரிமார்கள். அனுதை பராமரிப்புக்கூடங்கள் பல ஏற்படுத்தி கல்வி புகட்டி, நல்வாழ்வு வாழ்ந்து நலம் பெறுவதற்கான வழிவகைகளைச் செய்தனர். உயர்தர படிப்பிற்கான உயர்நிலைப் பள்ளிகள் சிலவும் இவர்களால் ஏற்படுத்தப்பட்டன.

முதல் முதல் திராவிட நாட்டை வந்தடைந்த பாதிரிமார்களில் பிரான்சிஸ்கோ சேவியர் (Francisco Xavier) என்பாரும் ராபர்ட்-டி-நொபிலி (Robert-de-Nobili) என்பாரும் குறிப்பிடத்தக்கவர்களாகும். பிரான்சிஸ்கோ சேவியர் (இவர் பின்னர் செயின்ட் பிரான்சிஸ் சேவியர் என வழங்கப்பட்டார்) 1542-லும் ராபர்ட்-டி-நொபிலி 1606லும் திராவிடநாட்டை வந்தடைந்தனர், இவர்கள் ரோமன் கதோலிக்க மதத்தைச் சேர்ந்தவர்கள். தெருக்களில் மணியோசை யெழுப்பி மக்கள்தம் மதப்பிரசாரத்தை கவனிக்கும்படி செய்து வந்தார் பிரான்சிஸ்கோ சேவியர். மலையாள நாட்டில் கீழ்ச்சாதி எனும் காரணத்தால் அவதிக்குட்பட்டிருந்த பரதவ வகுப்பினர்களில் சுமார் 7000 பேர்களை இவர் கிருத்துவ மதத்தில் சேர்த்து அவர்களது சமுதாய உயர்விற்கு வழி செய்தார். இக்கீழ்த்தர சமுதாயத்தினர் கல்வி அறிவு பெறுவதற்கான கல்வித் தொண்டுகளையும் செய்தார். ஒவ்வொரு கிராமத்திலும் பள்ளிக்கூடங்கள் நிறுவப்பட்டு நாள்தோறும் சிறுவர்களுக்கு கல்வி புகட்டப்பட வேண்டுமென்பது பிரான்சிஸ்கோ சேவியரின் எண்ணமாக இருந்தது. ராபர்ட்-டி-நொபிலியோ தாமும் ஒரு பிராம்மணர்தான் எனக் கூறிக்கொண்டும் மறைந்த வேதங்களை மேலைநாட்டினின்றும் கொண்டு வந்திருப்பதாகக் கூறிக்கொண்டும் மதப்பிரசாரத்தில் ஈடுபட்டார். இவர் இத்தாலி நாட்டு டாஸ்கனி மகாணத்தைச் சேர்ந்தவர். மதுரையைத் தமது தலைமை இடமாகக்கொண்டு மதப்பிரசாரம் செய்து வந்தார். இவரது விடா முயற்சியினுல் மதுரைப் பகுதியில் கிருத்துவ மிஷனரி வேலைகள் வளர்ச்சியடைந்தன. இவரது புகழ் ஐரோப்பா முழுவதும் பரவலாயிற்று. உயர்சாதியினர் கிருத்துவமதத்தில் சேர்ப்பதற்காகப் பெரிதும் முயன்ருர். இம்மத மாற்றக் காரியத்திற்காகத் தம்மை பிராமணர் என்று கூறிக் கொண்டார். "தத்துவப் போதகர்" எனத் தம் பெயரை மாற்றிக் கொண்டார் கிருத்துவ, மதத்தைத் தழுவி கிருத்துவர்களாகி விட்டபின்னரும இந்துக்களைப் போலவே மேல் கீழ் சாதி பாகுபாடுகளுடன் இருக்கலாம் என்பது ராபர்ட்-டி-நொபிலி அவர்களது கருத்தாகும். ஆனுல் கிருத்துவப் பாதிரிமாகள் இவரது எண்ணத்தைக் கண்டித்தனர், இவரது காரியங்களை எதிர்த்துப் பிரசாரம் செய்தனர். இவர்தம் பிராமணக் கூற்றைப் பொய்யென்று விளக்கினர். இப்படித் தம் இனத்தவரே தம்மை எதிர்க்க உள்நாட்டுப் பிராமணர்களும் இவரது கூற்றை நம்பாது இவரது செய்கைகளை வெறுத்தனர். இதனுல் நொபிலி பல தொல்லைகளுக்கு ஆளாக நேரிட்டது. ஆனுலும் இவரது உழைப்பினுல் மதுரைப் பகுதியில் கிருத்துவ மத செல்வாக்கு ஏற்பட்டு நல்ல பயன் தரத் துவங்கியது என்பதுமட்டும் உண்மை.

இவருக்குப் பின்னர் ஜான்-டி-பிரிட்டோ (John-de-Britto) என்பாராலும், ஜோசப் பெஸ்கி (Joseph Beschi) என்பாராலும் மதுரை பாதிரிச் சங்கம் தொடர்ந்து நடத்தப்பட்டு வந்தது. ஜோசப் பெஸ்கி இத்தாலியர். தமிழ் நாட்டிற்கு 1700-ல் வந்தவர். தமிழ் மக்களால் 'வீரமா முனிவர்' என்றழைக்கப்பட்டவர். தமிழ் நூல்கள் பல இயற்றி தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு சேவை செய்தவர். தமிழ் மொழியில் முதன் முதல் அகராதி ஒன்றைத்தொகுத்துத் தந்தவர். இவர் இயற்றிய 'தேம்பாவணி' தமிழ் இல்க்கியத்தில் சிறந்த இடம் பெற்றுள்ளது. தமிழ் எழுத்தில் எகர ஒகரங்களை சுலபமாக எழுதும் வகையில் செப்பனிட்டுத் தந்தவர். 'தொன்னூல் விளக்கம்' எனும் தமிழ் இலக்கண நூல் இயற்றித் தந்தவர். வேலூர் நவாப்பாகஇருந்த சந்தாசாகிப் இவரது கல்வித் திறனை வியந்து இலக்கிய வளர்ச்சிக்கென திருச்சியில் நான்கு கிராமங்களை இனுமாக அளித்தார். இவர் 1742-ல் காலமானுர்.

சீஜன் பால்க்.

கோவாவில் 1575-ல் ஒரு போர்ச்சுகீசியக் கல்லூரி துவக்கப்பட்டது. பின்னர் பல இடங்களிலும் பள்ளிகளும் கல்லூரிகளும் துவக்கப்பட்டன. இப்படிப்பட்ட கல்வி முன்னேற்ற காரியங்கட்கு போர்ச்சுகீசிய சர்க்காரின் ஆதரவும் உதவியும் இருந்து வந்தன. அப்போதைய டில்லி சக்ரவர்த்தியாக இருந்த

எழுத்தறிவித்து கல்வி புகட்டிய பாதிரிகள்

அக்பர் போர்ச்சுகீசிய பாதிரிகளின் துணைகொண்டு ஆக்ராவில் ஒரு பெரும் கல்லூரியை நிறுவினுர். இக்கல்லூரி நன்கு நடைபெற்று வருவதற்கான மானிய உதவியையும் ஏற்பாடு செய்து வைத்தார்.

போர்ச்சுகீசியப் பாதிரிமார்களால் நம் நாட்டிற்குக் கிடைத்த பெரும் உதவி அச்சு யந்திரம் ஆகும். இந்தியாவில் முதன் முதல் அச்சு யந்திரம் கொண்டு வந்து நிறுவியவர்கள் போர்ச்சுகீசியர்கள்தான். 1556-ல் கோவாவில் அச்சு யந்திரம் நிறுவப் பெற்றது. இதைத் தொடர்ந்து அம்பலக்காடு, கொச்சி, அங்கமாலி, பணிக்கயல் போன்ற இடங்களிலும் அச்சு யந்திரங்கள் நிறுவப்பட்டன. இந்தியாவில் முதன் முதலாக தமிழ் மொழியில் 1577-ல் தமிழ் நூல்கள் அச்சியற்றப்பட்டன. போர்ச்சுகீசிய பாதிரிச் சங்கத்தைச் சேர்ந்த ஒருவரின் சகோதரரான ஜியோவென்னி கன்சால்வஸ் (Giovenni Gonsolvez) என்பவர்தான் தமிழ் மொழியில் முதன் முதலாக நூல்களை அச்சியற்றினுர். முதன் முதல் அச்சியற்றப்பட்ட நூலின் பெயர் 'கிருஸ்துவின் போதனை' (Doctrina Christiana) என்பதாகும்.

1578-ம் ஆண்டில் அந்தோனியோ-டி-ப்ரோயன்சா) பாதிரியாரால் (Father Antonia—de—proenza) போர்ச்சுகீசிய—தமிழ் அகராதி ஒன்று அம்பலக்காடு அச்சுக்கூடத்தில் அச்சியற்றப்பட்டது. இவ்விவரங்களையெல்லாம் ப்ராபாளினே-டா-சான்-பார்த்தலோமியா (Fra Paolina-da-San-Bartholomeo) என்பார் தமது 'கிழக்கத்திய கடற்பயணம்' என்னும் நூலின்கண் கூறியிருப்பதாக திரு. நரேந்திர நாத்லா அவர்கள் தமது 'இந்தியாவில் ஆதி கிருத்துக்கால கல்வி வளர்ச்சி' எனும் நூலில் எடுத்துக் காட்டியுள்ளார். அச்சுக் கலையின் மூலம் கல்வி அறிவை நம் மக்களிடையே பரப்பிய பெருமை அந்நியப் போர்ச்சுகீசியப் பாதிரிமார்களைச் சேர்ந்ததே. பணிக்கயல், அங்கமாலியினின்றும் பல தமிழ் நூல்கள் அச்சியற்றப்பட்டு வெளிவந்தன. கொச்சியில் தமிழ் அச்சு எழுத்துக்கள் வார்க்கப்பட்டு வந்ததும், தமிழ் நூல்கள் அச்சியற்றப்பட்டு வந்ததும் குறிப்பிட வேண்டியனவாகும்.

போர்ச்சுகீசியரின் செல்வாக்கு திராவிடத்தில் குறைந்துவிட்ட பின்னரும் கூட போர்ச்சுகீசியப் பாதிரிமார்கள் தம் கல்வித் தொண்டுகளையும் மதப்பிரசாரத்தையும் தொடர்ந்தே நடத்தி வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

போர்ச்சுகீசியர்களைத் தொடர்ந்து வந்த டச்சுப் பாதிரிமார்களால் குறிப்பிடக்கூடிய வகையில் காரியம் ஒன்றும் சாதிக்கப்படவில்லை. ஆனுல் பிரஞ்சு பாதிரிமார்களால் மேலும் திராவிட மக்கள் பயனடைந்தனர். பாண்டிச்சேரி, காரைக்கால், நாகூர் ஆகிய இடங்களில் துவக்கப் பள்ளிகள் நிறுவி மக்களிடையே கல்வி அறிவு பரவச் செய்தனர், இலவச உணவும் உடையும் புத்தகமும் கொடுக்கின்ரேும்; உங்கள் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்புங்கள் என்று பிரசாரம் செய்து ஏழை எளியவர்களின் சிறுவர் சிறுமிகளை ஒன்றுகூட்டி கல்வி புகட்டினர் என்பது குறிப்பிட வேண்டியதாகும். தம் எல்லைக்கு அப்பாலும் சிறுவர் சிறுமியர் பள்ளிகள் பல நிறுவி துவக்கக் கல்வியைப் பரவச் செய்தனர்.

இவர்களைப் போன்றே இந்நாட்டையடைந்த டேனிஷ் ப்ராஸ்டஸ்டன்ட் பாதிரிமார்கள் தரங்கம்பாடியிலும் கடலூரிலும் தங்கள் குடியேற்றத்தை நிலைநாட்டிக் கொண்டனர். இவர்கள் முன்னர் கூறிய கதோலிக்க பாதிரிகளை விட முற்போக்கு எண்ணங் கொண்டவர்கள். இவர்கள் "டேனிஷ் ப்ராடஸ்டன்ட் மதப் பிரச்சார சங்க"த்தாரின் (Danish Society for Promoting the Protestant Mission in India) பராமரிப்பில் வந்தவர்களாகும். இவர்களில் பெரும்பாலோர் டேனிஷ்காரர்களும் ஜெர்மனியர்களுமாக இருந்

8-ம் பக்கம்

பேராசிரியர் பேசுகிறார்

மனித வாழ்க்கை காலத்திற்கு காலம் மாறும்

9

கடந்த 15 ஆண்டுகளுக்குள் பொதுமேடைகளாலும் சிறந்த பத்திரிகைகளின் சேவையாலும் தமிழகமே புதியதொரு விழிப்புணர்ச்சியைப் பெற்று விட்டது. இந்த விழிப்புணர்ச்சியின் காரணமாகத்தான் மக்களுக்கு நாட்டின் நலனில் பெரும் அக்கரையும் பெருகியுள்ளது. அரசாங்கம் தனது நெறியில் தவறிவிட்டால் உரிமைக் குரலை எழுப்ப வேண்டிய அவசியத்தை மக்கள் பெரிதும் உணர்ந்து வருகின்றனர். மக்கள் உரிமைக்கும் அரசாங்கக் கடனுக்கும் உள்ள எல்லைகளைப் பொதுமேடைகளில் தீரர்களும் அறிஞர்களும் விளக்குவதன் மூலமும், பல்வேறு எண்ணங்களை இதயமாகக் கொண்டு இயங்கும் பத்திரிகையை ஒப்பிட்டுப் படிக்கும் பண்பாலும் மக்களுக்கு பெரிதும் உணர்ந்து கொள்ளத் தலைப்பட்டு விட்டது.

மக்களைவிட ஒவ்வொரு துறையில் ஒவ்வொரு வகையான இனங்கள் முன்னேற்றமும் முற்போக்கும் கொண்டதாக இயங்க இயல்கிறது. எவ்வளவுதான் சர்வாதிகாரியின் அரசு நாடுகளில் திகழ்ந்தும் எறும்புக் கூட்டத்தில் உள்ள இணைந்து வாழும் அமைப்பை சர்வாதிகார அரசும் கூட நிலைநாட்ட இயல்வதில்லை. ஒரே வரிசையில் சாரை சாரையாகச் செல்லும் பண்பை மக்களைவிட எறும்பு இனங்களே பெரிதும் உணர்ந்துள்ளன என்றுகூடக் கூறலாம். ஒன்றித்து ஒரே குடும்பமாக வாழ தேனீக்கள் கற்றுக்கொண்ட பாடத்தை எவ்வளவுதான் நாடெங்கும் ஒற்றுமை இயக்கங்களும் சர்வதேச அமைப்புகளும் தோன்றியும் மக்களுலகு கற்றுக் கொள்ள இயலவில்லையே! உடலமைப்பில்கூட வேல்ஸ்லாம் யானையும் உயர்ந்த அமைப்பைப் பெற்றுவிட்டன. குயிலின் இசையமைப்பும் மயிலின் களிநடனமும் மனிதப் பண்பினும் சுவைமிக்கதாக இருக்க இயல்கிறது. தன்னைப் பாதுகாத்துக் கொள்ள தக்கவீடு கட்டுவதில் தூக்கணாங் குருவியும் தன் சேய்களைக் காப்பதில் குரங்குக் கூட்டமும் எவ்வளவோ முன்னேறி விட்டன. பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் பாடத்தைக் காக்கைக் கூட்டம் ஆழ்ந்துணர்ந்து கற்று அதன் வழியில் இயங்குகின்றன. வலிமையாக வாழ்வதில் புலியும் சிங்கமும் மனிதனைக் காட்டிலும் மிகவும் உயர்ந்தவை; செய்நன்றி மறவாத பண்பை நாய்க் கூட்டமும் இயற்கை எழிலில் மான் கூட்டமும் மனித உலகைப் புறமுதுகு காட்டச் செய்யக் கூடிய அளவுக்குத் தன் தன் துறையில் துவங்குகின்றன.

மனிதன் இப்படிப்பட்ட கீழ் இனங்களைவிட உயர்ந்தவன் என்று கூறிக் கொள்வதில் பெருமை அடைவதையும் காணுகிறேன். காக்கைக்கும் எறும்புக்கும் உள்ள உயர்ந்த பண்பு பாம்புக்கும் புலிக்கும் அமைந்து படுவதில்லை. சிட்டுக் குருவியும் தூக்கணாங் குருவியும் மானையோ மாட்டையோபோல வாழ்வதில்லை. இவைகள் அனைத்தையும் காட்டிலும் மனிதன் உயர்ந்தவன் என்று பெருமை யடைகிறோம். இதுபற்றி ஆயாசப்படுவோரும்கூட உண்டு. மானும் சிட்டுக் குருவியும் தனக்கு முன்பு வாழ்ந்த தம் தம் இனத்தாரைப் போலவே இயைந்து வாழ்கின்றன. நாய்க்குக் கூட நல்லவன், கெட்டவன் யார் யார் என்பதை பகுத்துணரக் கூடிய தன்மை உண்டு. இப்படியாகவே மிருக வகைகளையும் புள்ளினங்களையும் ஆய்ந்து கொண்டே போனால் மனிதனை மிருகங்களும் புள்ளினங்களும் பெற்றுள்ள வளர்ச்சியை முழுதும் உணர முடிகிறது.

பின்னை எதற்காக மனிதன் மட்டிலும் உயர்ந்தவன் என்ற மனப்போக்கு பதிந்துள்ளது. பெருந்தகை அரித்தாத்திலே (Aristotle) நோக்கி இதே கேள்வியைக் கேட்டார்களாம். அப்போது அவர் மனிதனுக்கென்றே அமைந்த சிறப்புப் பண்பை சுட்டிக் காட்டி, பின்னர் இப்படியெல்லாம் மனிதன் உயர்ந்தவன் என்று வேதாந்தம் பேசினராம். அந்தக் காலத்தில் அந்த உயர்ந்த பெருந்தகை பேசிய வேதாந்தத்தைக் கேட்டு உணர்ந்து கொள்ள மக்களுக்கு மனவளம் அமையவில்லை. ஆனால் இன்று அந்த உண்மையை உணரும் தன்மை மக்களிடையே பெரிதும் வளர்ந்து விட்டது. மனிதன் காரணகாரிய முணர்ந்து பகுத்தறிவுத் தன்மையால் இயங்கும் மிருகம் என்று மட்டும் சொல்லிச் சென்றார். ("Man is a reasoning animal"—Aristotle)

இந்த உயர்ந்த கருத்தின் அடிப்படையில்தான் நாடெங்கும் கலையும் விஞ்ஞானமும் நாகரீகமும் வளருகிறது என்று கூறவேண்டும். மனிதப் பண்பில் பெரும்பாலான இயங்குமுறைகள் மிருகங்களுக்கும் அமைந்த பண்புகளே, குளிருக்கு நடுங்கும் மனித உடலும், அனலில் சிக்கும் உடல் அதனின்று தப்ப முயற்சித்தாலும், அதிர்ச்சிக்கு நடுங்கும் பண்பும் மனிதனுக்கு மட்டுமின்றி மிருகங்களுக்கு அமைந்ததொன்று என்பதும் மறுக்க முடியாத உண்மை.

ஆனால் நல்லதையும் கெட்டதையும் பகுக்கும் பண்பு மனிதனுக்கே உரித்தான சிறப்புப் பண்பு என்பதை யாரும் மறுப்பதில்லை. கசாப்புக் கடையில் கரித்துண்டு திருடும் நாயும், பலாப்பழத்தில் மொய்த்துக்கொண்டு அவன் வியாபாரத்திற்கு கேடு செய்யும் ஈயும், மலேரியா போன்ற நோய்களை மனிதனுக்கு உண்டாக்கி மரணப் படுக்கைக்கு அனுப்பும் கொசுவும் ஒருபோதும் தன்னைக் குற்றவாளி என்று கருதுவதில்லை. ஆனால் மனிதனோ அப்படிப்பட்டவனல்ல. எவ்வளவுதான் காம வெறியனானாலும் பிறன்மனையாளை நோக்குவது கூடாததொன்றுதான் என்று உணரும் பண்பு மனிதப் பண்பு! உணவு அருந்தி எவ்வளவு நாட்களானாலும் தாங்க முடியாத பசிக்கொடுமையை நினைத்து பக்கத்து வீட்டில் திருடும் ஏழையின் உள்ளம் அநியாயமான செயலைச் செய்யும் உள்ளம்தானே என்பதை உணர்கிறது. இது கொடுமை!—இது ஆகாத

வி. சுந்தரராசு

தொன்று!—இது தீங்கின் பிறப்பிடம் என்றும் அது நல்வழி—அவ்வழியே சென்றால்தான் நன்னெறி வளரும் என்றும் பகுத்துணரும் பண்பு மனிதனுக்கு அமைந்ததுபோல விலங்கினங்களுக்கும் புள்ளினங்களுக்கும் அமைந்து படவில்லை என்பது தேற்றம். இதனால்தான் அரிஸ்டாட்டிலும் பகுத்துணரும் மிருகம் என்று அடைமொழி தந்து மனிதனை விளக்கியிருக்க வேண்டும்.

பூனையும் புலியும் வாழ்க்கையில் கற்றுக்கொள்ளும் பாடம் வேறு. மனிதன் வாழ்க்கையில் கற்றுக கொள்ளும் பாடம் வேறு! அவைகளுக்கெல்லாம் தங்கள் தங்கள் இனத்தாரோடு ஒன்றித்துப் பழகும் போதே பாடங்களை நுகரக்கூடிய சக்தியும் வன்மையும் வளர்ந்துவிடுகிறது. எலியைக் கண்ட மாத்திரத்தில் கண்டந்துண்டமாக வெட்டிவிழுங்கும் பண்பு பூனைக்கு அமைந்துவிடுகிறது. தன்வலிமையைக் காட்டி விலங்கினங்களை எதிர்த்துப் போரிட்டு அழித்து அந்த உணவை உண்டு வாழும் பண்பை இயற்கையாகவே புலி பெற்றுள்ளது. பாம்போடு போரிடும் கீரிப்பிள்ளைகளுக்கு பாடக் கற்பிக்க எந்த பாடசாலையும் இல்லை; எந்தவிதமான இராணுவப் பயிற்சியும் பெறாமலே இயற்கையாகவே பாம்புடன் போரிட்டு இறுதியில் வெற்றியோடு திரும்பும் ஆற்றலைப் பெற்றுள்ளது.

ஆனால் மனித வாழ்வு மட்டும் அப்படிப்பட்டதல்ல; நாளுக்கு நாள் புதிய வழிகளில் மாறும் தன்மையைக் கொண்ட வாழ்வு தான் மனித வாழ்வு. ஆயிரம் ஆண்டுகட்குமுன்பு வாழ்ந்த வாழ்க்கையைத்தான் இப்போதும் விலங்கினங்கள் வாழ்கின்றன. பழங்கற்காலத்தில் பாம்புகள் தவளையைத் தின்று பழகியதைப் போலத்தான் இன்றைய இருபதாவது நூற்றாண்டிலும் தவளையைக் கண்டமாத்திரத்தில் பாம்புகள் அவற்றை இருகப்பற்றி உண்ணும் பண்பை கொண்டுள்ளது. உண்ணும் உணவானாலும் சரி, வாழும் இடமானாலும் சரி, பருகும் இன்பமானாலும் சரி, அனுபவிக்கும் துயரமானாலும் சரி, விலங்கினங்களுக்கு மட்டும் நிலையானவைதான். கொக்கு மீனைக் கொத்தவும், பாம்பு தவளையை விழுங்கவும், பாம்பு எலியைப்பற்றவும், கற்பிக்க எந்த கல்லூரியும் தேவையில்லை; எந்த பேராசிரியரும்தேவைப்படுவதில்லை; எந்த பாடபோதன முறையும் துவங்குவதில்லை. இயற்கையாக விலங்குகள் தங்கள் வாழ்கை நெறியைத் தாய்மைத்துணையாலும் சூழ் நிலையான போக்காலும் உணர்ந்து கொள்ளும் பக்குவமனப்பாடு கொண்டவை.

ஆனால் மனித வாழ்க்கை மட்டிலும் நிலையானதல்ல; காலத்திற்கு காலம் மாறும் பண்பினைக் கொண்டது. இயங்கும் சக்திகளின் புதுமை மலர்ந்தால் அதற்கேற்ப சூழ் நிலையை மாற்றிக் கொள்வது மனிதப்பண்பாடு மனித வாழ்வில் மிளிரும் மின்சார விளக்கும் ஓடும் ரயிலும் வானொலிப் பெட்டியும் பறக்கும் விமானமும் ஓரளவுக்கு மனிதன் சூழ் நிலையையும் இயற்கையையும் வென்றுவிட்ட ஆற்றலையே சுட்டுகின்றன. மனித வாழ்வு மட்டும் விலங்கினங்களும் புள்ளினங்களும் போன்ற பரம்பரையான வாழ்வன்று அன்னமிடும் வீடு நோக்கிப் பறக்கும் காக்கைக் கூட்டம் கா கா என்று கூச்சலிட்டுச் செல்வதைக் காண்கிறோம். இந்த காக்கைக் கூட்டம் இறந்து அழிந்த பின்னும் தோன்றும் சந்ததியாராகிய காக்கைக் கூட்டம் முன்னவர் வாழ்ந்ததைப் போலவே அன்னமிடும்தோறும் கா கா எனக் கூவி ஓடிப் பகுத்துண்டு பருகுவதைக் காணுகிறோம். ஆயிரம் ஆண்டுகட்கு முன்பு வாழ்ந்த தூக்கணாங் குருவி கட்டிய கூட்டைப் போலவேதான் அழகொளிரும் கூடுகளைக் கட்டும் அவ்வினங்களை இன்றும் காணுகிறோம்.

பரம்பரையாக வாழ்ந்த விதத்தைப்பற்றிக் கொண்டு அதன்வழி யொழுகும் பண்பு படைத்தவையே விலங்கினங்களும் புள்ளினங்களும். ஆனால் மனிதப் பண்போ அப்படிப்பட்டதன்று! பரம்பரை வாம்க்கையை வாழ வேண்டியபோது அதனை ஒட்டியும், பரம்பரை வாழ்வு அநாகரீகமாகத் தோன்றும் போது அதனை வெட்டியும் வாழக்கூடிய வாழ்வுதான் மனித வாழ்வு. அப்போதெல்லாம் கால் நடையாகவே காசிவரை சென்று கங்கையில் நீராடினால் புண்ணியம் பிறக்கும் என்று மக்கள் எண்ணியிருந்தனர். அப்படியே வயது முதிரும் காலங்களில் காசிக்கும் கங்கைக்கும் அலைந்து பழகிய வாழ்க்கையை மேற்கொண்டிருந்தார்கள். ஆனால் இப்போதோ புண்ணியம் தேட காசிக்கும் கங்கைக்கும் போக வேண்டாம், ஆலயப் பணி என்று கூறி செல்வத்தை விரைக்கவும் வேண்டாம் என்ற உண்மையை உணர்ந்து மக்கள் வாழ்கிறார்கள், கால்நடையாக புண்ணியம் தேடக் காசிக்குச் சென்ற காலம் எங்கே? அடுத்த சில மணி நேரங்களுக்குள் பாரிஸ், லண்டன், நியூயார்க், மாஸ்கோ நகரங்களில் கொண்டுபோய் விட்டுவிடும் திறமை வாய்ந்த விமானத்தில் பறந்து மனித ஆக்கததின் பயனாகத் தோன்றும் உலகியலின் வனப்பு வாய்ந்த நகரங்களை கண்டு களிக்கும் காலம் எங்கே? அப்போது புண்ணியம் தேடி யலைந்த மனித வாழ்வு இப்போது புதுமையைத் தேடக்கூடியதாக மாறியுள்ளது. இன்னும் எத்தனை எத்தனை வனப்பு வாய்ந்த விஞ்ஞான விசைகளை மனித வாழ்வு காண இருக்கிறதோ? விஞ்ஞான வளர்ச்சியும் மனித நாகரீகமும் நாளுக்கு நாள் மாற்றமெய்தி மலரக் கூடிய தன்மையைப் பெற்றுள்ளது. புதுமையே மனித வாழ்வின் உயிர் நாடியாகவும் மாறிவிட்டது.

எனவேதான் விலங்கினங்களையும் புள்ளினங்களையும் போய் மனிதன் தன் இனத்தாருடன் கூடி வாழும்போது கற்றுணரும் பாடம் தன் வாழ்க்கைக்கே போதாக்குறையாக உள்ளதைக் காணுகிறான். காலத்திற்குக்காலம் மாறி புதிய வழிகளில் இயங்குவது மனித வாழ்வு, இந்த வாழ்வின் அடிப்படை மனித மனப்போக்கேயாகும். மனித மனப்போக்கு சீர்பட்டால்தான் மனித வாழ்வில் ஏற்றத்தாழ்வு ஏதுவுமின்றி ஒன்றித்த உணர்ச்சி மிளிர்தல் முடியும். பிரெஞ்சுப் புரட்சியும் ரஷ்யப் புரட்சியும் கூட மனிதவாழ்வில் கொள்ளவேண்டிய முற்போக்கு உணர்ச்சியை உலகுக்கு எடுத்துக்காட்டவே தோன்றிய புரட்சிப் பாதைகள் என்று சொல்ல வேண்டும். ஆனால் விலங்கினங்களிலோ எந்தவிதமான புரட்சியும் ஏற்படுவதில்லை. கடமை யுணர்ச்சியை பெரிதும் உணர்ந்து வாழகின்றன. தன் இனத்தாரோடே எந்தப் புரட்சியையும் விரும்பியமைப்பதில்லை. ஆனால் மனித வாழ்விலோ எத்தனையோ மாற்றங்களைக் கடந்த 550 ஆண்டுகளுக்குள்ளாகக் கண்டு விட்டோம். அசோகன் ஆண்ட காலத்தில் ஒருவனை நோக்கி உனக்கு அமெரிக்கா தெரியுமா என்றால் அவனுக்கு கேட்கும் வினாவே புரியாது. ரஷ்யாவில் அரசு புரியும் சார் பரம்பரையைக் கேட்டிருக்கிறாயா என்றால் தெரியாது என்றுதான் சொல்லுவான். ஆனால் இப்போதோ உலகம் உணராதவன் என்று கூறும் பட்டிக்காட்டானும் அமெரிக்காவையும் ரஷ்யாவையும் நாடுகள் என்றுவது புரிந்து கொண்டு விட்டான்.

உலகம் மாறுகிறது! மனிதப் படிப்பினையும் மாறுகிறது, இப்படியெல்லாம் மாறும் உலகில் முதன்மை பெறவும், வாழ்க்கையை நெறியாகவும் அமைக்கவும் பெரிதும் பயன்படுத்துவது ஒன்றேயாகும். அந்த ஒன்றை வளர்க்கவே அனைவரும் பாடுபடவேண்டும். அந்த ஒன்றுதான்—பகுத்தறிவு.

(தொடரும்)

சுவைத்துப் பாரீர்

சசாங்கனின் சீற்றம் !

புத்த மதம் நம் இந்தியாவில் தழைத்தோங்கி நிலவிய காலம் ஒன்றிருந்தது. புத்தரது கொள்கைகள் பரவுவதைப் பொறுக்க முடியாத இந்து மதப் பித்தர்களும், குறிப்பாகப் பார்ப்பனர்களும் புத்த மதத்தை இந்தியாவை விட்டு வேரோடு பிடுங்கி எறிய வேண்டுமென பல வகையாலும் பாடுபட்டார்கள். மூர்க்கக் குணம் படைத்த அக்கால இஸ்லாமியர் பலரும் புத்த மதத்தை ஒழித்துக் கட்ட ஒத்துழைத்தார்கள்.

என்ன செய்தும் புத்த மதத்தை இந்தியாவை விட்டு ஓட்டிவிட முடியவில்லை. அது நன்றாக வேரூன்றிவிட்டது. **அசோகசக்ரவர்த்தி** புத்த மதத்தை பரப்பப் பெரும்பாடு பட்டார் என்பதை நாம் சரித்திர வாயிலாகக் காண்கிறோம்.

இன்று நம் அரசாங்கக் கொடியில் பொறிக்கப்பட்டிருப்பதும் **அசோகச் சக்கரமன்றோ?**

இன்று நாம் உபயோகிக்கும் ஒரு அணா தபால் பில்லையில் வீற்றிருப்பவர் **போதிசத்துவர்** அன்றோ?

மூன்றணா தபால் பில்லையில் தீட்டியிருப்பது **சாஞ்சி ஸ்தூபத்தின் கிழக்கு வாயிற்படி** அன்றோ?

மூன்றரை அணா தபால் பில்லையில் காட்சியளிப்பதும் **புத்தகயா கோயில்** அல்லவா?

அத்துடன் புத்தர் பிறந்த இடமும் வாழ்ந்த இடமும், போதித்த இடங்களும், மறைந்த இடமும் புதுப்பிக்கப்பட்டு வரவில்லையா?

எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போன்று **டாக்டர். பி. ஆர். அம்பேத்காரின்** முயற்சியால் புத்த மதத்தைத் தழுவவும் நம் இந்திய மக்கள் துடித்த வண்ணம் இல்லையா?

நம் **பெரியார் ஈ. வெ. ராமசாமி** அவர்களும் புத்தர் கொள்கையை நீண்ட நாள் தொட்டே நமக்கெல்லாம் போதித்து வரவில்லையா? திராவிட மக்களும் புத்த மதத்தை ஏற்றிடல் வேண்டும். சூத்திரத் தன்மையிலிருந்து நாம் விடுபட அது ஒன்றுதான் சிறந்த வழி என்று முழங்கி வரவுமில்லையா?

சமீபத்தில் பர்மா நாட்டு இரங்கூனில் புத்தர் மாநாடு சிறப்பாக நடைபெற்றதே. அதற்கு உலக புத்தப் பிரதிநிதிகள் பல்லோர் வருகை தந்தனர். **அண்ணல் அம்பேத்காரும், பெரியார் ஈ. வெ. ரா.**வும் சென்று திரும்பினார்கள். ஆக புத்தமதம் நமது எதிர்கால நல்ல மதமாக உருப்பெற்று வருகிறதே!

இப்படியெல்லாம் புத்த மதம் தப்பிப் பிழைத்துத் தழைத்தோங்கும் என்று கண்டானா **சசாங்கன்** அன்று? எங்கே இப்படியெல்லாம் தழைத்துவிடுமோ என்று அஞ்சித்தானே புத்த மதத்தை அழிக்கப் பார்த்தான்! அழிக்க முடிந்ததா? அழிக்கத்தான் முடியுமா?

சசாங்கன் செய்தது என்ன? சசாங்கன் இந்து மத அரசர்களில் ஒருவன். கி. பி. 600-ல் ஆட்சி புரிந்தான். பௌத்தர்கள் ஆலயங்களை எல்லாம் இடித்துத் தள்ளினான் பௌத்தர்கள் வாழ்ந்த இடங்களையே நாசப்படுத்தினான். அதோடு விட்டானா?

புத்தர் தமது கொள்கைகளில் தெளிவு பெற்று போதிக்க முற்பட்ட இடமாகிய **மகாபோதி மரத்தையே** வெட்டி வீழ்த்தி வேரோடு சாய்த்திட்டான்! எங்கே கொஞ்சநஞ்ச வேர் இருந்து மீண்டும் அம்மரம் முளைத்துவிடுமோ என்றஞ்சி ஆழக்குழி வெட்டி அலசி வேரெடுத்து அந்த இடத்தையே பெருந் தீயிட்டுக் கொளுத்தினான். சீற்றமும் சந்தேகமும் தீர்ந்ததா? இல்லை! கொளுத்தியது போதாதென்று வேர் களைந்த இடம் இத்தனை அத்தனைக்கும் கரும்புச் சாற்றை பிழிந்தெடுத்து ஊற்றினான். மரமிருந்த இடமே தெரியக் கூடாதாம்!

இந்து மதத்தின் பித்துக்கும், புத்தர் கொள்கையின் வைரித்தனத்தின் வெறிக்கும் இதைவிட வேறென்ன அத்தாட்சி வேண்டும்?

சசாங்கா? உனது எண்ணம் நிறைவேறிற்றா? என்று கேட்கிறதே உலகம்!

இவ்வளவு செல்வாக்குற்ற பிறகு புத்த மதம் இந்து மதத்தின் உட்பிரிவே எனக் கொள்கிறது. அங்கேதான் இந்து மதத்தின் '**பல்டி**' தெரிகிறது !

*

ராஜ்போஜ் கூற்று!

பாராளு மன்ற உறுப்பினர் தோழர் ராஜ்போஜ் அவர்கள் இந்திய புத்த சங்கத்தின் தலைவருமாவார்.

மே 6-ம் நாளன்று "புத்தர் பௌர்ணமி" உலகெங்கணும் கொண்டாடப்பட்டது.

புத்தர் 2499 ஆண்டுகளுக்கு முன்பு பிறந்ததும் பௌர்ணமியில் தான்! ஞானத் தெளிவு பெற்றதும் பௌர்ணமியில் தான்! மண் ஆசை, பொன் ஆசை, பெண் ஆசை ஆகியவைகளை விட்டொழித்து துறவறம் பூண்டு பஞ்சசீலங்களை போதிக்கத் துவங்கியதும் பௌர்ணமி நாளன்று தான்!

அப்புனிதத் திருநாளை புது தில்லியில் கொண்டாடும் போது பலபல புத்தப் பிரியர்கள் புத்தரது மேன்மையையும், அவரது கொள்கைகளின் விளக்கத்தைப் பற்றியும் பேசினார்கள்,

அதுபோது ராஜ்போஜ் கூறினார்: தாழ்த்தப்பட்ட மக்களின் கொடுமைகளைக் கல்லவல்ல மருந்து ஒருகாலும் "புத்த மதத் தழுவல்" ஆகாது! புத்த மதத்தைத் தழுவுவதால் இந்து சமூகத்தினின்று தீண்டப்படாத மக்கள் பிரிந்தோடி தனித்து நின்று தத்தளித்துத் திண்டாடிடும் அவல நிலையைதான் வரவேற்றவர்களாவார்கள்! அது மட்டுமல்ல, தீண்டப்படாதார்களின் மதம் மாற்றம், இந்துக்களின் மதம் மாற்றம், இந்துக்களின் சீற்றத்தைக் கிளப்பி விட்டுவிடும் இந்துக்களது சீற்றத்தால் தீண்டப்படாதார்களின் நிலை முன்னையவிட அதிக கவலைக்கிடமாகிவிடும்; கொடுமைகளும் பெருகி விடும் எனவே தாழ்ந்த இனச் சோதரரே! புத்த மதத் தழுவலில் சற்று உன்னிப்பாய் இருங்கள்! என எச்சரித்திருக்கிறார்!

புத்த சங்கத்தின் தலைவர்! புத்தர் கொள்கைகளை ஏற்றிப்போற்றுபவர்! வெளிநாடுகள் சென்று புத்த மாநாடுகளில் பங்கு பெற்றவர்! அவரா? ராஜ்போஜ்! இவ்வாறு பேசுகிறார்? என்றுதான் தோன்றுகிறது!

அதுவும் டாக்டர். அம்பேத்கார் புத்த மதத்தில் நுழையப் போகிறார் என்று கேட்ட பிறகா? ஒரு வேளை சமீபத்தில் அம்பேத்காரிடம் கொண்ட கசப்பின் விளைவு தானோ என்னமோ ராஜ்போஜ் அவ்வாறு சொல்வது? யார் அறிவர்??

*

சலோ பேட்டா!

அமெரிக்காவில் கட்குடியாமையைப் புகுத்தினார்கள். பலன் ஏதுங் கிட்டாமற் போகவே கண்ணியத்துடன் கைவிட்டு விட்டார்கள். அத்தகு நிலை ஏற்படப் "பெரும் புண்ணியம்" கட்டிக்கொண்டார்கள் திருட்டுச் சாராயங் கடத்தி விற்றவர்கள்'

கள்ளச் சாரயங்கடத்தச் சில அமெரிக்கர்கள் கையாண்ட சாதனம் யாது?

அவர்கள், முட்டிவரை மூடி நிற்கும் 'பூட்சு'களில் சாராயப் புட்டிகளை மறைத்துத் திணித்து வைத்து, ஒன்றுமறியா பூனை போல் பல பகுதிகளுக்கும் சென்று கள்ளச் சாராயத்தை விற்பார்கள். அப்படி 'பூட்சில் மறைத்துச் சாராயம் விற்பவர்களைத் தான் ஆங்கிலத்தில் "**பூட்லெக்கர்ஸ்**" (Boot Leggers) என்று கூறுவது.

நம் நாட்டிலும் கட் குடியாமையைப் புகுத்தினார்கள் காங்கிரஸ் சர்க்கார். கவைக்குதவாத திட்டம்! வெற்றி காண இயலாத திட்டம்! அரசாங்க கஜானாவையும் பாதிக்கும் திட்டம்! கை விட்டுவிடுங்கள் என்று எண்ணற்றப் பெரும் பெரும் புள்ளிகள் குரலொழுப்பிப் பார்த்தனர், விட முடியாதென்று பிடிவாதமாய் இருந்து விட்டுச் சென்றார் நமது இராஜாஜி அவர்கள்.

ஆந்திர தேசத்தில் கூட இப்பிரச்சினையைப்பற்றி பெரும் அமளி ஏற்பட்டு மந்திரி சபையே ஆபத்தில் சிக்கித் தவித்தது.

இன்னும் அச்சிக்கல் அங்கே தீர்ந்தபாடில்லை,

விளைவு? கள்ளச் சாராயம் காய்ச்சுதல் கண்கண்ட "குடிசைத் தொழிலா"க உருப்பெற்றது—நாடறிந்த உண்மையாய் விட்டது!

அதெல்லாம் இருக்கட்டும்! 'சலோ பேட்டா'!...மேலால் சொல்லப்பா

ஷோலாம்பூரில் ஒரு திருட்டுச் சாராயம் கடத்தி விற்பவர்! அவர் சாராயத்தை கடத்திச் செல்லக்கையாண்ட முறையைப் பாருங்கள்.

திறமையான குதிரை ஒன்றை நன்கு பழகி வைத்திருந்தார். அதன் முதுகின் மீது சாராயப் புட்டிகளை அடுக்கி வைத்துக் கட்டி விட்டு விடுவார். '**சலோ பேட்டா**' என்று ஒரு குரல் கொடுப்பார்! அதுதான் தாமதம்! பறக்கும்! மனோவேகம்! வாயுவேகம்! 'பூட்டுது' போய்ச் சேரவேண்டிய இடத்தை இந்நேரம் நாடிவிட்டிருக்கும்! சுமந்து சென்ற சாராயப் புட்டிகளும் எவரும் அறியாமுறையில் குதிரை முதுகிலிருந்து இறக்கி விற்றே தீர்த்து விட்டிருப்பார்கள் அக்கோடியிலுள்ளோர். வெறுங் குதிரை திரும்பி ஓடிவந்து வீடும் மறுநாள் வியாபாரப் பிரயாணத்துக்கு! நடுநிசியில்தான் அதை ஓட்டி விடுவது. யாராவது போலீசு ஆட்கள் பின் தொடர்கிறார்கள் என்றால் வர்ண விளக்கொளியை காண்பித்தால் போதும்! எப்படியும் தன்னை மறைத்துப் பதுங்கி போலீசை ஏமாற்றிச் சேர வேண்டிய இடத்தை நாடியே தீரும், அவ்வளவு திறமை! அவ்வளவு பழக்கம்!

அக்குதிரையைப் பழக்கிய வியாபாரி பெருமிதங் கொள்வார். பந்தயங்கட்டிக்கூறவும் செய்வார். என்னவென்று? எனது குதிரையை எவரேனும் சாராயப் புட்டிகளை ஏற்றிச் செல்லும் போது பிடித்து மடக்கி விட்டால் தக்க பரிசு கொடுப்பதாகக் கூறித் திரிந்திட்டார்.

போலீசு விடாமல் ஒருமாத காலமாக குதிரையைப் பிடித்துச்சாராயக் கடத்தலைத் தடுத்து அக்கள்ள வியாபாரியைத்தண்டிக்கவும் பிரயத்தனப்பட்டார்கள். பல நாள் திருடன் ஒரு நாளைக்கு அகப்படாமலா போவான்?'

ஓர் நாள் கள்ளச் சாராயத்தைக் குதிரை மீது ஏற்றித் தானும் அதன் மீது அமர்ந்து சவாரியைத் துவக்கினான். பின்னாலேயே போலீஸ் ஜீப் காரும் துரத்திக் கொண்டே வந்தது. குதிரை கடும் வேகத்தில் செல்லவே அதிர்ச்சியில் இடறி கீழே விழுந்துவிட்டான் அவ் வியாபாரி, கையுங் களவுமாகக் குதிரையும், கள்ள வியாபாரியும், கள்ளச் சாராயப் புட்டிகளும் போலீசு பிடியில் கடைசியில் சிக்கியே தீர்ந்தன. அறுபது புட்டிச் சாராயம் கைப்பற்றப் பட்டனவாம்!

இப்போது கள்ள வியாபாரி பந்தயங் கூறியபடி போலீசுக்குப் பரிசு கொடுப்பாரோ அல்லது போலீசு அவருக்குத் '**தக்க பரிசு**' கொடுப்பார்களோ? கூரம்பாயினும் வீரியம் பேசி யிருக்கக் கூடாது!

—டபிள்யூ. பி. டி., எழிலன்

அச்சு யந்திர அச்சு புத்தக வரலாறு : பதினெட்டாவது நூற்றாண்டில் கல்வி வளர்ச்சி

ஆரம்பக் கல்வி—தொடர்ச்சி

தனர். யாவரும் ஜெர்மன் ஹாலே (Halle) பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றவர்கள். கல்வி அறிவை மக்களிடையே பரவச் செய்வதில் ஆர்வம் கொண்டவர்கள். அவர்கள் மதபோதனை செய்துவந்த இடங்களிலெல்லாம் பள்ளிக்கூடங்களும் நிறுவி, கல்வி அறிவை பரப்பி வந்தனர், இவர்களில் முக்கியமானவர்களான சீஜன்பால்க் (Bartholomeo Ziegenbalg) என்பாரும் ஃப்ளூட்ஸ்செள (Henry Plutschau) என்பாரும் 1706-ல் தரங்கம்பாடியில் வந்திறங்கினர், இவர்களுக்குப் பின்னர் க்ருண்ட்லர் (J. E. Grundler) ச்ஷூட்ல்ஸ் (B Schultz) ச்வார்ட்ஸ் (C. F. Schwartoz) என்போர் வந்து சேர்ந்தனர். இந்த டேனிஷ் பாதிரிமார்களுக்கு கிழக்கிந்திய டேனிஷ் கம்பெனியார் எந்தவித உதவியும் அளிக்காது போகவே 1698-ல் துவங்கப்பட்டதான 'கிருத்துவ அறிவு வளர்ச்சிக் கழகத்தினர்' (Society For Promoting Christian Knowledge) இவர்களுக்கு உதவினர். 1701-ம் ஆண்டில் துவக்கப்பட்டதான 'கிருத்து போதனை பிரசார சங்கத்தினர்' (Society For the propogation of the Gospel) உதவியும் இவர்ளுககுக் கிடைத்தது. முதலில் கூறப்பட்டது; எஸ். பி. சி. கே. சங்கம் எனவும் பின்னர் கூறப்பட்டது. எஸ். பி. ஜி. சங்கம் எனவும் சுருக்கமாக வழங்கப்படுவனவாகும், டேனிஷ் பாதிரிகளும் ஆங்கிலேயர்கட்கு உதவியாகவும் துணையாகவும் நின்று அவர்களது அனுசரணையில் தம் கடனாற்றி வந்தனர். தஞ்சை, சென்னை, புலிக்கட்டு; கடலூர், தேவிப்பட்டினம், திருநெல்வேலி பாளையங்கோட்டை, திருச்சிறுப்பள்ளி, மதுரை ஆகிய இடங்களில் அவர்களது கல்விக்கூடங்களும் மதஸ்தாபனங்களும் வேலை செய்து வந்தன. மிலேச்சர்கள் என அவமதிக்கப்பட்டு கிழ்நிலையிலிருந்த முகம்மதிய ஏழைபாழைகளையும் தொடத்தகாதவர்கள் பார்க்கத்தகாதவர்கள் சண்டாளர்கள் என்று ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த ஆதிதிராவிட எளியோர்களையும் ஒன்று கூட்டி கல்வி அறிவு புகட்டினர். மனித அறிவு அடைந்து மனிதர்களாக வாழ ஊக்கமும் உதவியும் அளித்தனர். சன நடையில் சிறு சிறு பாட நூல்கள் அச்சடித்து வெளியிட்டனர்; சில ல்ல தமிழ் நூல்களையும் அச்சியற்றினர். இந்நூல்களை இனமாக மாணவர்கட்கும் மாணவிகட்கும் வழங்கினர். ல்ல தமிழில் பேசவும் எழுதவும் கற்றுத் தந்தனர். 1716-ல் ஒரு ஆசிரியர் பயிற்சிப் பள்ளியைத் துவக்கிவைத்தனர். சென்னையில் ஐரோப்பியர்கட்கு ஒன்றும் திராவிடர்கட்கு ஒன்றுமாக இருபள்ளிகள் நிறுவி நடத்தினர். சீஜன்பால்க் தமிழ் இலக்கணம் ஒன்று இயற்றியும் தமிழ் மொழியில் பைபிள் வேதத்தை மொழி பெயர்த்தும் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு தொண்டாற்றினர். பைபிள் வேதத்தை இவர் தமிழ் மொழியில் மொழிபெயர்த்தது பற்றிய வரலாறும் தெரிந்து கொள்ளவேண்டியதாகும்.

மிஸ்டர் ஜியார்ஜ் லூயிஸ் என்பவர் 1692-ல் சென்னை செயின்ட் ஜியார்ஜ் கோட்டையின் குருமாராக நியமிக்கப்பட்டார். இவர் மத விஷயங்களில் மட்டுமல்லாது மக்களின் கல்வி விஷயத்திலும் அக்கரை காட்டினர். பெண்களுக்கென்றும் ஆண்களுக்கென்றும் தனித்தனி கல்விக்கூடங்கள் அமைக்க வேண்டியது அவசியமென அப்போது கவர்னராக இருந்த பிட் என்பாருக்கு யோசனை கூறினர். இக்கல்விக் கூடங்களில் போர்ச்சுகிசிய மொழியில் கல்வி பயிற்சிக் கொடுக்க வேண்டுமென்பதும் அவரது யோசனையாகும். ஏனெனில் சென்னையில் அக்காலத்தில் போர்ச்சுகிசிய மொழியே, வணிபம் செய்து வந்தோரின் பொது மொழியாகவும் ஐரோப்பியர்களின் மொழியாகவும் இருந்து வந்தது. இப்பொது மொழியான போர்ச்சுகிசிய மொழியில்தான் ஜியார்ஜ லூயிஸ் பைபிள் வேதத்தை மொழிபெயர்த்து வைத்திருந்தார். இவரது யோசனைப்படி கிழக்கிந்திய கம்பெனியார் கல்விக்கூடங்கள் ஏற்படுத்தாது போகவே கல்வி புகட்டுவதற்கான யோசனைகளும் ஏற்பாடுகளும் பயனற்றதாகிவிட்டன. ஆனல் ஜியார்ஜலூயிஸ் மனந் தளராது தான் போர்த்துகிசிய மொழியில் அரைகுறையாக மொழிபெயர்த்து வைத்திருந்த பைபிள் வேதம் முதலிய நூல்களை தரங்கம்பாடியில் வந்திறங்கிய சீஜன்பால்க், க்ருண்ட்லர் ஆகியோரிடம் ஒப்படைத்தார். அவைகளை பயன்படுத்தி மக்களிடையே பைபிள் கருத்துக்களை பரவச் செய்யும்படிக் கூறினர். அவரது விருப்பப்படி சீஜன்பால்க் பைபிள் வேதம் முழுவதையும் போர்ச்சுகிசிய மொழியில் மட்டுமின்றி தமிழ் மொழியிலும் மொழிபெயர்த்தார். பின்னர் இவைகள் சிறு சிறு நூல் வடிவங்களில் பள்ளிக்கூடச் சிறுவர்கட்கு வழங்கப்பட்டன, சீஜன்பால்க் அவர்களைப் பற்றி திரு. மயிலை சீனி வேங்கடசாமி, தம் "கிருஸ்துவமும் தமிழும்" எனும் நூலின்கண் கூறியுள்ளது குறிப்பிடவேண்டியதாகும்.

'இவர் தமிழ் மொழிக்குச் செய்த சிறந்த தொண்டு என்னவென்றல், தமிழ் நாட்டுப் பொதுமக்களின் உபயோகத்திற்காகத் தமிழ்ப் புத்தகங்களை அச்சிட்டு உதவியதுதான். அக்காலத்தில் அச்சுப் புத்தகம் கிடையாதபடியால் எல்லோரும் ஓலைச் சுவடிகளைப் படித்து வந்தனர். ஸீகன் பால்கு ஐயரும் அவர்களைப் போன்றே ஓலைச்சுவடிகளைப் படித்து தமிழ் கற்று வந்தார், ஓலைச்சுவடிகளைப் படிப்பது அச்சுப்புத்தகத்தைப் படிப்பது போல சுலபமான காரியமன்று. ஏட்டுச் சுவடிகளை எழுதுவது அதைவிட இன்னும் கடினமான காரியம். கஷ்டப்பட்டு எழுதினலும் ஒரு புத்தகத்தை எழுதி முடிக்க அதிகக் காலஞ் செல்லும்; எழுத்துச் செலவும் அதிகம். ஏட்டுச் சுவடிகளைக் கையாளுவதிலும் கஷ்டம் உண்டு. ஸீகன்பால்கு ஐயா இந்தக கஷ்டங்களை உணர்ந்து எப்படியாவது முயன்று அச்சு யந்திரம் நிறுவித் தமிழில் அச்சுப் புத்தகம் உண்டாக்க எண்ணினர். இவர் சிறுவர்கட்கு பாடசாலை ஏற்படுத்தினபோது பாடப் புத்தகங்களின் அவசியம் ஏற்பட்டபடியால் இநத எண்ணம் இன்னும் அதிகமாக அவர் மனதில் ஊறியது. அன்றியும் தமிழர்களுக்குக் கிருஸ்துமத உண்மைகளைத் தெரியப்படுத்த வேண்டுமானல் ஏட்டுச் சுவடிகள் பயன்படா வென்றும், சொற்ப நேரத்திற் சொற்பச் செலவில் ஏராளமான அச்சுப் புத்தகங்களைப் பதிப்பித்து ஜனங்களுக்குச் சொற்ப விலைக்குக் கொடுத்தால், அல்லது இலவசமாக வழங்கினல், அவர்கள் வெகு எளிதில் மத உண்மைகளை தெரிந்து கொள்ளக் கூடும் என்றும் இவர் நன்குணர்ந்திருந்தார். ஆகையால், இவர் இங்கிலாந்திலுள்ள கிருஸ்துவ அறிவு விளக்கச் சங்கத்துக்கும் ஜெர்மனி தேசத்தில் உள்ள தமது நண்பர்களுக்கும் கடிதம் எழுதி தமிழ் நாட்டில் அச்சுப் புத்தகம் இல்லாத குறையையும் அச்சுப் புத்தகத்தினல் உண்டாகக் கூடிய நன்மைகளையும் எடுத்துக் காட்டி, அச்சு யந்திரம் அச்சு எழுத்துக்கள், காகிதம் முதலியவற்றை அனுப்பி உதவி புரியுமாறு அவர்களைக் கேட்டுக் கொண்டார், அவ்வாறே அவர்களும் அச்சு இயந்திரம் முதலியவற்றைஅனுப்பிஉதவிபுரிந்தனர்

ஜெர்மனி தேசத்திலிருந்து ஒரு அச்சு யந்திரமும், தமிழ் அச்செழுத்துக்களும் அச்சு வேலையில் தேர்ச்சி பெற்ற ஆல்டர் என்னும் பெயருள்ள இரண்டு சகோதரர்களும் அனுப்பப்பட்டனர். ஸீகன்பால்கு ஐயர் கடித மூலமாக எழுதி யனுப்பிய தமிழ் எழுத்துக்களைப் பார்த்து, முன்பின் தமிழறியாத ஜெர்மனி தேசத்தார் தமிழ் அச்செழுத்துக்களை உண்டாக்கியது அதிசயந்தான். இந்த அச்செழுத்துக்கள் ஜெர்மனி தேசத்தில் ஹாலி நகரத்தில் உண்டாக்கப்பட்டன. அங்கிருந்து அனுப்பப்பட்ட அச்சு யந்திரம் முதலியவை 1713-ம் ஆண்டு ஜூன் திங்களில் தரங்கம்பாடி வந்து சேர்ந்தன. இவற்றைக் கொண்டு மேற்படி ஆண்டிலேயே தமிழிற் சில புத்தகங்களை அச்சிட்டு வெளிப்படுத்தினர் ஜெர்மனியிலிருந்து வந்த அச்செழுத்துக்கள் பெரியவையாயிருந்தபடியாலும் அவற்றல் அச்சிடும்போது காகிதத்தில் அவை அதிக இடத்தைக் கவர்ந்து கொண்ட படியாலும், அக்காலத்தில் அச்சிடுவதற்குக் காகிதங் கிடைப்பது அருமையா யிருந்தபடியாலும், காகிதச் சிக்கனத்தை முன்னிட்டு தரங்கம்பாடியில் சிறிய அச்செழுத்துக்களை உண்டாக்கினர். ஐரோப்பாவிலிருந்து போதிய அளவு காகிதம் அச்சிடுவதற்கு அனுப்பப் படாமையால், தரங்கம்பாடியிலேயே காகிதப் பட்டறை யொன்றை நிறுவிக் காகிதம் செய்ய முயன்றார். இந்தக் காகிதப்பட்டரையில் செலவுக்குத் தக்கபடி பலன் கிடைக்காதபடியால், சிறிது காலத்துக்குப் பிறகு அது மூடப்பட்டது.

1713ம் ஆண்டுமுதல் தரங்கம்பாடியில் ஸீகன்பால்குஐயரால்அச்சிடப்பட்டபுத்தகங்கள் பொதுஜனங்களுக்குச் சொற்ப விலைக்கு விற்பனைசெய்யப்பட்டபடியால் அவைகளை ஜனங்கள் ஆவலுடன் வாங்கி ஆசையோடு படிக்கத் தொடங்கினர்கள். ஜனங்கள் தரங்கம்பாடி அச்சுக்கூடத்திற்குச் சென்று அச்சுயந்திரத்தைக் கண்டு ஆச்சரிய பட்டதோடு ஓலைச்சுவடிகளைவிடப் பல வழிகளிலுஞ் சிறப்புடைய அச்சுப் புத்தகத்தை வாங்கி வாசிக்கத் தொடங்கினர்கள். தமிழ் நாட்டிற் பொது ஜனங்களுக்கு முதல் முதல் அச்சுப் புத்தகம் வழங்கிய பெரியார் ஸீகன்பால்கு ஐயரே ஆவர். தமிழ் மொழியை பொறுத்தவரையில் ஸீகன்பால்கு ஐயர் செய்த தொண்டு இது ஒன்றுதான். தமிழ் நாட்டில் தோட்டி முதல் தொண்டமான் வரையில் எல்லோரும் அச்சுப் புத்தகத்தை உபயோகிக்கும்படி செய்தவர் என்கின்ற முறையில் இவரது பெயர் என்றும் மறக்கற்பாலதன்று''

க்ருண்டலர் தேவனம்பட்டினத்திலும் சென்னையிலும் பள்ளிகள் நிறுவி திறம்பட நடத்தி வந்தார். ஒவ்வொரு நகரிலும் போர்ச்சுகீசிய மொழியிலும் தமிழ் மொழியிலுமாக இருபள்ளிகள் நடைபெற்றுவந்தன. இப்பள்ளிகள் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியாரின் ஆதரவும் உதவியும் பெற்று வந்தன. இவைகள் யாவும் தர்மப் பள்ளிகளேயாகும்.

சீஜன்பால்கும் க்ருண்ட்லரும் 1719, 1720-ல் மறைந்த பின்னர் ச்யூல்ட்ஸ் தொடர்ந்து தொண்டாற்றி வந்தனர். சென்னை வந்து சேர்ந்ததும் ச்யூல்ட்ஸ் பாதிரியார் மேலும் இருபள்ளிகளை மாணவர்கட்கென்றும் மாணவிகட்கென்றும் நிறுவினர், 1743 வரையில் தொண்டாற்றி பின்னர் உடல்நலக் குறைவினல் ஹாலே திரும்பினர்.

ச்யூல்ட்ஸ் பாதிரியார் பைபிள் வேதத்தை தெலுங்கு மொழியில் மொழிபெயர்த்து தெலுங்கு மொழிக்கு ஆக்கந் தேடினர். கீஸ்லர் (Geisler) என்பாரும் கிர்னன்டர் (Kieruander) என்பாரும 1742-ல் தேவனம்பட்டினத்தில் யூரேஷ்யர்கட்கும் தமிழர்கட்கும் தனித்தனி பள்ளிகள் நிறுவினர். பேப்ரிசியஸ் (Babricius) என்பார் எளிய தமிழ்ப் பாடல்கள் இயற்றி அப்பாடல்களை மாணவ மாணவிகட்குக் கற்றுத் தந்தார் வேப்பேரியில் சர்ச் ஒன்றும் ஆண் பெண் பள்ளிகள் இரண்டும் இவர் நடத்தி வந்தது குறிப்பிடத்தக்கதாகும். பரண்டிச்சேரியை அடுத்த வீராம்பட்டினத்தில் எம். மத்தான் என்பவரால் ஒரு பள்ளி நடத்தப்பட்டு புகழ் பெற்றதும் குறிப்பிட வேண்டியதாகும்.

இப்பாதிரிமார்கள் யாவரும் பெரும் முயற்சி எடுத்துக்கொண்டு தமிழ் அகராதி ஒன்று இயற்றியது கூறவேண்டியதாகும். தமிழ்-ஜெர்மன் அகராதி தயாரிப்பதில் பெரும் பங்கு எடுத்துக் கொண்டவர் பேப்ரிசியஸ் அவர்களாகும். இந்த அகராதியை தயாரிப்பதின் காரணமாக பேப்ரிசியஸ் பெரும் கடனாளியாக ஆகவேண்டியதாயிற்று. இவருக்குக் கடன் கொடுத்து உதவிய திராவிட லேவாதேவிக்காரன் ஒருவன் வழக்குத் தொடுத்தான். கடனை கொடுக்க முடியாத பேப்ரிசியஸ் சிறைவாசம் புக நேரிட்டது. கடன்பட்டும் தமிழ்த் தொண்டாற்றிய இப்பாதிரிமார்களுக்கு தமிழ் என்றும் கடப்பாடுடையதாகுமல்லவா!

1711-ல் எஸ். பி. சி. கே. சங்கத்தினரால் தரங்கம்பாடிக்கு ஒரு அச்சு யந்திரம், இயக்கும் இருவர் மற்றும் பல சாதனங்கள் அச்சு யந்திரத்துடன் வந்து சேர்ந்தன. சீஜன்பால்க் தாம் வரும்போது ஜெர்மனியிலிருந்து 1000 பவுன் தொகையும் சில ஆயிரம் புத்தகங்களும் சில யந்திர சாதனங்களும் கொண்டு வந்ததும் குறிப்பிடக் கூடியனவாகும்.

சி. எப். ச்வார்ட்ஸ் (C. F. Schwartoz) என்பார் தமிழ் நாட்டில் கல்வித் துறையில் பல அடிப்படைக் காரியங்களை சாதித்தவராகும். இவர் ஹாலே பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர் 1750-ல் திராவிடத்தை வந்தடைந்தார். திருச்சியிலும் தஞ்சையிலும் இவரால் துவக்கப்பட்ட கல்விக்கூடங்களை பற்றி மட்டும் இங்கு குறிப்பிட விரும்புகிறேம். திருச்சிக் கோட்டையில் 1772-ல் ஒரு வெடிவிபத்து ஏற்பட்டது. இவ்விபத்தில் நூற்றுக்கணக்கான தமிழ் சிப்பாய்களும் ஆங்கில சோல்ஜர்களும் இறந்துபட்டனர். இதனல் பல குழந்தைகள் அனதைகளாகிவிட்டன. பல பெண்கள் கைமையடைந்து ஆதரவற்றவராகிவிட்டனர். இவர்களை யெல்லாம் பராமரிப்பதற்கும் குழந்தைகளுக்கு கல்வி கற்பிப்பதற்கும் ஆன தர்ம காரியங்களைச் செய்ய முன்வந்தார் ச்வார்ட்ஸ். இவரது முயற்சி வெற்றி பெற்றது. வெஸ்டரி ஸ்கூல் என்ற ஒரு தர்ம பாடசாலையையும் வெஸ்டரி பண்ட் என்ற ஒரு தர்ம நிதியையும் ஏற்படுத்தினர். ஐரோப்பிய குழந்தைகட்கு மட்டுமல்லாது திராவிட சிப்பாய்களின் குழந்தைகட்கும் இவர் ஏற்படுத்திய பள்ளியில் கல்வி புகட்டப்பட்டு வந்தது.

1774-ல் ச்வார்ட்ஸ் சென்னை செயின்ட் ஜியார்ஜ் கோட்டை கவர்னரால் மைசூர் ஹைதரலியிடம் தூதுவராக அனுப்பப்பட்டார், தாம் மேற்கொண்ட தூது வேலையை வெற்றிகரமாக முடித்து வைத்தார் ச்வார்ட்ஸ். இதில் மகிழ்ச்சியடைந்த ஹைதர் அலி ச்வார்ட்சுக்கு ஒரு பெரும் பொன் முடிப்பைப் பரிசாக அளித்தார். இப்பொன் முடிப்பைத்தானே யடைய விரும்பாத ச்வார்ட்ஸ் சென்னை கவர்னரிடம் ஒப்படைத்தார். ஆனல் கவர்னரோ இது உமக்கே உரியதாகும் எனக்கூறி பொன் முடிப்பை ச்வார்ட்சிடமே திருப்பிக் கொடுத்து விட்டார். அத்தொகையால் தமக்கு எவ்வித பயனும் இல்லையெனக் கூறி தஞ்சையில் ஒரு தருமப்பள்ளிக்கூடம் ஏற்படுத்துவதற்கு பயன்படுத்துவதாகவும். பள்ளிக்கூடம் கட்டுவதற்கான இடம் ஒன்றை சர்க்கார் அளிக்க வேண்டுமென்றும் ச்வார்ட்ஸ் கேட்டுக் கொண்டார். சம்மதம் அளித்த கவர்னர் தஞ்சையில் பள்ளி நிறுவுவதற்கான இடத்தையும் அளித்தார். ச்வார்ட்ஸ் தஞ்சையடைந்து அங்கு ஒரு தர்மப்பள்ளியை ஏற்படுத்தினர். இத்தர்ம ஸ்தாபனம் "தஞ்சை ஆங்கில தர்மப்பள்ளிக்கூடம் (The Tanjore English Charity School) என வழங்கிற்று. இப்பள்ளியிலும் ஆங்கிலேயர்களிடம் ஊழியம் பார்த்து வந்தவர்களின் சிறுவர்கட்கும் மற்ற திராவிட ஊழியர்களின் சிறுவர்கட்கும் கல்வி புகட்டப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கதாகும்,

—தொடரும்.

—திராவிடப்பித்தன்

நாடு என்றால் என்ன?

எம். எஸ். ராமசாமி.

15

சிலர், களவியல் என்பது உள்ளப் புணர்ச்சி மட்டுமின்றி மெய்யுறு புணர்ச்சியும் கொள்ளப்படும் என்று கூறுவர். அத்தகையோர் ஆரிய ஒழுக்கமாகிய காந்தருவ மணத்திற்கும், நமது களவியலுக்கும் வேறுபாடுகள் கிடப்பதை அறியாதோரே யாவர். பருவமீறியும், கற்பியல் மரபு கடந்தும் செய்யப்படுகிற திருமணம் ஒருவாறு ஒப்புக் கொள்ளத் தக்கதாய் இருப்பினும், அது களவியலோடு சேர்க்கப்படாமல் ஓரோவழி காந்தருவ ஒழுக்கத்தின்பால் சேர்க்கப்படலாம். இதன் உண்மையை

'இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கில்
காமக் கூட்டம் காணுங்காலை
மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்
துறையமை நல்லியாழ்த் துணைமையோர் இயல்பே'

என்றும்,

'மறையோர் மன்றல் எட்டிவை அவற்றுள்
துறையமை நல்லியாழ்த் துணைமையோர் இயல்பிதன்
பொருண்மை என்மனார் புலமையோரே'
அதுவே,—தானே அவனே தமியர் காணக்
காமப் புணர்ச்சி இருவயின் ஒத்தல்'

என்றும்,

'அன்பின் ஐந்திணை களவெனப் படுவது
அந்தணர் அருமறை மன்றல் எட்டனுள்
கந்தருவ வழக்கம் என்மனார் புலவர்'

என்றும் கூறிய தொல்காப்பியம் இறையனார் அகப்பொருட் போதங்களில், பிறநாட்டுக் கந்தருவ வழக்கம் வேறாக உளதென்றும் அதனை ஒருபுடைஒத்த இயல்பில் இருப்பதே நமது களவியல் என்றும், வகுத்துக் காட்டி இருப்பதுடன், பேராசிரியர் நச்சினார்க்கினியர் தொல்காப்பியம் பொருளதிகாரம் — களவியல் 1-ம் சூத்திரத்திற்கு உரை செய்த இடத்தில் 'காந்தருவ வழக்கம் கற்பின்றியும் நிகழுவதாகலின்' என்று களவியலினின்று வேறுபடுத்திக் காட்டியிருப்பதே போதிய சான்றாகும்.

'அதிர்ப்பில்லைம் பூணும் ஆடவரும் தம்மில்
எதிர்ப்பட்டுக் கண்டியைதல் என்ப—கதிர்ப்பொன் [யாழ்
மூந்திருவர் கண்ட முனிவறு தண்காட்சிக்
கந்திருவர் கண்ட கலப்பு'

என்னும் பழம்பாட்டு கந்தருவருடைய ஒழுக்கத்தை பறைசாற்றும். வடவாரியர் இலக்கியங்களில் மேனகை, ஊர்வசி, திலோத்தமை, அரம்பை, விசுவாசி, கிருதாசி அலம்புடை, மிசிரகேசி, பானுமதி, அபலை, இரம்மியை, பஞ்சசூடை, வாசஸ்பதி, இருஸ்தலை, புஞ்சிதஸ்தலை, பிரமலோசை, அனுமிலோசை, சகசங்கியை, பூர்வசித்தி, அனங்க திலகை முதலானவர்கள் காந்தருவப் பெண்கள் என்று சொல்லப்படுகிறார்கள். இவர்களை தேவலோகத்து வேசிகள் என்றும் அப்சரசுகள் என்றும் சொல்லப்படுகின்றனர்.

இவர்கள் இந்திரன் ஏவியபடி தவம் செய்வோரின் தவத்தைக் கெடுப்பதும், கண்டவருடன் விபசாரம் செய்வதும் குழந்தைகளைப் பெறுவதும், பின்பு அவற்றைக் காட்டில் எறிந்துவிட்டு வருவதும் வழக்கம் என்று ஆரிய இலக்கியங்கள் பலவற்றில் காணலாம்.

இவர்களுடைய விபசாரச் செயலையே கந்தருவ மணம் என்று சுவேதகேது கூறினார். இதனை தமிழனுடைய களவியலுடன் எப்படி சேர்த்துக் கூறமுடியும்?

கந்தருவ மணத்திற்கு உதாரணமாக சிலர், சகுந்தலை கதையைக் கூறுவர்! அதாவது:

சகுந்தலையை அவள் வயிற்றில் பிறந்த பரதனுடன் துஷ்யந்தன் சேர்த்துக் கொண்டதால், அது களவியலில் தொடங்கி கற்பியலில் முடியவில்லையா? என்பர்.

அந்தக் கதையின் தன்மை களவியலுக்கு ஒத்ததாக இல்லை. சகுந்தலை சாமர்த்தியமாக துஷ்யந்தனிடம் திருமணம் செய்து கொள்ளுமாறு முத்திரை மோதிரத்துடன் சத்தியமும் வாங்கிக் கொண்டிருக்கிறாள். அந்தக் காரணத்தாலேயே பின்பு அவளை துஷ்யந்தன் சேர்த்துக் கொண்டான் என்று கருத முடிகிறதே தவிர, களவியலைப்போல் ஒருவரை யொருவர் விரும்பியதாகவோ' பிரிவினால் ஆறாத் துயரம் அடைந்ததாகவோ கதையின் போக்கு இல்லை. அதே சகுந்தலையின் தாயான மேனகையை விசுவாமித்திரன் மனைவியாக ஏற்றுக் கொள்ளாத செயல் ஒன்றே, ஆரியரின் கந்தருவ ஒழுக்கம் இழிதகைமை கொண்டதென்று கூறுவதற்குத் தக்க சான்றாகும்.

தமிழ் இலக்கியங்களில் 'மடல் ஊர்தல் என்று ஓர் வழக்கு உண்டு. உள்ளப் புணர்ச்சியால் பிரிந்த காதலன், காதலியை கற்பியல் முறைப்படி திருமணம் செய்வதற்காக முயன்றபோது, காதலியின் பெற்றோர் முதலியோர் இசையாமல் இருப்பாராயின் அவர்கள் மனமிரங்கும்படி தன்னைத்தானே வதைத்துக் கொள்ளும் கடுமையான முயற்சியே மடல் ஊர்வதாகும்.

அதாவது: — பனை மட்டைகளால் குதிரை செய்து, அதன்மேல் தான் காதல் கொண்ட மங்கையின் உருவப் படத்தைக் கொடியில் பிடித்துக் கொண்டு ஏறி, ஊர் வலம் வந்து 'தன்னுடைய காதல் மெய்க் காதல்' என்று ஊரறியச் செய்வதாகும். பெண்ணைத் திருமணம் செய்து கொடுக்க இசையும் வரை உணவு, உறக்கம் நீக்கி மடல் குதிரையிலேயே தலைவன் இருப்பான்.

இந்த வழக்கம் இப்போது—நடைமுறையில் இல்லாதபோது—இதனை எழுதி விளக்குவதால் என்ன பயன்? என்று கேட்கலாம். ஆம்; நடைமுறையில் இல்லை என்பது உண்மைதான். ஆனால், எந்த சமூகமும் அதனதன் இலக்கிய வழியிலிருந்தே பண்பையும் தேசிய உணர்வையும் பெறுவது இயற்கை. இலக்கியங்களில், நடைமுறையில் இல்லாத வழக்கம் ஒன்றைக் கூறப்பட்டிருப்பினும், அந்த வழக்கத்தின் அடிப்படையான மனப்பண்பு மாறிவிடாது. அந்த மனப் பண்பை விளக்க வேண்டிய அவசியம் இருப்பதால், நடைமுறையில் இல்லாத வழக்கத்தையும் விவரிக்கிறோம்.

காதலின் உச்சமான நிலையை வெளிப்படுத்துவதற்கு அக்காலத்தில் மடல் பயன்பட்டிருக்கிறது. மடலூரத்துணிந்த ஒருவனுக்கு அவனுடைய காதலியைத் தவிர உலகமே இல்லை—'அவளே உலகம்—உலகமே அவள்' என்கிற மனப்பான்மை கொண்டு விடுகிறான். எனவே, அவன் 'காதல் இன்றேல் சாதல்' என்ற முடிவில் இருக்கிறான்.

'காமம் உழந்து வருந்தினார்க்கு ஏமம்
மடல் அல்லது இல்லை வலி'

என்று வள்ளுவர் கூறினார். பிற்காலப் புலவர்கள் மடல் என்னும் பேரால் சுவைமிக்க பல நூல்களை இயற்றி இருக்கின்றனர். அவற்றில் களவியலால் உள்ளப் புணர்ச்சிபெற்ற தலைவனின் உள்ளப்பாங்கு நன்கு சித்தரிக்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாக வருண குலாதித்தன் மடல் வருமாறு:—

"அண்டர் குறைத்தமரம் ஆனேன் அடல்வேழம்
உண்ட விளங்கனிபோல் உள்ளுடைந்தேன்—அண்டி [வரும்
தீவாடை யாலே தியங்கினேன் பார்மடந்தை
மாவாடை யாலே மயங்கினேன்—காவின்
செழுந்தென்றல் ஊடாடச் செந்தீ வடவைக்
கொழுந்தென்ற லாலே குறைந்தேன்—தொழுத் [தகைய
காளகண்ட வாள்விழியார் கட்டுரைகே ளாச் [செவியில்
காளகண்ட ஓசைபுகக் கன்றினேன்—மேளமிகும்
தந்திமருப் பெண்ணும் தடமுலையார் கார் அளகப்
பந்திமழை காணாப் பயிரானேன்—முந்தி அருள்
தாவிப் பொழியுமுகச் சந்த்ரோதயம் காணா
வாவிக் குமுத மலரானேன்—பாவியேன்
புண்ணான நெஞ்சுதனில் பொங்காரம் விட்டாரக்
கண்ணால் ஒருவரையும் காண்கிலேன்—எண்ணில்
விரகாதி மோக விளைவாம் கடலின்
கரையேறு கின்றவழி காணேன்—உருகிமனம்
பேராசை கொண்டேன் பிழைக்கும் பொருட்டாகச்
சோராது ஒருநினைவு தோன்றிற்று—நேராகக்
காமம் உழந்து கலங்கி வருந்தினார்க்கு
ஏமம் மடலல்ல தில்லிவலை—ஆமெனவே
சொன்னதிரு வள்ளுவரைத் தோத்திரம் செய்தேன் [கருத்தில்
உன்னிமடல் ஊர்தற்கு ஒருமித்தேன்—வன்னநறும்
தாதளவும் செய்ய இதழ்த் தாமரைப்பூங் [கண்ணாரைக்
காதளவும் தாவடிபோம் கண்ணாரைச்—சீதமுலைச்
சூதாரை எல்லையற்ற சூதாரை வள்ளைஎனும்
காதாரைச் சற்றும் இரங்காதாரைப்—போதாகம்
செய்யாரை மிக்கமறம் செய்தாரைக் காந்தள்எனும்
கையாரை என்னளவிற் கைத்தாரை—வெய்யமயல்
தந்தாரைப் பூங்குழலின் தாராரை மாலளிக்க
வந்தாரைக் கொங்கையின்மேல் வாராரை—சிந்தை [வெறும்
கல்லாரை மன்மதநூல் கற்றாரை மைப்புருவ
வில்லாரை ஏழுலகும் விற்பாரை—நல்லபடம்
தன்னிலவர் வன்னெஞ்சம் தானெழுதிய மங்கைநல்லார்
என்னும் படிவம் எடுத்தெழுதிப்—பின்னர்
சடைகட்டி வெண்ணூறு சாத்திநறும் பூளைத்
தொடைகட்டி வெள்ளெருக்குச் சூடி—உடல்கருக
நெஞ்சதிர அன்றெரித்த நித்தன் இவன் என்றுமலர்ப்
பஞ்சசர வேளும் பயப்படவே—விஞ்சமுதச்
செம்பவள வாயார் திருவேளைக் காரனென
அம்பொன் நெடுங் காகளங்கள் ஆர்ப்பவே— [கும்பமுனி
சொற்றகைமை மால்விளக்கும் தொல்காப்பியம் [தெளிந்தே
உற்றபெரி யோர்நாற்பத் தொன்பதின்மர் [நற்றமிழ்நூல்
சேரு.................................தருணமயல்
தீர்வேன் பலர்காணத் தென்நாளக வீதியில் சென்று
ஊர்வேன் பனைமா உகந்து

பனைமா—பனைமடலால்செய்த குதிரை. இதற்குப் பொருள் கூறப்புகின் மிக்க விரியும் என்று அஞ்சி விடுத்தனம். தக்கார் வாயிலாகப் பொருள் தெரிந்து கொள்வாராக,

வடவர் இலக்கியங்களில் எட்டு வகைத் திருமணங்களை வகுத்த சுவேதகேது ஆரியர்களுக்குள் அக்காலத்தில் நடைபெற்று வந்த வழக்கங்களை ஆராய்ந்து அவற்றில் மிகவும் கீழ்த்தரமான செயல்கள் மூன்றிற்கு அசுரம், இராக்ஷதம், பைசாசம், என மூன்று மூன்று பெயரிட்டார்.

அதன் பிறகு பெண்ணைப் பெற்றவன், அந்தப் பெண் பக்குவமடையாத இளம் பருவத்தில் மணமகனை வலியர் தேடிப் பிடித்து மணம் செய்து கொடுப்பதே அறிவுடையோர் செயலென்று ஆத்திரத்தில் அறிவழிந்த நிலையில் ஏற்படுத்தியதே பிரம மணம்!

அதன்பிறகு பார்ப்பனரிடமும் ரிஷிகளிடமும், கலந்தாலோசனை செய்து அவர்களுடைய வேத வேள்வி முறைகளுக்குப்

'ஆரியரின் தெய்வப் ப்ரீதியான யாகங்கள்...?'

நாடு என்றால் என்ன—தொடர்ச்சி

பங்கம் வராதபடி அவர்களைத் திருப்தி செய்வதற்காக தெய்வ மணமும், ஆரிய மணமும் ஏற்படுத்தப்பட்டன.

அதன் பிறகு திராவிடருடைய சிறந்த ஒழுக்கங்களான கற்பியலையும் களவியலையும் தழுவிப் பிரசாபத்ய மணமும், காந்தருவ மணமும் ஏற்படுத்தினர். இதனை.

"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப"
—தொல். கற்பு 4

என்னும் தொல்காப்பியச் சூத்திரத்தால் உணரலாம்.

ஆரியர்களுடைய பூர்வீக ஒழுக்கம் இப்படி இருந்ததனாலேயே அவர்களுக்கிடையில் 'காதல் வாழ்வு' பற்றிய இலக்கியங்களைக் காண முடியவில்லை.

இன்று ஆரியர்களாலும் அவர்களுடைய ஆதரவாளர்களாலும் பெருமைப் படுத்தப் படுகிற இராமாயணமும் நாம் முன்பு கூறிய பாரதக் கதை போன்ற ஒழுக்கம் கெட்ட கதையே ஆகும்.

இராமாயணக் கதையை ஆதியில் தமிழ்ப் பாக்களாக மொழி பெயர்த்த கம்பன் பெரும் 'புரட்டன்' ஆவான்.

ஏனெனில்: அதிலுள்ள இழிதகையாளரைத் தொழுதகையாளராகவும், தொழுதகையாளரை இழிதகையாளராகவும் மாற்றி—மறைத்து ஆங்காங்கு தமிழ் மரபைப் பூசி மெருகேற்றி ஆரியக் கதையின் அடிப்படையையே உருக்குலைத்து தமிழிலும் சேராமல் ஆரியத்திலும் சேராமல் விட்ட பெருமை கம்பனையே சாரும்.

அப்படி எல்லாம் செய்தும்கூட இராமனுதியரின் இழிதகைமை ஆபாசமாகப் பிதுங்கிக் கொண்டிருப்பதைக் கம்பராமாயணத்தில் இன்றும் காணலாம்.

இவைகளைப்பற்றி பெரியார் ஈ, வே. ரா., அறிஞர் அண்ணா, சந்திரசேகரப் பாவலர் ஆகியோர் விரிவாக ஆராய்ந்து வெளியிட்ட நூல்கள் பல இருக்கின்றன. ஆதலால், நாம் இங்கு அதிகமாக ஒன்றும் சொல்ல விரும்பவில்லை. அவர்கள் கூறாத சில குறிப்புகளும், இன்றியமையாத சில எடுத்துக்காட்டுகளும் இங்கு ஆராய்ந்து கொண்டு தொடர்ந்து செல்வோம்.

இராமாயணத்தில் நாம் ஆராயவேண்டியது இல்லறம்—கற்பொழுக்கம் இவை பற்றியதே.

இராமனுடைய வளர்ப்புத் தந்தையான தசரதனுக்கு ஏற்கனவே 60 ஆயிரம் மனைவிமார் இருந்தனராம். இவ்வளவும் போதாதென்று கௌசலை, சுமத்திரை கைகேயி ஆகிய மூவரை மணம் செய்கிறான்!

பிறகு பிள்ளை பேற்றிற்காக அசுவமேதயாகம் நடத்துகிறான், அசுவமேதயாகத்தில் "நிராயத்யா ஸ்வஸ்ய சிச்நம் மஹிஷ்யுபஸ்தே நிதத்தே" என்கிற ஆரிய வேத வசனப்படி இறந்த குதிரையின் பிணத்திற்கும் யாககர்த்தாவின் மனைவிக்கும் தேகசம்பந்தம் செய்வித்தலுடன் யாகப் புரோகிதரில் ஒருவனான 'அத்வர்யு' என்பவனைப் பிரமதேவனாகப் பாவித்து அவனுக்கு யாககர்த்தா தனது மனைவிமாரை தத்தம்செய்து பெண்டாளவிடுவது வழக்கம்.

அந்த வழக்கப்படி யாகப் புரோகிதர்களுக்குப் பிறந்தவர்களே இராமன், இலக்குமணன், பரதன், சத்துருக்கன் ஆகிய நால்வரும்!

இவ்வாறு பிறந்த பிள்ளைகள் ஒப்புக் கொள்ளத் தக்கவைகள் என்று மனுதர்ம சாத்திரம் கூறுகிறது.

"ஒருவன் பசுவினிடத்து மற்றொருவன் ரிஷபமானது நூறு கன்றுகளை உண்டு பண்ணினாலும் (கன்றுகள்) பசுவுக்குடையவனையே சாரும்"

(மனு. அத். 9 சுலோ 50)

"அப்படியே ஒருவன் மனையாளிடத்தில் மற்றொருவன் உண்டு பண்ணினபிள்ளை உடையவனைச் சாருமேயன்றி உண்டு பண்ணினவனைச் சாராது"

(மனு. அத். 9 சுலோ 51)

இந்த விதிப்படி பிறந்த இராமனுக்கு சீதை தவிர 128 மனைவிமார் இருந்தனராம்!

"கோசலோ பாநுமந்தச்ச மகதச் சித்ரபூஷணு
யுதாஜித் கேயாதிசோ காசிநாத பிரதான:"

என்னும் தெளர்வாச இராமாயணம் வசனத்தால் இராமனுக்குப் பெண் கொடுத்த மாமன்மார் 8 பேர் என்று தெரிகிறது.

"சீதாசீதம் தச்ங்காசா பூமிர் நீளா மஹாயசா
விமலோத் கர்ஷிணீ ஞானக்கிரியா யோகபிதாசா
ப்ரஹ சந்தித தேசானு நுக்ரஹா துளசிபலா
சாந்திஸ் ஸரஸ்வதி ப்ரீதி ரதிகாந்தி ப்ரபாவதி
பத்ரா சுபத்ரா விஜயா ப்ரஜ்ஞா காந்திர் தயாமதி
மஹீபலா மதுமதி பத்ராங்கி பத்மினி ஹயுஷா
வாக்ஜா ப்ரபாஸா வஸுதாரேவதி சுபலா கலா
இத்யாதி புண்ணிய நாரீணும் நவவிம் சோத்தரம்
[சதம்

என்று பாஞ்சராத்திராகம் பத்மஸம்ஹிதையில் விளக்கப்பட்டிருக்கிறது என்றும், இதுபோலவே பிரம்மாண்ட புராணத்திலும் கூறப்பட்டிருக்கிறது என்றும், பெரும்புலவரான த. ஆறுமுக நயினார்ப்பிள்ளை என்பார் இயற்றிய மகாசைவர் புராணத்தில் காணப்படுகிறது. மேலே கண்ட சமஸ்கிருத சுலோகத்தில், பூராவும் இராமனுடைய மனைவிமார் பெயரே இடம் பெற்றிருப்பதும் கடைசியில் "இத்யாதி புண்ய நாரீணும்" என்பது இவர்கள் முதலான நூறுபேர் என்ற பொருளில் முடிந்திருப்பதும் தக்கார் வாயிலாகக் கேட்டுணர்ந்து தெளிவாராக. இப்படிப்பட்ட இராமனை 'ஏகபத்தினி விரதன்' என்று அஞ்சாமல் கூறுகின்றான் கம்பன்!

பல மனைவியரோடு திரியும் கடையனுக்கு காதல் வாழ்வு ஏற்பட முடியுமா? ஒருக்காலும் முடியாது! ஆயினும் சீதைக்கும் இராமனுக்கும் இடையில் காதல் வாழ்வு இருந்ததாகக் கதைக்கிறான் கம்பன்.

இராவணனைக் கொன்று சீதையை சிறை மீட்டியதும் இராமன் அவளைக் கற்பழிந்தவள் என்று சந்தேகித்து 'தீயில் குளித்து வா' என்கிறான். அவள் தீயைப் பார்த்து நான் மனத்தினாலும் வாக்கினாலும் குற்றமற்றவள் என்கிறாள்.

'கனத்தினால் கடந்தபூண் முலைய் கைவளை
மனத்தினால் வாக்கினால் மறுவுற்றேன் எனில்
சினத்தினால் சுடுதியால் தீச்செல்வா! என்றாள்
வனத்துழாய் கணவற்கும் வணக்கம் போக்கினாள்'.

என்று கம்ப ராமாயணத்தில் கூறப்பட்டிருக்கிறது. மனம் வாக்கு காயம் மூன்றினாலும் நான் குற்றம் செய்ததில்லை என்று கூறுவது மரபு. சீதையின் சத்தியத்தில் காயம்—உடம்பைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. இதனால் அவள் விரும்பாத விதத்தில் கெடுக்கப்பட்டிருக்கிறாள் என்று கருத நேரிடுகிறது. இவ்வாறு தமிழ்க் கதை ஒன்று எழுதப்பட்டால் "தன் விருப்பத்திற்கு விரோதமாக கெடுக்கப்பட்டதால் அவள் உடனே இறந்து போனாள்" என்று முடிக்கப்பட்டிருக்கும். சீதை அவ்வாறு சாகவில்லை மாறாக கணவனிடத்திலேயே கூறுகிறாள்! அவனும் அதைப் பற்றிக் கவலைப்பட்டதாக இல்லை'

அயோத்திக்கு திரும்பியதும் வண்ணான் ஒருவன் குத்திக் காட்டிப் பேசினான் என்பதற்காக சீதையை ஈவிரக்கமின்றி காட்டில் கொண்டு போய்விடச் சொல்கிறான் அபபடி செய்வதால் தனக்கொன்றும் அவமானம் இல்லை என்றே கருதுகிறான்.

தமிழர்களுக்கு இத்தகைய —இதனினும் குறைந்த அவமானம் நேரிட்டபோதெல்லாம் வடக்கிருந்து உயிர்நீத்ததாக இலக்கியங்களில் அறிகிறோம், இராமன் அப்படி தற்கொலை முயற்சியில் இறங்கவில்லை சுகமாக நாடாள்கிறான். பிறகு, அசுவமேத யாகம் செய்கிறான். அப்போது சீதையின் மக்கள் இராமனையும், இலக்குமணனையும் நன்றாக உதைத்துவிடுகிறார்கள். அதற்குப் பிறகுதான் இராமன் ,, சரயுநதியில் இறங்கி வாழ்வை முடித்துக் கொள்கிறான்.

இந்த இராமாயணத்தில் துருவித்துருவிப் பார்த்தாலும் இல்லறம்—கற்பொழுக்கம் மருந்துக்குக்கூடக் காணோம். இவைகளைப் போலவே ஏனைய இலக்கியங்களும் இருக்கின்றன. இனி அவர்களுடைய அறம் ஈகை முதலியன பற்றி சிறிது ஆராய்வோம்.

ஆரியர்களின் அறச் செயல்களில் முக்கியமானது யாகங்கள்தான். யாகங்கள் பல வகைப்பட்டிருக்கின்றன. அவற்றில் முக்கியமானவை அஜமேதம், கோமேதம், அசுவமேதம், நரமேதம் முதலியனவாம்.

அஜமேதம் என்பது ஆட்டையும், கோமேதம் என்பது மாட்டையும், நரமேதம் என்பது மனிதனையும் கொன்று தின்பதாம். மேலே கண்ட ஆடு, மாடு, குதிரை, மனிதன் இவற்றோடு நூற்றுக் கணக்கில் விலங்குகள் பறவைகள் பலவற்றையும் வேத விதிப்படி கொன்று தின்பது' தான் யாகம்!

யாகத்தில் கொல்லப்படும் எல்லா உயிர்களையும் 'யாகப் பசு' என்று கூறுவது ஆரியர் மரபு. யாகத்தில் மனிதன் கொல்லப்பட்டால் மனிதனுக்கும் 'யாகப் பசு' என்றே பெயர். பசு என்பதற்கு உயிர் என்று வடமொழியாளர் பொருள் கூறுவர்.

மனித மாமிசம் முதல் தவளை மாமிசம் வரை தின்று சோமபானம் (ஒருவகைக் கள்) அருந்துவதைத்தான் 'தெய்வப் ப்ரீதி'யான யாகங்கள் என்று வேதங்கள் முழங்குகின்றன. இதுபற்றி, சுவாமி சிவானந்த சரஸ்வதி எழுதிய 'ஞானசூரியன்' எனும் நூலில் விரிவாகக் காண்க.

இதுவரையிலும் வடவாரியர் இலக்கியங்களில் அறத்துப்பால் பற்றி ஆராய்ந்தோம். இனி அவர்களுடைய பொருட்பால் பற்றி ஆராய்வோம்.

பொருளியலில் முதன்மையானது அரசியல். ஏனெனில் வாழ்க்கையின் அமைதிக்கும் நீதிக்கும் பாதுகாப்பாக இருப்பது அரசாங்கமல்லவா? எனவே பொருளியல் பற்றிக் கூறப்புகுந்த வள்ளுவர் 'இறைமாட்சி, என்னும் அதிகாரத்தை முதலில் வைத்தார்'

அத்தகைய அரசியலுக்கு கல்வி, கேள்வி, தெரிந்து வினை செய்தல், அமைச்சு படைவலிமை முதலியனவாகும். படைவலிமைக்கு உயிராக விளங்குவது வீரம். வீரத்தை அறநெறியில் பயன்படுத்துவதே போர் என்று சொல்லப்படும். அறமல்லாத வழிகளில் வீரங் காட்டுதல் அக்கிரமம், கொடுஞ்செயல், கொள்ளை, கொலை என கூறப்படும்.

வடவாரிய இலக்கியங்களில் கொலை புரிதலும், கொடுஞ்செயல் புரிதலும், வீரம் போர் என்றெல்லாம் வர்ணிக்கப்பட்டுள்ளன,

உதாரணமாக இராமாயணத்தையே எடுத்துக் கொள்வோம். தாடகை பெண்பாலாகவும், நிராயுதபாணியாகவும் இருந்தும் கூட அவளை இராமன் கொன்றிருக்கினான்.

இராவணன் தங்கை சூர்ப்பனகை, இராமனைப் பலாத்காரம் செய்தாள் என்கிற பொருத்தமற்ற—போலிக் காரணம்—குற்றம் என்பதாகக் காட்டி—எவ்வித முன்னறிவிப்பும் இன்றி அவளை மூக்கையும், மார்பையும் அறுத்திருக்கிறான். இது, அறிவும் ஆண்மையும் உள்ளவர்கள் கற்பனை செய்யக்கூட முடியாத கொடுஞ்செயலாகும்.

வாலி, சுக்கிரீவனுடன் போராடும் போது பக்கத்தில் ஒளிந்திருந்து அவனைக் கொன்றது பேடிகள் செய்யும் கொலைபாதகச் செயலாகும்.

இராமாயணத்தை திட்ப நுட்பமாக ஆராய்ந்தால் இவைபோன்ற இழி செயல்கள் ஏராள்மாக அகப்படும். இத்தனையும் செய்த இராமன் மாபெரும் வீரனாகப் போற்றப்படுகிறான்! —(தொடரும்)

கேள்வி? பதில்.

—அஞ்சா நெஞ்சன்—

கே: இன்று காணும் தமிழக—கேரளத் தகராறு, தமிழர் ஆந்திரர் தகராறு முதலியவைகள் திராவிட கூட்டாட்சியில்மட்டும் ஏற்படாதா? அப்போது திராவிட கூட்டாட்சியின் லட்சியம் சிதைவு அடையாதா?

—டி. சாமி, அரக்கோணம்

ப: தோழரே, திராவிட நாட்டுப் பிரிவினையின் அடிப்படைக் கொள்கையைத் தாங்கள் ஆர அமர சிந்தித்துப் பார்த்தால், தாங்கள் கூறும் தகராறுக்குச் சிறிதும் இடமில்லை யென்பது புலப்படும். திராவிட கூட்டாட்சி என்பது தமிழ், ஆந்திரம், கேரளம், கன்னடம் ஆகிய நான்கு மொழிவழி மாநிலங்களும் அரசியல், பொருளாதார மொழித் துறை அனைத்திலும் ஒன்றையொன்று ஆதிக்கம் செலுத்தாமல், சுதந்திரமுடன் இயங்குவதோடு, பாதுகாப்பு போக்குவரத்து போன்ற முக்கிய பிரச்னைகளில் மட்டும் கூட்டாட்சி முறையில் இயங்குவதாகும்.

அவ்விதம் அமையப் பெறும் திராவிடக் கூட்டாட்சி கூட அந்தந்த மாநிலங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் குறிப்பிட்ட பிரதிநிதிகள் அங்கம் வகித்து ஆவன செய்வர். இந்த கூட்டாட்சிக்காக செலவழிக்கப்படும் பணமும் சம்பந்தப்பட்ட மாநிலங்களின் வருவாய்க்கு ஏற்ப சந்தா முறையில் செலுத்த வேண்டிய வழியைப் பின்பற்றப்படும்.

இவ்வித நேர்மையான முறையில் வகுக்கயிருக்கும் திராவிட கூட்டாட்சியில் பிளவுக்கு வழி இருக்க முடியாது என்பதை உணர வேண்டுகிறேன்.

*

கே: அஞ்சா நெஞ்சரே சிவாஜி கணேசன் நடிக்கும் படங்களைப் பார்க்கக் கூடாதென தி. மு. கழகம் ஏதாவது தீர்மானம் நிறைவேற்றி யிருக்கிறதா?

—சு. திருமால், புதுப்பேட்டை, கிருஷ்ணகிரி

ப: அன்பரே உமது கேள்வியில் நூற்றுக்கு ஒரு சதவிகிதம் கூட ஒழுங்கு முறை இல்லையே? எனவே உமது கேள்வியின் அடிப்படைக்கான தீர்மானத்தை மக்களின் மகத்தான சக்தியாய் விளங்கிவரும் தி. மு. கழகம் பொருட்படுத்த முடியாதல்லவா.

*

கே: என். எஸ். கிருஷ்ணன் எடுத்த படித்த முட்டாள் என்ன ஆயிற்று? டி. ஆர். ராஜகுமாரி ஏன் இப்பொழுது படங்களில் நடிப்பதில்லை. அவரின் விலாசமென்ன? லலிதா பத்மினி இப்போது நடிக்கும் படங்கள் எவை அவர்களின் விலாசமென்ன?

—கே. பத்மாவதி, புதூர் திருச்சி

ப: அம்மையாரே வணக்கம், தங்களுக்கு அவசரமும் அவசியமுமாகக் கருதப்படும் இந்தக்கேள்விகளுக்கு பதில் கூறும் "ஆற்றல்" எனக்கில்லை. 'விலாசம்', தெரிவிப் பதில் மேதாவித்தனம் படைத்தவர்களிடம் கேட்டுப்பாரும்.

*

கே: நேருவின் நேர்மையான ஆட்சி சுயநலமில்லாத பொது நலப் பூங்கா என்றும், இன்றுள்ள ஆட்சியாளர்கள் அப்பூங்காவிலே பூத்துக் குலுங்கும் புது மலரின் எழில் மணம் ஏழை மக்களுக்கு எத்தகையது?

—இரா. அ. பழனிச்சாமி, இராசிபாளையம்

ப: தோழரே தங்களின் கேள்விகளிலுள்ள வர்ணனையே நொள்ளைக் கண்ணனுக்கு நல்லக் கண்ணுப்பிள்ளை என்று பெயரிட்டதைப் போன்றிருக்கும் போது—அதைப்பற்றி அபிப்ராயம் வேறு கூற என்னயிருக்கிறது.

*

கே: இந்து மதத்தலைவர்களும், கிருத்துவ மதத்தலைவர்களும் நம் நாட்டு கல்விக்காக செய்த நன்மைகள் என்ன?

—எ. அருணாசலம், தென்சென்னை

ப: இந்து மதத்தலைவர்கள் என்போர் மதத்தின் பேரால் சத்திரமும் சாவடியும், பொங்கலும் புளியோதரையும் அதுவும் குறிப்பிட்ட ஒரு வகுப்புக்கே பயன்படுமாறு செய்தனர். கிருத்தவமதத் தலைவர்களோ மதத்தின் பேரால் கூடுமான அளவு கல்விச் சாலைகள் மருத்துவ விடுதிகள் அமைத்தனர். ஆனால் சுயமரியாதை இயக்கத்தொண்டின் காரணமாக இந்து மதத்தவர்களில் சிலர் தங்களின் பத்தாம் பசலிக் போக்கிலிருந்து விடுபட்டு, கல்விச் சாலைகள், மருத்துவ விடுதிகள் அமைக்கும் அறிவுப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

சிட்டுக் குருவி சத்தின் தாது புஷ்டி லேகியம்

இந்த லேகியம் புருஷர்களுடைய நபும்ஸகம், அல்லது லௌகிக சுகத்தை அனுபவிக்க சக்தி இழந்து போதல் என்னும் துக்கரமான கொடிய வியாதியைப் போக்கி சுகபோகம் அனுபவிக்கச் செய்யும். மேலும் காம சம்பந்தமான பேச்சுகளை பேசும் பொழுதும். சொர்ப்பனத்தில் வீரியம் இழப்பதும் போன்றவற்றைத் தடுத்து பலமுள்ளவர்களாகச் செய்வது இச்சிட்டுக் குருவின் சத்தின் தாது புஷ்டி லேகியமாகும். இன்னும் விபரீத சேர்க்கையால் ஏற்படும் விபாதிகளான வெள்ளை. மூத்திர எரிச்சல், அடிக்கடி மூத்திரம் போதல், நீர் சுருக்கு, நீரடைப்பு முதலியவைகளை மாற்றி சுகமடைய செய்வதுடன் ஸ்திரீ புருஷர்கள் இழந்துபோன தேகவலுவைப் பெற்று அவரவர் அவரகளது தன்மையை அடைந்து மகிழ்ச்சியடையும்படி செய்வது. இச்சிட்டுக்குருவி சத்தின் தாது புஷ்டி லேகியத்தை 48-நாள் சாப்பிடவேண்டும், இதை ஆண் பெண் அனைவரும் சாப்பிடலாம்.

இத்தாது புஷ்டி லேகியத்தை பலவித பஸ்பங்களாலும், பலவித மூலிகைகளாலும் ஒன்பது வகை வித்துக்களாலும், பலவகை வேர்களுடன் கடைச் சரக்குகளும் சேர்ந்து இத்துடன் நெய், பால், தேன் கலந்து பல பிஸ்தாக்களும் ஒன்று கலந்து அதற்குத் தகுந்த முறையில் பதப்படுத்தி மணம் குணம் பொருந்திய உருசியுடன் கூடியது. இதனை அனைவரும் உண்ணலாம். பத்தியமில்லை; சுகமடையவாம். இதனை தொடர்ந்து ஒவ்வொருவம் அருந்தினால் ஆயுள் உள்ளளவும் மற்ற மருந்து அருந்த வேண்டியதில்லை. சிட்டுக் குருவி சத்தின் தாதுபுஷ்டி லேகியத்தில் தாம்பிர பஸ்பம்; அப்ரேக் செந்தூரம், வங்கபஸ்பம் அயச் செந்தூரம், காந்தச் செந்தூரம், கல்நார் பஸ்பம் முதலியவைகளை முறைப்படி செய்து இவை மிகவும் சிறந்த ஔஷதம்.

ஒரு மண்டலம் 48-நாள் சாப்பிடக்கூடிய லேகியம் சேர் 2-க்கு ரூ. 6—0—0

ஒரு மண்டலம் வாங்குவோருக்கு போஸ்டேஜ் இனாம்.

ஸ்ரீ முத்து மெடிகல் ஹால்

மதராஸ்—12

'இலட்சியக் கனவு'

சென்னை மூலக்கொத்தளம் பி. சுப்பராயன் உயர்தர நினைவுப் பள்ளி நிதிக்காக 8—5—55 மாலை வண்ணையம்பதி தியாகராயர் கல்லூரி கலாமண்டபத்தில் 'இலட்சியக் கனவு' என்னும் நாடகம் நடத்தப்பட்டது.

இந்நாடகத்தின் கதை வசனத்தை தோழர் ஜார்ஜ் அவர்கள் தீட்டியுள்ளார். நீதிவழுவாது ஆண்டு கொண்டிருந்த தமிழ் மன்னர்களின் அரச அவையிலே, ஆரிய அணங்குகளை ஆடவிட்டு, பின் அரசனையே ஆட்டிவைத்த ஆரியர்களது வஞ்சகச் செயல்கள் இந்நாடகத்தில் நன்கு சித்தரிக்கப்பட்டிருக்கின்றது.

கதையமைப்புக்கு ஏற்றாற் போலவே வசனங்கள் உணர்ச்சி மிக்கதாயும் — நகைச்சுவை நிரம்பியதாயும் இருந்தன.

நாடகத்தில் நடித்த நடிகர்களும் வசனங்களை நன்கு பேசி நடித்தது பாராட்டத்தக்கதாகும். ராஜகுருவின் பிரதம சிஷ்யன் சத்யாவாக நடித்த வண்ணையாபதி முத்துகிருஷ்ணன் அவர்களும் ஊர்வசியாக நடித்த தோழியரும் சிறப்புற நடித்தனர். மற்ற நடிக நடிகையரும் பாராட்டத் தக்க வகையில் நடித்தனர்.

இந்நாடகத்தை டைரக்ட் செய்த தோழர் ஈ. டி. மூர்த்தி அவர்களின் முயற்சி பாராட்டத் தக்கதே.

நாடகத்துக்கு அறிஞர் அண்ணா அவர்கள் தலைமை வகித்து நாடகத்தையும், ஜார்ஜ் அவர்களையும் பாராட்டிப் பேசினர்.

ஆரியசங்காரன்-சற்குணவதி

8-5-55 ஞாயிறன்று தோழர் எஸ். தியாகராசன் தலைமையில் தோழர் ஆரியசங்காரன் அவர்களுக்கும், தோழியர் சற்குணவதி அவர்களுக்கும் திருத்திய திருமணம் நடைபெற்றது.

தோழர் சா. தர்மராசன் திருந்திய மணச்சிறப்புகளை எடுத்துரைத்து அனைவரையும் வரவேற்றார்.

பம்பாய் தி. மு. கழகத் தோழர்களான பி. எஸ். செல்லையா, ம. இராஎ. ரெத்தினசாமி, எஸ். வள்ளிநாயகம் ஆகியோர் சொற்பெருக்காற்றி—மணமக்களை வாழ்த்தினர்.

தாயகத்திலிருந்தும், இலங்கை போன்றவிடங்களிலிருந்தும் வந்த தந்தி வாழ்த்துச் செய்திகள் வாசிக்கப்பட்டது வாழ்த்துமடல் அன்பளிப்புகள் அளிக்கப்பட்டன.

மணமகன் ஆரியசங்காரன் அனைவருக்கும் நன்றி நவில மணவிழா முடிந்தது.

திறந்த மடல்...தொடர்ச்சி

கள் ஏராளமிருக்க அவைகளைப்பற்றி யெல்லாம் வாய்மூடி மவுனியாகத் தாங்கள் காட்சி யளித்துக் கொண்டு வம்பை விலைக்கு வாங்கும் பேச்சுக்களில் தங்களின் 'அபார திறமை'யைக் காட்டுவதற்கு வேறு காரணம் என்ன யிருக்க முடியும்?

எவ்வளவோ முக்கியமான பிரச்னைகளைப்பற்றியும், அதற்கான நல்ல கருத்தை எடுத்துக் கூறுபவர்களின் விளக்கங்களையும் வெளியிட தாித்திரப்புத்தி அல்லது "மேல் ஜாதி" மனப்பான்மை காட்டிவரும் இந்து மித்திரன் போன்ற பத்திரிகைகள் தங்களின் அபத்தப் பேச்சுக்களை அறிக்கை என்ற பேரால் பத்திப்பத்தியாக வெளியிடுவதில் [illegible] நிற்கிறதா என்றும் ஐயப்படுகிறேன்.

எது எவ்வாறாயினும் தங்களைப்போன்றவர்கள் இவ்வித விபரீதப் பேச்சுக்கள் பேசித்தான் அரசியலில் நாங்களும் இருக்கிறோம் மறந்து விடாதீர்கள் என்று அதுவும் பத்திரிகை வாயிலாக நினைவூட்டும் அவல நிலைக்கு ஆளாகுவதைக் கண்டு உண்மையிலேயே வருந்துகின்றேன்.

தங்களின் அவசரப் போக்கிற்கு அல்லது சர்வாதிகார மனப்பான்மைக்கு எடுத்துக் காட்டாக கூற வேண்டுமானால், (1938-ம் ஆண்டில் தாங்கள் முதலமைச்சராயிருந்தபோது) இந்தி ஆதிக்கத்திற்குத் தூபம் போட்டு இரு தமிழ் வீரர்களைப் பலி வாங்கியதும் தங்கள் ஆட்சிமுறையின் கோளாறுதான் என்பதை இன்று அதாவது 17 ஆண்டுகளுக்குப்பின் இந்தி ஆதிக்கக் காரர்களைக் கண்டித்திருப்பது நாடறிந்துள்ள உண்மையாகும். இதுபோல இன்னும் பல சம்பவங்களை நான் எடுத்துக் காட்ட முடியும். எனவே இவ்வித கேலிக் கூத்துகளுக்கு மேலும் தாங்கள் ஆளாகாமல் இருக்க வேண்டுமானால் கண்ணன் காட்டிய வழியில் நடப்பதைவிட்டு களங்கமில்லா நல்வழியைக் காட்டும் வள்ளுவர் நெறியை அமைதியுடன் பின்பற்றுங்கள். அதில் நாவன்மைக்கு மட்டுமல்லாது அந்நாவன்மை சிறப்புறவும் மக்களுக்குப் பயன்படவும் ஆன நாவடக்கத்தைப் பற்றியும் கூறப்பட்டிருக்கிறது. இந்த வேண்டுகோளோடு எனது மடலை முடிக்கின்றேன். சிரமம் மன்னிக்கவும்.

அன்புள்ள, கூத்தரசன்



31

பழைய நினைவு!

தேடிவந்த சேகரை ஓடி ஓடி உபசரித்தாள் வனஜா. இருவரும் இதயக் கதவைத் திறந்து வைத்துக்கொண்டு இனிக்க இனிக்கப் பேசினர். இருள் தேய்ந்து ஒளி உதயமாகிக் கொண்டிருந்தது!

*

"வாழ்வுச் சிக்குகளை எடுத்து விடலாமென்று வகுவிலே கூறுகிறாய். அந்தச் சிக்குகள் தான் என்னைச் சித்திரவதை செய்து வந்ததென்பதை நீ எங்கே அறியப்போகிறாய்! எடுக்க முடியாத சிக்கை அறுத்தாவது சிரமத்தைக் குறைத்துக் கொள்ளலாமென்று அப்போதே நான் விரும்பியிருந்தால் இப்போது உன்னைக் கண்டாலே அடையாளம் புரிந்து கொள்ள முடியாத அளவுக்கு மாறிப்போயிருப்பேன். நெஞ்சத்துக்காதலுக்கு நஞ்சு வைத்துக் கொல்ல நான் விரும்பவில்லை சேகர்! கரும்பலகையிலே சாக்கட்டியால் எழுதி அழிக்கும் சித்திரமல்ல-காதல்! எகிப்து நாட்டு பிரமிட்டைப் போல, காலப்புயலால் சாயாமல் தலை நிமிர்ந்திருக்க வேண்டும்' இந்த எண்ணம் என் நெஞ்சிலே ஊஞ்சலாடிய காரணத்தால் தான்...காதல் நினைவுகள் வானவில்லாகவில்லை! சேகர்! மொட்டு மலராகா விட்டாலும், அந்த மலராத மொட்டுகூட மாற்றானிடம் சிக்கக் கூடாதென்றுதான் நடந்து வந்திருக்கிறேன்'

"இந்தப் பூங்கொடி எனக்குச் சொந்தமென்று உலகறிரக் கூற நான் காத்துக் கொண்டிருக்கும் போது யார் வனஜா போட்டியிட முடியும்? நான் கோளாக்காதினனாயிருந்தபோது கூவி அழைத்தாய் அன்று. இன்றோ, வண்ணப் புறாவைத் தேடி வந்திருக்கிறேன் நான் எண்ணத்தைக் கொட்டுகிறேன். இதயத்தைக் காட்டுகிறேன்."

'இந்த இதயம்...!

'உனக்கு சொந்தஇதயம்வனஜா. இனி நீதான் என் வாழ்வுவிளக்கு இருண்டு கிடந்த அலாவுதின் குகையிலே. அலைந்து திரிந்தேன், பயங்கரப் பாதையிலே ஏறியிறங்கினேன். குளிரோடையே, குற்றாலத்துக் குளுமையே நீ கிடைத்திருக்கிறாய் இப்போது. கரத்தில் சிக்கிய புதையலே, கழுத்தில் விழுந்த பொன்னாரமே! இனி உன் வாழ்வுப் பாதையிலே துணையிருப்பேன் கண்ணே! அதோ ஆடிப் பாடும் ஜோடிப் புறாக்கள். இனி நீ ஓடி ஓடிப் பிரியாதே என்றுதானே கூறுகிறது. முத்தமிடும் வண்டுக்கு முகத்தைக் கொடுக்கும் அந்த முல்லை மலரைப்பார்! போகாதே எனைவிட்டு —வேகாதோ என் நெஞ்சு என்று தானே இன்பகீதம் முழங்குகிறது. வீசியடிக்கும் தென்றல் பேசிச் சிரிக்கும் முல்லை மலர்க் கூட்டத்தை இன்பத்தால் ஆட வைக்கிறதே அந்த அழகைத்தான் பார். நொந்த வாழ்வு என்றென்றும் நம் சொந்த வாழ்வல்ல குயிலே! இருண்ட வாழ்வு இறந்தே போகட்டும். புதுவாழ்வு துவக்குவோம் பூரிப்போடு. நடந்த பாதையிலே விழுந்து விடுகிறோம். பிறகு எழுந்து நடப்பதில்லையா? ஓடிய மான் தேன் சோலைக்குத் திரும்பிவந்திருக்கிறது, விரட்டி விடாதே! ஓடிய கால்களுக்கு திரும்பிவரவும் சக்தியிருக்கிறதென்பதை இப்போதாவது உணர்ந்துகொள் வனஜா.'

'தேடிவந்த கால்களின் மீது வாடிய இதயத்தைக் குவிக்கிறேன். பாடிவந்த பொன் புறுவே இந்த மாணிக்கமலை எனக்குச் சொந்தமாகிவிட்டதா? தென்றல் தவழும் பூஞ்சோலைக்கு நான் தானா சொந்தக்காரி? என் சிந்தை கவர்ந்த சேகர்! தேன் செய்தி தந்துவிட்டாய். இந்த இனிக்கும் செய்திகிடைக்காதாயென்றுதான் காலமெல்லாம் காத்திருந்தேன் கனத்துப்போன இதயத்தோடு. புன்னகை சிந்தப்பேசி புதுச்சேதி தருவாயென்று கனவுகூடக்காணவில்லையே சேகர்!'

"வாழ்வு கனவல்ல வனஜா! புத்தகத்திலே படித்துத் தெரிந்து கொள்ளும் தத்துவமுமல்ல! உண்மை உலகை நெருங்கிப் பார்த்தால் தான் உள்ள ரகசியம் புரியும்......சுற்றிப் பார்த்தேன் இந்த சுயநல உலகை! சோர்ந்து விட்டன என் கால்கள். இப்போதுதான் புரிந்து கொண்டேன் எனக்காக ஏங்கியிருந்த ஒரு அன்பு இதயத்தைப் பற்றி. தேன்கூட்டைத் தேடி அலைந்தேன். எனக்காக ஒரு தேன்கூடு ஏங்கித் தவமிருந்ததை இன்று தான் புரிந்து கொண்டேன். சொல்லிலே ஜாலங் காட்டவில்லை நீ! கோவலனை எதிர்பார்த்த கண்ணகிபோல காத்துக் கிடந்தாய்... ஆனால் உண்மை எந்த மாதவியிடமும் நான் சிக்கவில்லை. உனக்கு ஒரே சொத்தான அத்தான் வந்துவிட்டேன். சாவுச் சங்கநாதம் முழங்கி பாலைவன மணலிலே தத்தித் தத்தி வந்த பைங்கிளி லைலாவைச் சந்திக்க ரத்த முத்திரையோடு ஓடி வந்தானே மஜ்னு, அப்படியல்ல...... காதற் கோயிலை கல்லறை கோட்டமாக்கிக் கொண்ட ரோமியோ ஜூலியட்டைப் போலவா? இல்லவே இல்லை!...ஊரும் உலகமும் வாழ்த்துக் கூறும் நிலையிலே உனைச் சந்திக்க வந்திருக்கிறேன். காலப் புயலுக்குப்பின் உனது நினைவு மாளிகைக்கு நான் வந்திருக்கிறேன்."

"நண்பர்களே பகைவர்களாகிறபோது—நல்லவர்களைப்பற்றி எடைபோடுவதென்பது சிரமமானதுதானே சேகர். எதிர்பாராத முறையிலே உனைச் சந்தித்தேன்...எதிர்பாராத முடிவையும் தந்தாய். என் வாழ்வுப் புத்தகத்திலே இன்ப அத்தியாயத்தின் முதல்பகுதியை எழுதிய இந்நாளை —பொன்னாளை என்றும் மறவேன் சேகர்!"

...அதற்குமேல் அவள் பேசவேயில்லை! பேசும்நிலையை ஏற்படுத்தி வைக்கவில்லை சேகர், கடிகாரத்தின் டிக்-டிக் ஓசையோடு போட்டிபோட்டுக் கொண்டு இச்—இச் ஒலியும் கேட்டுக் கொண்டேயிருந்தது. பிறருக்குக் கேட்காத குரலிலே அந்தக் காதல் குயில்கள் ரகசியம் பேசிக் கொண்டன. என்னதான் பேசிக் கொண்டார்களென்று திருப்பிக் கேட்டால், அவர்களுக்கே சரியாகத் தான் தெரியாது. பேசியவர்களுக்கே தெரியாத அந்தச் செய்தியைப் புரிந்துவிடத் துடித்தது ஒரே உருவம்! முக்காடிட்டு மறைத்த முகத்தை ஜன்லின் பக்கந் திருப்பியது. கலவரப்பட்ட வனஜா அழுத்தியிருந்த சேகரின் பிடியிலிருந்து விடுபட்டு நகர்ந்து சென்று ஜன்னல் கதவை அடைத்தாள். யாரோ மழைக்கு ஒதுங்கியிருக்கிறார்களென்று அவளே கற்பனை செய்து கொண்டாள். உலகையே மறந்திருந்த சேகர்—வந்த உருவத்தைப்பற்றி கவலைப்படவே யில்லை. எதிர்கால கற்பனையிலே அவன் மூழ்கிக் கிடந்தான். எச்சில் பட்டிருந்த கன்னத்தைத் துடைத்துக் கொண்ட வனஜாவோ டைரியிலே திருமணத் தேதிக்கு நாள் தேடிக் கொண்டிருந்தாள். வெகு நேரத்துக்குப் பிறகு ஏதோ ஒரு தேதியை ஜாக்கெட்டிலே குத்தியிருந்த பேனாவை எடுத்து பச்சை மையினால் குறித்து சேகருக்கும் காட்டினாள். அந்த டைரியை வாங்கி அவள் குறித்துத் தந்ததேதியிலே முத்தமிட்டான். காயாத பச்சை மை சேகரின் உதடெல்லாம் ஒட்டிக்கொண்டது. விழுந்து விழுந்து சிரித்தாள் வனஜா....விபரம் புரியாத சேகரின் கரத்திலே கண்ணாடி வந்து விழுகவுந்தான் அவனுக்கும் விளக்கம் புரிந்தது. அவனும் சிரித்தான் அவளோடு போட்டி போட்டு. வெளியிலிருந்து கிளம்பிய பயங்கர இருமல் சத்தம் அவர்களின் சிரிப்பொலியையே அடக்கிக் காட்டியது.

அடுத்த வாரம் மர்ம உருவத்தைப் பற்றி...

பலப்பல சம்பவங்களை வைத்துப் பல மாதங்களாக 'சுமைதாங்கி' வளர்ந்து வருகிறது. வாசக நண்பர்களுக்கு ஓடிய கதை மறந்திருந்தால்......முன்னர் தந்திருந்த ஓடிய கதையின் டைரியைப் புரட்டுங்கள்...... பழைய நினைவுகள் தெளிவாகும்...புதிய வாசகர்களுக்கும் இதையேதான் கூறுகிறோம்!

மறுமலர்ச்சி மன்றம்

8—5—55 குடியேற்றம் நல்லூர் பேட்டை வட்டார தி. மு. கழக தோழர்கள், தோழர் பெரியசாமி தலைமையில்கூடி கீழ்காணும் தீர்மானத்தை நிறைவேற்றினர்.

'மறுமலர்ச்சி மன்றம்' படிப்பகம் ஒன்று ஏற்படுத்தி நமது இயக்க பத்திரிகைகளை பொதுமக்கள் படிப்பதற்கு உதவுவதென்றும், விரைவில் இயக்க பேச்சாளர் ஒருவரை அழைத்து படிப்பகத்தை திறப்பு விழா நடத்துவதென்றும் ஏகமனதாக தீர்மானித்தனர்.

மன்றத்திற்கு செயலாளர் தோழர் சி. இராசவேலன், துணைச் செயலாளர் க. நெடுமாறன், பொருளாளர் மு. குணசேகரன், விளம்பர உறுப்பினர் அ. நெடுஞ்சேரன், சிர்வாகக்குழு உறுப்பினர்கள் பொன்னுரங்கம், ராசதாசன் கு. மதிவாணன், வ. அன்பழகன், நா இறைஒளி, ஏ. டி. செல்வம், நாகராசன் ப. கோ. இளஞ்சேரன்.

ஆர். லோகநாதன் & பிரதர்ஸ்

[Lorry Goods Booking & Forwarding Agencies]

தலைமை ஆபீஸ் : 26, லாரி ஸ்டாண்ட் ஆனைகவுனி, மதராஸ்-1

பார்சல் ஆபீஸ் : 148, தங்கசாலைத் தெரு, சென்னை-1



மதராஸிலிருந்து சேலம், ஈரோடு, திருப்பூர், கோயம்பத்தூர், பாலக்காடு, மேட்டுப் பாளையம், பொள்ளாச்சி, பழனி, திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், மாயவரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, காரைக்குடி, கரூர், திண்டுக்கல், மதுரை, விருதுநகர், கோயில்பட்டி, தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, ராஜபாளையம், ராமநாதபுரம், சிவகாசி, தேனி, கம்பம், கூடலூர் முதலிய ஊர்களுக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் ஏற்றுமதி செய்கிறோம்.

N. B :—திருச்சூர், கொச்சி, திருவனந்தபுரம், கள்ளிக்கோட்டை, ஆந்திரா ஜில்லா முதலிய ஊர்களுக்கு முழுலோடுகளாக ஏற்றுமதி செய்கிறோம்.

கிளை ஆபீஸ்: 8, கீழ ஆவணி மூலவீதி, பழைய ராயல் ஓட்டல், மதுரை
" 103-1/127 பழனி ரோடு, திண்டுக்கல்
" கல்மண்டபம் சாத்தூர் ரோடு, விருதுநகர்
" வடக்குரதவீதி, திருநெல்வேலி டவுன்

பம்பாய்

மான்கூர்டு தி. மு. கழக புத்தாண்டுத் தேர்தல்

12-5-55 அன்று இரவு எட்டு மணியளவில் பம்பாய் திராவிட முன்னேற்றக் கழக பொதுச்செயலாளர் எஸ். தியாகராசன் தலைமையில் நடைபெற்றது. அப்போது புது ஆண்டு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளராக தோழர் ப. செல்வராசு, துணைச்செயலாளராக தோழர் டி. டி. கே. பாசு, பொருளாளராக தோழர் சி. கோவிந்தசாமி ஆகியோரையும், செயற்குழு உறுப்பினர்களாக தோழர்கள் இராமச்சந்திரன், வி. இராமு, சாமிக்கண்ணு, சோட்டு, மஜீத், வி. நாராயணசாமி, பி. என். நாராயணசாமி, பழனிச்சாமி ஆகியோரையும், பொதுக்குழு உறுப்பினர்களாக தோழர்கள் வி, இராமு, இராமச்சந்திரன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள். தாராவி தி. மு. க துணைச்செயலாளர் தோழர் எஸ். தர்மராசன் அவர்களும் கலந்து கொண்டார்.

*

பொய்சேர்

1-5-55 ஞாயிறு மாலை 6-30 மணிக்கு பொய்சேரில் நடந்த மேதின விழாவின் போது கழக செயலாளர் இராமசாமி தலைமை தாங்கினார்கள், அதுபோது இரா, பொன்னுசாமி கொடியேற்றி வைத்துப் பேசினர். தொடர்ந்து எஸ். எஸ். முத்தையா, கே. எஸ். சுப்பையா, எஸ். ஆர். அதிவீரன், டி. எஸ். அருணசலம், ஆகியோர் மேதினத்தைப்பற்றி விவரித்துப் பேசினார்கள், கழக துணைச் செயலாளர் கே. எல் எஸ். ராஜ நன்றி கூறிய கூட்டம் 6-30 மணிக்கு இனிது முடிந்தது.

*

கொலாபா

[illegible]-5-55 அன்று பம்பாய் கொலாபா தி. மு. க. (கிளையின்) சார்பாக மேதின [illegible] தோழர் கே. கே. இராமநாதன் தலைமையில் 9-30 மணிக்கு கூப்ரேஜ [illegible]ல் கொண்டாடப்பட்டது. அது [illegible] தோழர்கள் எ. எஸ். தாஸ், கே. ராஜூ, க. சு. செகநாதன், [illegible] பி. பெருமாள், கே. கே. இராமன், ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

கடந்த ஆறு ஆண்டு காலமாக பொதுச் செயலாளராக பணியாற்றி [illegible] தி. மு. க.வை நாடு நகரெல்லாம் பட்டிதொட்டி யெல்லாம் பகுத்தறிவுக் கொள்கையை பரப்பி, பகுத்தறிவுப் பாசறையாக ஆக்கித்தந்த அறிஞர் அண்ணா அவர்களுக்கு நன்றி செலுத்தி [illegible] புதியதாக பொதுச்செயலாளராகப் பொறுப்பேற்றிருக்கும் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களை வரவேற்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

*

மாதுங்கா

8—5—55-ம் நாள் மாலை 6 மணிக்கு மாதுங்கா தி. மு. க. வின் செயற்குழுக் கூட்டம் இலாவியா கட்டிடத்தில் செயலாளர் அன்புச்செழியன், ஜோசப் ஆகியோர் முறையே முன், வழி மொழிய இசைக்குயில் தே. சா. நாதன் தலைமையில் ஆரம்பமானது. தே. சா. நாதன் தனக்கே உரித்தான இனிய குரலில் திராவிடப் பண்பாடி எல்லோரையும் மகிழ்வித்தார்.

அடுத்து முன்னாள் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொண்ட கணக்குகளை சரிபார்த்து ஒப்புக்கொள்ளப்பட்டபின் தோழர்கள் யோ. தர்மராசன், பெ. வரதராசன், அன்புச்செழியன், மேதினமும் நாமும் என்பதைப்பற்றி பேசினர்.

அடுத்து கடந்த ஆறு ஆண்டு காலமாக பொதுச்செயலாளராக இருந்து பணியாற்றிவந்த அறிஞர் அண்ணா அவர்களையும், அவருக்கு பக்கத் துணையாகயிருந்த பழைய பொதுக்குழுவைப் பாராட்டியும் தற்போது பொதுச்செயலாளராக வந்திருக்கும் நடமாடும் செந்தமிழ் இரா, நெடுஞ்செழியன் அவர்களை வரவேற்று தீர்மானம் நிறைவேறியது.

செய்திகள்

வடஆற்காடு மாவட்டத்தில் சி. பி. சிற்றரசு-முல்லை சத்தி

வேலூர்

8—5—55 கோட்டை வெளி மைதானத்தில் மாலை 6 மணிக்கு நகர திராவிட முன்னேற்றக் கழகம் மேதின விழாவை ம. பொ, சாரதி எம். சி. தலைமையில் கொண்டாடியது. 20 ஆயிரம் மக்கள் விழாவில் கலந்து கொண்டார்கள். தோழர்கள் சி பி. சிற்றரசு, கண்ணதாசன், முல்லைசத்தி, கருத்தோவியன், இளஞ்செழியன், பாண்டியன், சொற்பொழிவாற்றினர்.

மருதுவல்லிபாளையம்

9—5—55 மாலை 6 மணிக்கு தி. மு. க. துவக்கவிழா ஆரம்பமாகியது. திரு. சி. பி. சிற்றரசு கொடிஏற்றி வைத்தார், திரு முல்லைசத்தி அறிஞர் அண்ணா அவர்கள் படத்தை திறந்துவைத்தார் திரு. கருத்தோவியன் தி.மு. கழகத்தை துவக்கி வைத்தார்.

கண்ணமங்கலம்

9—5—55 தி. மு. க. தோழர்களால் திரு. முல்லைசத்தி அவர்கள் தலைமையில் தூக்குமேடை நாடகம் நடத்தப்பட்டது. போளூர் சுப்பிரமணியம், க. நெடுஞ்சோழன் சீர்திருத்த நாடகங்களை குறித்து சொற்பொழிவு ஆற்றினார்கள்.

சந்தைபுதுப்பாளையம்

10—5—55 திரு. முல்லை சத்தி அவர்கள் தலைமையில் தி. மு; கழகம் மேதின விழாவைக் கொண்டாடியது. திரு. சி. பி. சிற்றரசு, போளூர் சுப்பிரமணியம், நெடுஞ்சோழன், கருத்தோவியன், ஆரணி கன்னையன் மேதின விழாவும் தி. மு. க. வும் என்பதைப் பற்றி சொற்பொழிவு ஆற்றினார்கள். மாலை ஊர்வலம் நடைபெற்றது.

செங்கம்

10—5—55 முல்லைசத்தி அவர்கள் தலைமையில் தி. மு. க. கூட்டம் மாலை 6 மணிக்கு ஆரம்பமாகியது. சி. பி. சிற்றரசு, போளூர் சுப்பிரமணியம், நெடுஞ்சோழன், கருத்தோவியன், சொற்பொழிவாற்றினார்கள்.

வ. ஆ. மாவட்ட செயலாளர் முல்லை சத்தி அவர்கள் இந்த சுற்றுப்பயணத்தை வெற்றிகரமாக நடத்தித் தந்தமைக்கு தோழர்களுக்கு மாவட்ட கழகத்தின் சார்பில் தன் நன்றியை அறிவித்தார்கள்.

சென்னிமலை

தி மு. கழக சார்பில் 14—5—55 மாலை 7 மணிக்கு குமரன் சதுக்கத்தில் மேதின விழாக் கூட்டம் நடைபெற்றது. தாரை வட்ட தி. மு க. பொருளாளரும் கன்னிவாடி ஊராண்மைக் கழகத் தலைவருமான பெரியார் சீரங்கராயர் தலைமை வகித்தார். தோழர்கள் இராவணன், தாரைவட்ட தி. மு. கழக செயலாளர் சின்னமுத்துசாமி, அன்பரசு ஆகியோர் பேசியபின் தோழர் என். வி. நடராசன் அவர்கள் மேதினமும் தி. மு. கழகமும் என்பது குறித்தும் நம் மாநில அரசியல் பொருளாதார நிலை குறித்தும் விரிவுரையாற்றினர். செயலாளர் பாலசுப்பிரமணியம் நன்றிகூற கூட்டம் இனிது முடிவுற்றது.

வெங்கிடங்கால்

23—4—55 சனி மாலை 6-மணிக்கு வெங்கிடங்கால் தி. மு. கழக சார்பில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் பாண்டியன் தலைமையில் தோழர்கள் கே. எஸ். சௌந்தரராசன், என். கிட்டப்பா, கு. அடைக்கலம் ஆகியோர் பேசியபின் இறுதியாக தோழர் என். எஸ். இளங்கோ தற்கால அரசியல் நிலை குறித்து பேசினர்.

முத்துப்பேட்டை

4—5—55 அன்று முத்துப்பேட்டை எ, எஸ். என். திடலில் மேதின விழாக் கூட்டம் நடைபெற்றது. தோழர் ந. தருமலிங்கம் தலைமை வகித்தார். தோழர் இரா. நடராசன் சிறிது நேரம் பேசியபின் சத்தியவாணிமுத்து அம்மையார் விரிவுரையாற்றினார்கள். மாலை 3 மணிக்கு கழக அலுவலகத்திலிருந்து சைக்கிள் ஊர்வலம் புறப்பட்டு நகரின் முக்கிய வீதிகள் வழியாக வந்து எ. எஸ். என். திடலை அடைந்தது.

மருதங்குடி

மருதங்குடி பகுத்தறிவுநிலைய 11வது ஆண்டு விழாவும், ஏழுர்ப்பத்து ஆதிதிராவிட ஐக்கிய சங்க 4-வது ஆண்டு விழாவும், மருதங்குடி காந்தி சதுக்கத்தில் மாலை 6 மணிக்கு தமிழ் நாடு தாழ்த்தப்பட்டோர் நிலமில்லாதார் விவசாய சங்கச் செயலாளர் தோழர் எம். ஆதிமூலம் எம்.சி. (வ. ஆ.) தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் த தா. சம்மேளன பொதுச்செயலாளர் கே. என். சாமி, மைசூர் சமஸ்தான பெடரேஷன் தலைவர் தோழர் ஜே. சி. ஆதிமூலம், ஷெ மன்ற செயலாளர் தோழர் சி. எம். ஆறுமுகம் (திருப்பத்தூர்) தென்மாப்பட்டு செந்தமிழ்ப் பொது நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் சி. முருகையா, தென்கரை பழ அம்பலவாணன், அதிகரம் க. அ. சோலைமலை, ஏ. ஆ. ஐ. சங்கத்தின் வளர்ச்சி குறித்தும் பகுத்தறிவு நிலையத்தின் முன்னேற்றங் குறித்தும் நீண்டதோர் சொற்பொழிவாற்றினார்கள்.

அன்று இரவு 11 மணிக்கு காந்தி சதுக்கத்தில் கே. எம். சாமி தலைமையில் மருதங்குடி பகுத்தறிவு நிலையத்தாரால் தென்கரை ஆ. பெரியசாமி எழுதிய 'நான் கண்ட புதுவாழ்வு' என்னும் சமூக சீர்திருத்தநாடகம் நடைபெற்றது

மதுரை

கோரிப்பாளையம் சிங்காரவேலர் நினைவுப் படிப்பக செயற்குழுக் கூட்டம் 8—5—55 மாலை 6 மணிக்கு படிப்பகத்தில் நடைபெற்றது. அவ்வமயம் செயலாளர் திரு. கிருட்டிணன் தலைமை வகித்தார்.

வருகிற ஜூன் மாதம் முதல் வாரத்தில் படிப்பக மூன்றுவது ஆண்டுவிழா நடத்துவதென்றும் அழகிரி, பன்னீர் செல்வம் ஆகிய தலைவர்களின் உருவப் படங்களை திறந்து வைப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

சு. புதுப்பட்டி

இவ்வூர் தி. மு. க. வின் சார்பில் தோழர் எஸ். அரங்கராசு தலைமையில் 10—5—55-ம் நாள் மேதின விழா நடத்தப்பட்டது. அவ்வமயம் மேதின மும் நாமும் என்ற துண்டுப் பிரசுரம் வழங்கப்பட்டது. இரவு 8-மணிக்கு ஊரின் முக்கிய தெருக்களின் வழியாக ஓர் பெரும் ஊர்வலம் சென்றது. பின் இரவு 9 மணிக்குக் கழகக் கட்டிடத்தில் வந்திருந்தோர்க்கெல்லாம் இனிப்பு வழங்கப்பட்டது.

அய்யம்பேட்டை

4—5—55 புதன் மாலை 6-மணிக்கு அய்யம்பேட்டை தி. மு. கழக சார்பில் கிருஷ்ணா டாக்கீஸ் முன்பு உள்ள திடலில் தோழர் இராமானுசம் தலைமையில் மேதின விழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் அலாவுதீன், இராமச்சந்திரன் பேசியபின் மாயூரம் சௌந்தரராசன் காங்கிரசின் தற்கால அவலநிலை குறித்து பேசியபின் இறுதியாக மாயூரம் என். கிட்டப்பா ஐந்தாண்டுத் திட்ட அவல நிலை குறித்தும் தி. மு. கழக கொள்கைகளை விளக்கியும் பேசினர்.

பொள்ளாச்சி

பொள்ளாச்சி நகர திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மேவிழா சிறப்புற கொண்டாடப்பட்டது, மாலை நான்கு மணிக்கு நகர முக்கிய தெருக்களின் வழியாக சைக்கிள் ஊர்வலம் ஒன்று நடைபெற்றது. மாலை ஏழு மணிக்கு திருவள்ளுவர் திடலில் தோழர் அ, ச. பாலு தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர்கள் பி. என். இராமானுசம், பி. கே. முத்து, க துரைக்கண்ணன் ஆகியோர் சொற்பொழிவாற்றிய பின் திராவிடன் ஆசிரியர் என். வி. நடராசன் அவர்கள் மே விழா பற்றியும், தற்கால அரசியல் நிலை பற்றியும் நீண்டதோர் சொற்பொழிவாற்றினர். கூட்டத்தில் சென்னை அரசியலாரால் நியமிக்கப்பட்ட பஞ்சாலைத் தொழிலாளர் முக்கூட்டு கமிட்டிகளின் சிபாரிசுகளை உடனடியாக அமுல் நடத்தும்படியும், புறம்போக்கு நிலங்களில் குடியிருந்துவரும் ஏழைகளுக்கு அந்தந்த இடங்களைப் பட்டா செய்து கொடுக்கும்படியும் ஐந்து ஆசிரியர்களுக்கு மேல் உள்ள பள்ளிகளில் தலைமையாசிரியர் பதவிக்கு, செகண்டரி கிரேடு ஆசிரியர்களை நியமிக்கும்படியும் நகராட்சி மன்றத்திலுள்ள ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களை அவர்கள் வசித்து வரும் பகுதிகளில் உள்ள பள்ளிகளுக்கே மாற்ற வேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. தோழர் என். வி. என். அவர்களுக்கு சூளேஸ்வரன்பட்டி, குள்ளக்காபாளையம், தி.மு. கழகங்களின் சார்பாகவும் மற்றும் பல தோழர்கள் சார்பாகவும், பொள்ளாச்சி சலவைத் தொழிலாளர் வாலிபர் சங்கம் பீடித் தொழிலாளர் ஆகியோரால் மலர் மாலைகளும் கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன.

அறந்தாங்கி

8—5—55 ஞாயிறன்று மேதினம் கொண்டாடும் பொருட்டு ஆர். அசோகன் தலைமையில் மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு வ. உ. சி. திடலை வந்தடைந்ததோடு கொடியேற்றுவிழாவும் நடைபெற்றது.

மஜீத் மன்றம்

மாயூரம் தலைமை அஞ்சல் அலுவலகத்திற்கு அருகில் உள்ள தோழர் ஆர். இராமதுரை சைக்கிள் கம்பெனியில் 8—5—55 ஞாயிறு காலை 10 மணியளவில் செல்லிக்குப்பம் மஜீத் மன்றத்தின் அமைப்புக் கூட்டம் நகர தி. மு, கழக செயலாளர் தோழர் என். கிட்டப்பா தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் மா. கி. இராமசாமி, வி. சங்கையன், எஸ். மீனாட்சிசுந்தரம், கே. எஸ். சௌந்தரராசன் ஆகியோர் மன்றத்தின் அவசியம் குறித்து பேசியபின் கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. செயலாளர் ஆர். இராமதுரை, துணைச்செயலாளர் மா. கி. இராமசாமி, பொருளாளர் பண்டரிநாதன் ஏனைய செயற்குழுவினர் 8 பேர்கள்.

*

8—5—55 ஞாயிறு மாலை 4 மணிக்கு கூறைநாடு நடராசவிலாஸ் ரைஸ்மில்லில் தோழர் எஸ், என். குருமூர்த்தி தலைமையில் பொதுக்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட தோழர் என். கிட்டப்பா அவர்களை பாராட்டுமுகத்தான் நடைபெற்ற கூட்டத்தில் சி. ஐம்பு, எஸ். கே. ஆனந்தன், வி. ஏ. பாண்டியன், ஆர். ராமானுசம், எம், சி. ஆகியோர் பேசினர். கூட்டத் துவக்கத்தில் தேநீர் விருந்து அளிக்கப்பட்டது.

பாரதிதாசன் இளைஞர் கழகம்

16—5—55 காலை 9-30 மணிக்கு கழக நிர்வாகிகள் தேர்தல் சிவஞானம் பூங்காவில் நடைபெற்றது.

தலைவர் த.சி. நந்தம், செயலாளர் பூ. கபாலீஸ்வரன், துணைச் செயலாளர் என். பூ. உமாபதி. பொருளாளர் சேதிநிலவழகன், பொருப்பாளர்ஏ.வி.ஆசைத்தம்பி, எனவும் சட்டதிட்டத்தில் சில திருத்தமும் வாரந்தோறும் புதனன்று மாலை சொற்பயிற்சியும் நினைவு நாட்கள் கூட்டமும் நடத்த வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது.

திறந்தமடல்—

ஆட்டம் என்ன சொல்வேன்?

திரு. ஆச்சாரியார் அவர்கள், சென்னை

முன்னாள் முதலமைச்சரே, வணக்கம். நலம் வேண்டுகிறேன். தங்களின் 'ராம பஜனை சீஸன்' எப்படியிருக்கிறது. ஏனென்னில் சில நாட்களாக தங்களுக்குச் சம்பந்தமில்லாத பிரச்னைகளில், அதுவும் பிரச்னையில் சம்பந்தப்பட்டவர்கள் தங்களின் உதவியையோ யோசனையையோ கேட்காதிருக்கும் பொழுதே முந்திரிக்கொட்டை போல முன்வந்து மூக்குடைபடுவதாகப் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன.

பாண்டுங் மாநாட்டில் கலந்துகொண்ட இலங்கைப் பிரதமர் சர். கொத்தலாவலை அம்மாநாட்டில் அமெரிக்க நாட்டிற்கு வக்காலத்து வாங்கிப் பேசியதைப்பற்றி, பத்திரிகை நிருபர்கள் தங்களைத் தேடிவந்து அபிப்ராயம் கேட்டார்களா — இல்லையே! அவ்வாறிருக்கத் தாங்களாகவே முழுநீளம் அறிக்கை விடுத்து சர் கொத்தலாவலையின் போக்கைக் கண்டிக்கும் பெயரால் அவரை 'கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி' என்று வசைமாரி பொழிந்தீர். அந்தப் பொல்லாத மனிதராவது ஏதோ தொலையட்டும் என்று சும்மாயிருந்தாரா? ஆச்சாரியார் ஒருகிழடு ஏதோ உளறுகிறார்—அந்தப் பேச்சை நான் பொருட்படுத்த வேண்டிய அவசியமேயில்லை யென்று பதில் அறிக்கையின் மூலம் உங்கள் 'மூக்கையே' உடைத்து விட்டார்.

அதற்குப்பின் தாங்களும் அவரிடம் 'சாஷ்டாங்கமான மன்னிப்பு' கோரி முணுமுணுப்பான அறிக்கை வெளியிட்டீர்கள். தங்களுக்கும் எனக்கும் அரசியல் துறையிலே கருத்து வேறுபாடிருப்பினும் திராவிட நாட்டைச் சார்ந்த ஒரு அரசியல் கட்சித் தலைவர் சர். கொத்தலாவலை போன்றவர்களிடம் இவ்வாறு 'சாஷ்டாங்க மன்னிப்பு' கேட்பது உண்மையிலேயே வருத்தமாகத்தானிருக்கிறது.

ஆச்சாரியார் அவர்களே! நான் கேட்பதற்காக கோபித்துக் கொள்ளக் கூடாது. பாண்டுங் மாநாட்டுக்கும் தங்களின் தற்கால அரசியல் 'பொறுப்பு'க்கும் ஏதாவது தொடர்பு இருக்கிறதா? அம்மாநாட்டில் தாங்கள் இந்தியாவின் சார்பாகக் கலந்துகொண்டீர்களா? அல்லது அம்மாநாட்டில் கலந்துகொண்ட இந்தியப் பிரதிநிதிகளுக்கு கொத்தலாவலையின் போக்கு எத்தன்மையது என்று புரியாமல் உங்களை விளக்கங் கேட்டார்களா? இல்லையே. பின் எதற்காக இவ்விதம் வம்பை விலைக்கு வாங்கும் வேலையை மேற்கொண்டிருக்கிறீர்கள். வீட்டில் உள்ள சில கிழங்கள் சற்றும் பயனில்லாத தொணதொணப்பில் ஈடுபட்டு மற்றவர்களின் உயிரையும் வாங்குமே அதுபோல அரசியல் துறையில் தாங்கள் வீண் தொணதொணப்பில் ஈடுபட்டுவிட்டீர்களே. பரிதாபம்—பரிதாபம். தாங்கள்நம்பியுள்ள தசரத ராமனாவது உங்களுக்கு முன்வழி காட்டக் கூடாதா?

அடுத்தபடியாக — அணுகுண்டு பிரச்னையிலும் நீங்கள் அழைப்பில்லாத "பெரிய மனுஷாள்" மாடலில் ஈடுபட்டு குளறுபடி செய்து வருகிறீர்கள். "அணுகுண்டுவை அமெரிக்கா கடலில் எறிந்து அறவே அழிக்க முன்வராவிட்டால், அமெரிக்காவிடமிருந்து எவ்வித உதவியையும் இந்தியா பெறக் கூடாது" என்று முகாரி பாட ஆரம்பித்திருக்கிறீர்கள்! இப்பிரச்னையிலும், உங்களின் அபார யோசனையை இந்திய சர்க்காரோ அல்லது மற்ற நாட்டினரோ கேட்டார்களில்லை. இந்நிலையில் இந்த அனைத்துலகப் பிரச்னையில் தாங்கள் ஏன் வம்புப் பேச்சு பேசவேண்டும் என்று கேட்கிறேன்.

இந்திய அரசியலார் தங்களின் வெளிநாட்டுக் கொள்கையில் நடுநிலைமை வகிப்பதாக அதாவது மதில்மேல் 'பூனைபோன்ற' கதையாக இருந்து வருகின்றனர். இதனைப் பலமுறை நேரு பண்டிதர் அவர்களே வெளிப்படையாகக் கூறியிருக்கிறார். அது மட்டுமல்லாமல் ரஷ்யாவோ—அமெரிக்காவோ—அல்லது பிரிட்டனோ அளிக்கும் நிதி உதவியைப் புறக்கணித்துவிட்டு இந்தியா தானாகவே முன்னேறும் சூழ்நிலை இன்னும் அமையவில்லையென்று இந்திய நிதி அமைச்சர் தேஷ்முக் அவர்கள் மிக நாசுக்காக— தாங்கள் தெளிவு பெறும் வண்ணம் பதில் கூறியிருக்கிறார். அதற்குப் பின்னருங்கூட அணுகுண்டு வேதாந்தத்தைத் தாங்கள் உபதேசிப்பது ஒழுங்குதானாவென்று கேட்கிறேன்.

இப்படி யான் கூறுவதால் அமெரிக்காவுக்கு வக்காலத்து வாங்கிப் பேசுவதாகக் கருத வேண்டாம். இன்னும் சொல்லப் போனால் தாங்கள்தான் சில நாட்களுக்கு



முன்புவரைகூட அமெரிக்காவுக்குத் தாளம் போட்டு வந்தீர்கள் என்பதை நாடே அறியும்.

எனவே நான் தங்களுக்கு எடுத்துக் காட்டுவது யாதெனில், எந்தப் பிரச்னையை யார் பேச வேண்டுமோ, யார் அந்தப் பொறுப்பிலிருக்கிறார்களோ அவர்கள் பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழனாகயிருக்கும்போது, தாங்கள் வலிய சென்று அபிப்ராயம் கூறுவது அரசியல் துறையில் எதிர்பார்க்கக்கூடிய சாதாரண பண்புக்காவது ஒத்துவருகிறதா என்பதைச் சிந்திக்க வேண்டுகிறேன்.

தாங்கள் கூறிய கருத்தை இந்தியப் பிரதமர் நேரு பண்டிதா கூறியிருந்தால் அதில் அர்த்தமிருக்கிறது. அல்லது ஐ. நா. சபையில் இந்திய சர்க்கார் சாபில் பங்கு கொண்டு பணியாற்றி வரும் வி. கே. கிருஷ்ணமேனன், டாக்டர் எ. ராமசாமி, விஜயலட்சுமி பண்டிட், போன்றவர்கள் கூறினும் பொருத்தமுண்டு. ஆனால் அவர்கள் அத்தனை பேரும் வெளிநாட்டுப்பிரச்னைகளில் இந்திய அரசியலாரின் போக்கினைத் திட்டவட்டமாகத் தெரிந்த அனுபவம்.— அரசியல் யூகம் ஆகியவைகளின் காரணமாக வெத்து வேட்டுகளைக் கிளப்பி குட்டையைக் குழப்பும் பேச்சுக்களில் இறங்குவதில்லை, தாங்களோ அச்செயல்களில் தங்களின் அசகாய சூரத்தனத்தைக் காட்டுகிறீர்கள்!

இத்தகைய பேச்சுக்களினால் வெளிநாட்டு அரசியல் தலைவர்கள் தங்களை எவ்வாறு எண்ணுகிறார்கள் என்பதைப்பற்றிக் கவலையில்லை யென்றாலும், இந்திய அரசியலில் யார் எதை வேண்டுமானாலும் எப் பேர்ப்பட்ட அபத்தப் பேச்சை வேண்டுமானாலும் அள்ளி வீசலாம் என்ற ஒழுங்கற்ற போக்கு மலிந்திருக்கிறது என்பதை கவனிக்கும்போது தாங்களே போற்றித் துதிக்கும் நேரு சர்க்காரை எவ்வாறு மதிப்பார்கள் என்பதையும் தாங்கள் சிந்திக்க வேண்டுகிறேன். அல்லது உண்மையிலே இப்பிரச்னையில் தங்களின் எண்ணத்தை வற்புறுத்துவதானால், இறுதிவரை இதற்காகப் போராடுவீர்களா? இதுவரை தங்களின் அரசியல் நடவடிக்கைகளைக் கவனிக்கும் போது, யதேச்சாதிகாரமாக ஒரு கருத்தையோ அல்லது திட்டத்தையோ திணிப்பதும் பிறகு குனிந்து கொடுப்பதுவுமே உங்களுக்கு தனி "ரிகார்டாக" யிருந்து வருகிறது.

தங்களுக்குச் சம்பந்தமுள்ள பிரச்னைகளிலேயே இந்த அழகு என்றால் தொடர்பில்லாத பிரச்னைகளில் தங்களின் சாதனை எந்த லட்சணத்தில் இருக்கும் என்று விவரிக்க வேண்டிய அவசியமில்லையல்லவா?

மூன்றாவதாக, க்ஷயரோக தடுப்பு வேலை குறித்தும் அவசர ஆரூடம் கணித்திருக்கிறீர்கள். பி. ஸி. ஜி. ஊசி போடுவதற்கான தீவிர முயற்சியைக் கண்டித்து தாங்கள் பேசிய பேச்சுக்கு அதே கூட்டத்திலேயே சென்னை சுகாதார அமைச்சர் பி. ஷெட்டி அவர்களும், பிரபல மருத்து நிபுணர்களான முன்னாள் அமைச்சர் கிருஷ்ணராவ், கே. எஸ். சஞ்சீவி ஆகியோரும் தங்கள் வாதத்தை மறுத்து க்ஷயரோக வியாதி தடுப்பு ஊசியின் அவசியத்தை வலியுறுத்திப் பேசியிருக்கின்றனர்.

க்ஷயரோக தடுப்பு அலுவலக அதிகாரிகளோ அல்லது அரசியலாரோ இதுகுறித்து அபிப்பிராயம் கேட்டனரா — இல்லை. மருத்துவத் துறையில் உங்களுக்கு அனுபவத் திறமை ஏதேனுமுண்டா? பின் எதற்காக இப்படி தண்ணீர்ப்பந்தல் வக்கீல்களைப் போல தொல்லை கொடுக்கிறீர்கள்.

இந்தியத் துணைக்கண்டத்திலேயே தென்னாட்டவர்கள்தான் உலக நாடுகளே வியக்கத்தக்க அரசியல் மேதைகளாய் விளங்குகின்றனர் என்பதை அனைத்துலக அரசியல் மன்றமும் அதற்குத் தொடர்பான நடவடிக்கைகளும் எடுத்துக்காட்டி வருகின்றன. இந்நிலையில் அப்புகழுக்குக் களங்கம் உண்டாக்குவது போல — அதாவது சோளக்கொல்லை பொம்மை போலக் காட்சியளிக்க தாங்கள்தானா முன்வர வேண்டும்? அல்லது இவ்வாறு தாங்கள் பரிதாபச் சிந்துபாடுவதில் ஏதாவது உள் எண்ணம் இருக்க முடியுமோ!

அடுத்து பொதுத்தேர்தல் வருவதற்குள் மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போடும் கூத்துகளை நடத்தி வந்தால் இந்தக் கண்றாவிக் கூத்துகளைச் சகிக்க முடியாமல் வடநாட்டு ஆதிக்கக்காரர்கள் தங்களுக்கு ஜனாதிபதி பதவியோ அல்லது வேறு ஏதாவது பெரிய உத்தியோகமோ கொடுத்துத் தொலைப்பார்கள் என்ற எண்ணமா? என்று கேட்கிறேன்.

உருப்படக்கூடிய காரியங்கள், குறிப்பாக தென்னாட்டு மக்களின் தேய்ந்துவரும் வாழ்வை ஒழுங்குபடுத்தக்கூடிய பிரச்னை

11-ம் பக்கம்

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர், என். வி. நடராசன், சோழு அச்சகம் 16, ரிலேயன்ஸ் ரைஸ் மில் தெரு, சென்னை-1.